பக்கங்கள்: பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 18 வெள்ளிக்கிழமை (01.05.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 156

# இலங்கை விவகாரம் ஐ.நாவில் விவாதிக்கப்படுவது மிக அவசியம்

## இங்கு வந்த கையோடு பிரி. அமைச்சர் வலியுறுத்து



கொழும்பு, மே 01

''ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் இலங்கை விவகாரம் குறித்து விவாதிக்கப்படுவது மிகவும் அவசியம். அதற்கு பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் மிக உறுதியாக வலியுறுத்தும்.'' - இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட்.

நேற்றுமுன்தினம் இலங்கைக்கு விஜயம் செய்து வவுனியாவிலுள்ள அகதி முகாம்களைப் பார்வையிட்டதுடன் அரச உயர் மட்டத்தினருடன் பேச்சு நடத்திவிட்டு திரும்பிய கையோடு பிரிட்டிஷ் அமைச்சர் இந்தக் கருத்தை வலியுறுத்திக் கூறியிருக்கின்றமை மிகவும் முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. (15 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை நாளை இடம்பெறும்

யாழ்ப்பாணம், ஏப்.1

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை நாளை சனிக்கிழமை இடம்பெறவிருக்கின்றது.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் ஏப்ரல் மாத 8 ஆவது கப்பலிற்கான அனுமதிச் சீட்டினை பெற்றுக்கொண்டவர்களும் அவசர தேவையின் நிமித்தம் செல்ல இருப்பவர்களும் நாளை காலை [illegible] மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு சமுகமளிக்குமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (1-9)

# நாம் ஒருபோதும் போர் நிறுத்தம் செய்யப்போவதில்லை; ஐ.நா.பணியாளர்களை அனுமதிக்கப் போவதுமில்லை!

## பிரிட்டிஷ், பிரெஞ்சு அமைச்சர்களுடன் கோத்தபாய காரசாரம்



கொழும்பு, மே1

போர் நிறுத்தம் ஒன்றை நாம் செய்துகொள்ளப்போவதில்லை. போர் நடைபெறும் பகுதிகளுக்கு ஐ.நாவின் மனிதாபிமானப் பணியாளர்களை அனுமதிக்கப்போவதுமில்லை.

-இவ்வாறு திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ.

கடந்த புதன்கிழமை கொழும்பில் பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சருடனும், பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சருடனும் இலங்கை வெளிவிவகார அமைச்சில் தனித்தனியாக நடத்திய பேச்சுகளின்போதே கோத்தபாய ராஜபக்ஷ இதனைத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அவர்கள் பகிர்ந்து கொண்ட விடயங்கள் வருமாறு:-

முப்பது வருட காலத்துக்குப் பின்னர் பிரபாகரனையும், ஏனைய புலிகளின் தலைவர்களையும் உயிருடனோ அல்லது சடலங்களாகவோ கைப்பற்றுவதற்கான தருணம் வந்திருக்கின்றது. அதுவரையில் போரை அரசு நிறுத்தப் போவதில்லை என கோத்தபாய தெரிவித்தார்.

இதன்போது பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட், போர் நிறுத்தம் ஒன்றை அரசு அறிவிக்க வேண்டும் எனவும், ஐ.நாவின். பணியாளர்கள் போர்ப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களின் தேவைகளைக்





(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் ஜனநாயகத்தை ஏற்படுத்த சர்வதேசம் தலையிட்டே ஆகவேண்டும்!

### ஐ.தே.கட்சியின் நிலைப்பாடு இது

கொழும்பு, மே 1

இலங்கையில் ஜனநாயகத்தை ஏற்படுத்துவதற்காக சர்வதேச நாடுகள் இலங்கை விவகாரங்களில் தலையிட்டே ஆகவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கை அரசால் சர்வதேச நாடுகளிடம் நிதியுதவி கேட்க முடியுமென்றால் ஏன் அந்நாடுகள் இலங்கை விடயத்தில் தலையிடவோ அல்லது கருத்துத் தெரிவிக்கவோ முடியாது என்றும் அக்கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

## உலக ராஜதந்திரிகளின் தூரநோக்கற்ற பார்வை சர்வதேச மட்டத்தில் துக்ககரமான விளைவுகளைத் தரும்!

### ஜனாதிபதி மஹிந்த எச்சரிக்கிறார்

கொழும்பு, மே1

சர்வதேச இராஜதந்திரிகளின் தூரநோக்கற்ற பார்வை அனைத்துலக மட்டத்தில் துக்ககரமான - விசனகரமான - சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என்று எச்சரிக்கிறேன்.

இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடுந்தொனியில் கூறியிருக்கிறார்.

எம்பிலிப்பிட்டியவில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

உலகில் உள்ள அனைத்துத் தொலைக்காட்சிச் சேவைகளும் இப்போது எமது நாட்டின் மீதே கவனத்தைத் திருப்பியுள்ளன. செய்மதி தொழில்நுட்பத்தின் உதவியுடன் வன்னி நிலைமைகளை உலகம் முழுவதும் பார்க்கக்கூடியதாகவிருக்கின்றது. இதனைப் பார்ப்பதற்கு சிறப்பு அவதானிகளை அனுப்பிவைக்க வேண்டிய தேவை என்ன இருக்கின்றது? இதனை ஆராய்வதற்கு சிறப்புப் பிரதிநிதிகள் எதற்காக? உலகம் முழுவதற்குமே அங்கு என்ன நடைபெறுகின்றது என்பது தெரியும். (16 ஆம் பக்கம் பார்க்க)



ஜப்பான் சைனா கூட்டுத்தயாரிப்புகள் விற்பனையில்



ஜப்பான் சைனா கூட்டுத் தயாரிப்பான Ceygra-110 CC Self Start 99,000/=

Free யக்கற், ஹெல்மற்றுடன்
1 வருடம் / 10,000 கி.மீ வரை
உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.



ஜப்பான் சைனா கூட்டுத் தயாரிப்பான Custom -90 Self Start 99,000/=

ஏக விநியோகஸ்தர்:
யசோ மோட்டோர்ஸ்
இல. 163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

© Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# உலக ஊடக சுதந்திர தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் ஞாயிறன்று

யாழ்ப்பாணம், மே 1

வட- இலங்கை பத்திரிகையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச ஊடக சுதந்திரதினத்தை ஒட்டிய நிகழ்வுகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் நடைபெறவுள்ளன.

சங்கத்தின் தலைவர் எஸ்.கதிர்காமத்தம்பி தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சங்கத்திற்கான புதிய அலுவலகக் கட்டடம் திறந்து வைக்கப்படும்.

ஊடகத் துறைக்கென உயிர் கொடுத்த மூத்த மற்றும் இளம் ஊடகவியலாளர்களின் திருவுருவப் படங்களை 'ஈழநாடு' முன்னாள் ஆசிரியர் எஸ்.பெருமாள் திறந்து வைப்பார்.

மூத்த புகைப்படத்துறை ஊடகவியலாளர் எஸ். கதிரவேலு கௌரவிக்கப்படவுள்ளார். அவரை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை கௌரவிக் கவுள்ளார்.

சர்வதேச ஊடக சுதந்திர தினத்தை ஒட்டி நடத்தப்பட்ட ஊடக அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் விழாவில் வழங்கப்படும். (அ-1)

## மரண அறிவித்தல்

### மயில்வாகனம் பேரின்பநாதன் (சோதி)

(உரிமையாளர், நாதன் றேடர்ஸ், நல்லூர்)



வேலணை, 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர், செட்டித் தெருவை வதிவிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பேரின்பநாதன் நேற்று (30.04.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வனும் காலஞ்சென்ற திருநாவுக்கரசு மற்றும் மகேஸ்வரி ஆகியோரின் மருமகனும் விமலாவின் அன்புக் கணவரும் துவாரகா (VCAS CITY CAMPUS), அனுத்தமன் (கண்ணா), கஜானன் (மாணவன், யாழ்.இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேலாயுதநாதன், சிவகலை, ஞானகலை ஆகியோரின் அன்புச் சகோதரரும் சாந்தலட்சுமி, சந்திரசேகரம், மகேந்திரன், விவேகானந்தராஜா, பரமேஸ்வரி, புஸ்பராணி, ரஞ்சனாதேவி, மனோரஞ்சிதம், பாஸ்கரன், குகனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் கமலாம்பிகை, ராஜதுரை, நடராஜா, செல்வரத்தினம், சிவலோகநாதன், சுமதி, வில்வராஜா ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*74/1, செட்டித் தெரு,*
*நல்லூர்.* T.P. 021 222 7038

தகவல்:
குடும்பத்தினர்.

# புதிய ஜனநாயகக் கட்சியின் மே தின நிகழ்வு புத்தூரில்

யாழ்ப்பாணம், மே 1

புதிய ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில் மே தின நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புத்தூர் மேற்கு கலைமதி மக்கள் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புதிய ஜனநாயகக் கட்சியின் வட பிரதேச செயாளர் கா.கதிர்காமநாதன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மேற்படி கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழகத் தலைவர் கு.மகாதேவன், கலைமீதி முன்பள்ளி ஆசிரியர் திருமதி உ.லதா ஆகியோர் உரையாற்றவுள்ளனர். (204)


BARATHY

சித்தன்கேணி

A/L 2011 கலை, வர்த்தகப்பிரிவு

மீண்டும் புதிய பிரிவுகள்

நாளை ஆரம்பம்:- (02.05.2009) சனி

நீங்கள் நன்கு அறிந்த பொருளியற் கல்லூரி ஆசிரியர்களுடன் மற்றும் பிரபல ஆசிரியர்கள் இணைந்து கற்பிக்கின்றார்கள்.

Note:- புதிய வகுப்புக்கள் ஆரம்பிப்பதனால் உங்கள் அனுமதிகளைத் தாமதியாது உடன் பெற்றுக்கொள்ளவும்.


# பேக்கரி உரிமையாளர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

யாழ்ப்பாணம், மே1

நிறை குறைந்த பாண் உற்பத்தி செய்த பேக்கரி உரிமையாளர் மீது நிறுவை அளவைத் திணைக்களத்தினரால் சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.


சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள பேக்கரி உரிமையாளர் மீதே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

வழக்கு எதிர்வரும் 22ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும் என அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (1-207)

## மரண அறிவித்தல்

### ஐயாத்துரை சொக்கையா (சொக்கர்)

(புகையிரத நிலைய ஊழியர்)



சுன்னாகம், கடவப்புலத்தைப் பிறப்பிடமாகவும், சுன்னாகம் தெற்கு, திணைக்கலட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயாத்துரை சொக்கையா 29.04.2009 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - ஆச்சிமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் சரோஜினி தேவியின் அன்புக் கணவரும், கம்சினி (சுவிஸ்), ரவிசங்கர், கஜேந்தினி (லண்டன்), கர்சினி (1ஆம் ஆண்டு மாணவி, விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுதாகரன் (சுவிஸ்), சயந்தினி, சந்திரகாந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், லிசான், தனூசன் (சுவிஸ்), ரிசிக்காந், மதுசன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2009) வெள்ளிக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*திணைக்கலட்டி,*
*சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.*

தகவல்:
குடும்பத்தினர்.

## வலயக் கல்வி அலுவலகம் - தென்மராட்சி

## கேள்வி அறிவித்தல் - 2009

1. இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசு உலக வங்கியிடமிருந்து கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கென செலவுக்கான மானியத்தினைப் பெற்றுள்ளது. அதன் ஒரு பகுதியை ''கற்கைத் தாரகை'' (Learning Star) ''அறிவுக் கோபுரம்'' (Tower of Knowledge) ஆகிய கட்டுமான நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கான நிர்மாண வேலை ஒப்பந்தத்திற்கான கொடுப்பனவுகளுக்காகப் பெற்றுள்ளது. அந்நிதி ஒதுக்கீட்டில் இருந்து பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.
2. ஒப்பந்தக்காரர் இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகம் உள்ளவராகவும், பதிவுப் புத்தகம் 2009 ஆம் ஆண்டு புதுப்பிக்கப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
3. கேள்விப்பத்திரங்கள் 2009.05.04 ஆம் திகதி தொடக்கம் 2009.05.11 ஆம் திகதி பி.ப. 2 மணி வரை வழங்கப்படும். கேள்விகள் யாவும் எம்மால் 2009.05.14 ஆம் திகதி மு.ப. 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினமே எமது அலுவலகத்தில் மு.ப. 11 மணிக்கு கேள்விப்பத்திரப்பெட்டி திறக்கப்படும்.
4. கேள்விப்பத்திரங்களுக்கான மீளளிக்கக் கூடிய மற்றும் மீளளிக்க முடியாத வைப்புப் பணத்தை தென்மராட்சிக் கல்வி வலயக் கணக்குப் பகுதியில் செலுத்துவதன் பேரில் கேள்விப்பத்திரப் படிவங்களை தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக பாடசாலை வேலைகள் பகுதியில் பெற்றுக்கொள்ளவும்.
5. இல.04 இல் இருந்து 10 வரையான வேலைகளில் பாடசாலை அபிவிருத்திச்சங்கம் கேள்விப்படிவக் கட்டணம் மற்றும் பாதுகாப்பு வைப்புப்பணம் இன்றி பங்கெடுக்கமுடியும்.

| இல. | பாடசாலையின் பெயரும் வேலை விவரமும். | மீளளிக்க முடியாத வைப்புப் பணம் | மீளிக்க கூடிய வைப்புப் பணம் | இக்ராட் இலக்கம் |
|---|---|---|---|---|
| 01. | யா/நாவற்குழி ம.வி. O/L விஞ்ஞான ஆய்வுகூடம் | 750.00 | 22,400/= | M 7/C8 |
| 02. | யா/மிருசுவில் அ.த.க.பாடசாலை தற்காலிக வகுப்பறை நிர்மாணம் | 500.00 | 4,500/= | M 9/C9 |
| 03. | யா/மட்டுவில் சாந்தநாயகி வித்தி. நிர்மாண வகுப்பறை மீதி வேலை | 500.00 | 3,500/= | M 9/C9 |
| 04. | யா/மந்துவில் றோ.க.த.க. பாடசாலை வகுப்பறை கட்டட விறாந்தை திருத்தம் | 250.00 | 1,000/= | M 9/C9 |
| 05. | யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி. பாடசாலைக் கட்டட திருத்தம் | 250.00 | 1,000/= | M 9/C9 |
| 06. | யா/கைதடி கலைவாணி வித்தி. பாடசாலைக் கட்டடத் திருத்தம் | 250.00 | 1,850/= | M 9/C9 |
| 07. | யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்தா வித்தி. வகுப்பறையை கணனி அறையாக மாற்றி அமைத்தல் | 250.00 | 700/= | M 9/C9 |
| 08. | யா/குடமியன் அ.த.க.பாடசாலை வகுப்பறையை கணனி அறையாக மாற்றி அமைத்தல் | 250.00 | 700/= | M 9/C9 |
| 09. | யா/வரணி ம.வி. செயற்பாட்டறை, ஒன்றுகூடல் மண்டபத் திருத்தங்கள் | 250.00 | 1,200/= | M 9/C9 |
| 10. | யா/இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி. பாடசாலைக் கட்டட திருத்தம் | 250.00 | 800/= | M 9/C9 |

6. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் எம்மால் வழங்கப்படும் இரண்டு கட்டட மதிப்பீட்டு அறிக்கைப் பத்திரங்களில் ஒன்றை மூலப்பிரதியாகவும் மற்றையதை பிரதியாகவும் கொள்ள வேண்டும்.
7. விண்ணப்பங்கள் யாவும் இரு பிரதிகளில் பூர்த்தி செய்து மூலப் பிரதியும், எம்மால் வழங்கப்படும் ஒப்பந்த நிபந்தனைப் படிவமும் கையொப்பம், இறப்பர் முத்திரை என்பன இடப்பட்டு அவற்றினையும் கேள்விப் பத்திர இணைப் பிரதியினையும் தனித்தனி இரு கடித உறைகளில் இட்டு கடித உறையில் இடப்புற மேற்பக்கத்தில் வேலையின் விவரம் எழுதப்படல் வேண்டும். தனித்தனியே கடித உறைகளில் போடப்பட்ட இரு பிரதிகளையும் பிறிதொரு கடித உறையிலிட்டு ஒட்டப்பட்டு ஒப்பந்தகாரரின் முத்திரை இடப்பட்டு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் 2009 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி மு.ப. 11 மணிக்கு முன்னர் இடப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட காலநேரத்திற்குப் பிந்திய கேள்விப் பத்திரங்கள் எக்காரணங் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. அன்றைய தினம் எமது அலுவலகத்தில் மு.ப. 11.30 மணிக்கு கேள்விப் பத்திரப் பெட்டி திறக்கப்படும்.

பாடசாலை வேலைகள் கிளை,
வலயக் கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி.

சு.பிறேமகாந்தன், வலயக் கல்விப் பணிப்பாளர், தென்மராட்சி.

## பொதுச் சபைக் கூட்டம்

## தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

மேற்படி சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 2009/05/10ம் திகதி நடைபெறவுள்ளது. கிளை பொதுச் சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய உறுப்பினர்கள் அனைவருக்கும் தனித்தனியான அழைப்புக் கடிதங்கள் அவர்களின் அங்கத்துவ விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்ட நிரந்தர விலாசத்திற்கு தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள் தமக்குரிய அழைப்புக் கடிதங்களை நிரந்தர தபாலகங்கள் மூலமாகப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

செயலாளர்,
தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
தெல்லிப்பழை.


எமது நிறுவனத்தின் மற்றுமோர் சேவை

April 27 முதல் மணமக்கள் சங்கமமாகும்



"கெட்டி மேளம்" திருமண சேவை

Keddy Melam Wedding Service

(நிறுவன மயப்படுத்தப்பட்ட நம்பகரமான துரித சேவை)

உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை விரைவாகவும் விரும்பியபடியும் இனிதே நிறைவேற்றிக் கொள்ளவும் அந் நிகழ்வுகளை சிறந்த முறையில் படம் பிடித்திடவும் (Video & Photo)

எமது நிறுவனத்தில் அடையாள அட்டை, பாஸ்போட் புகைப் படங்களை படம் பிடித்து உடனுக்குடன் பெற்றுக்கொள்ள 80/= மட்டுமே

மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லெப்

62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

E.Mail: moorthydigital@gmail.com



பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

(இரு இடத்திலும்)

மீண்டும் புதிய பிரிவுகள்

A/L 2011 கலை, வர்த்தகப் பிரிவுகள்

நாளை ஆரம்பம்:- (02.05.2009) சனி

யாழ்.நகரில்:- வர்த்தகப்பிரிவு - 9 A.M
கலைப்பிரிவு - 8 A.M

இணுவில்:- கலைப்பிரிவு - 8 A.M
வர்த்தகப்பிரிவு - 2 P.M

உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# வினாச காலம் நெருங்குகையில் விபரீத புத்தி தானே தேடிவரும்

'கெடுவான் கேடு நினைப்பான்' - என்று கூறுவார்கள்.

'விநாச காலே விபரீத புத்தி' - என்ற பேச்சு வழக்கும் கூட நம்மத்தியில் உண்டு.

அழிவுகாலம் நெருங்கி விட்டால் மதி கண்ணை மறைக்கும். எதைச் செய்யவேண்டும், எதைச் செய்யக் கூடாது என்ற புரிதல்களை எல்லாம் அறிவில் தெளிய விடாமல் செய்து விடுமாம் அந்தக் கெட்டகாலம்.

இலங்கை இனப்பிரச்சினையை ஒட்டி யுத்தம் கோர வடிவெடுத்து, அப்பாவிப் பொதுமக்களின் பேரழிவுக்கு வழி செய்துள்ள பின்னணியில், அதைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வதேசம் எடுத்த முயற்சிகள் அனைத்தும் 'விழலுக்கு இறைத்த நீராக' - 'புறக்குடத்து நீராக' - 'செவிடன் காதில் ஊதிய சங்காக' வீணாகின.

வன்னியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் நிலை தொடர்பான சர்வதேச சமூகத்தின் கவலை அதிகரித்துள்ளமையைத் தொடர்ந்து இங்கு யுத்தநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளச் செய்யும் நோக்குடன், அதற்காக இலங்கை அரசை வலியுறுத்துவதற்கென கொழும்புக்கு வந்த பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட், பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர் பேர்னாட் கௌச்னர் ஆகியோர் வெறுங்கையோடு இலங்கையை விட்டுப் புறப்பட்டிருக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் விநாச காலத்தைப் புரிந்து கொள்ளாமல் விபரீத புத்தியுடன் - போர்வெறித் தீவிரத்துடன் - சன்னதம் கொண்டு நிற்பதால்தான் இந்த இரு வல்லரசுகளினதும் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டாக எடுத்த முயற்சி பலனளிக்காமல் - பயன்தராமல் - தோல்வியில் முடிவடைந்தது என்பது வெளிப்படை.

'இலங்கை இறைமையுள்ள நாடு. அதன் தலைமைத்துவத்துக்குச் சொல்லிப் பார்த்தோம். அவர்கள் கேட்பதாக இல்லை. இனி நாம் என்ன செய்ய முடியும்?' - என்று இத்தகைய வல்லரசு நாடுகள் இவ்விடயத்தை அப்படியே போட்டு விட்டு வாளாவிருந்து விடும் என எண்ணுவது அபத்தம்.

மூன்று மாத காலத்தில் சுமார் ஏழாயிரத்து ஐந்நூறு பொதுமக்கள் பரிதாபமாக சாகவும் பதினைந்தாயிரத்துக்கும் அதிகமானோர் படுகாயமடையவும் காரணமான கொடூர யுத்தம், மேலும் கோர வடிவு எடுக்கும் பேராபத்து நிலைமை சூழ்ந்து வருகின்றது. இதனை வெறும் உள்நாட்டு யுத்தமாகக் கருதி அவை ஒதுங்க விடா.

''இலங்கையில் மோதல் நடைபெறும் வடபகுதியில் நிலைமை மிகவும் அபாயகரமான கட்டத்தை அடைந்துள்ளது'' - என ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரகம் எச்சரித்திருக்கின்றது. இலங்கையில் கடமையாற்றி வரும் தமது பணியாளர்களை மேற்கோள் காட்டி அந்த அமைப்பின் பேச்சாளர் வில்லியம் ஸ்பின்ட்லெர் இதனைத் தெரிவித்திருக்கின்றார். பொதுமக்களின் நிலைமை தொடர்பான இலங்கை அரசின் கடப்பாடுகளையும், அரசு தனது சொந்த மக்களைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் மீள வலியுறுத்திச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இதேசமயம், இலங்கையில் மோதல் இடம்பெறும் முல்லைத்தீவுப் பகுதியில் விமானங்கள் மற்றும் கனரக ஆயுதங்களின் பாவனை நிறுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு அறிவித்துள்ள போதிலும் -

அப்பிரதேசத்தில் தொடர்ந்து கடும் ஷெல் வீச்சுகள் நீடிக்கின்றமை தொடர்பாக அமெரிக்கா கடும் கவலை தெரிவித்துள்ளமை கவனிக்கத்தக்கது.

இதற்கிடையில் - வன்னியில் இடம்பெறும் மோதல்களின்போது கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தப் போவதில்லை என்று அரசு அறிவித்துள்ள போதிலும் இலங்கை இராணுவம் ஷெல் வீச்சுக்களை மேற்கொள்கின்றது என ஐக்கிய நாடுகள் சபை குற்றம் சுமத்தியிருப்பதாக 'த டெய்லி டெலிகிராவ்' நாளிதழ் தகவல் வெளியிட்டிருக்கின்றது.

உலகின் எங்கோ ஒரு மூலையில், மிகவும் பின்தங்கிய பிரதேசம் ஒன்றின் தெருவழியே மிக வேகமாகச் சென்று கொண்டிருக்கும் ஒரு மோட்டார் சைக்கிள் ஓட்டியின் கைக்கடிகாரத்தில் காட்டும் நேரத்தை அமெரிக்காவில் ஒரு கண்காணிப்பு மையத்தில் இருந்தபடி துல்லியமாகப் பார்த்தறியக்கூடிய அளவுக்கு நவீன தொழில்நுட்பம் வளர்ந்துவிட்ட காலம் இது.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் எஞ்சியுள்ள குறுகிய நிலப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிகக் கூடாரங்களைத் தமது செய்மதிகள் மூலமான வீடியோ கமராக்கள் மூலம் துல்லியமாகக் கணக்கிட்டு, அதனடிப்படையில் அங்கு எஞ்சியுள்ள மக்களின் எண்ணிக்கையை இட்டுமட்டாக மதிப்பிடக்கூடிய வல்லமையில் அமெரிக்காவும் ஏனைய மேற்குலகும் உள்ளன என்பதும் புதுமையான விடயமல்ல.

எனவே, விமானத் தாக்குதல்கள் மற்றும் ஷெல் - பீரங்கி போன்ற கனரக ஆயுதப் பாவனை தொடர்பாகக் கொழும்பிலோ அல்லது பிற இடங்களிலோ ஓர் அறிவிப்பும், களத்தில் வேறு நிலைப்பாடுமாக இரட்டை வேடம் போடலாம் என்று யாரும் நினைப்பார்களாயின் அது பேரபத்தம் இன்றி வேறில்லை.

இத்தகைய பின்புலத்தில்தான், இப்போது இலங்கைக்கு வந்து யுத்த நிறுத்தம் ஒன்றை உடன் ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபட்டு, அது பலனளிக்காத நிலையில் வெறுங்கையோடு நாடு திரும்பிய பிரிட்டிஷ் பிரெஞ்சு வெளிவிவகார அமைச்சர்களின் எத்தனங்களை நாம் நோக்கவேண்டும். இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. இந்த விடயத்தைப் புரிந்துகொண்டு எச்சரிக்கை அறிவிப்பு விடுத்திருக்கின்றது.

''இலங்கை அரசு இராஜதந்திர அணுகுமுறையைப் புரிந்துகொள்ளாது - முன்பின் யோசிக்காது - சர்வதேசத்துடன் சண்டைபோட்டு வீண் பகைமையை வளர்த்துக்கொள்கின்றது'' - எனச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் ஐ.தே.கட்சியின் எம்.பியும் பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க.

''இலங்கை அரசு சர்வதேசத்துடன் ஒன்றிணையாது தனிப் பயணம் செய்ய முயல்கிறது. முன்பின் நேரக்கூடிய விளைவுகளைப் பற்றி சிந்திக்காது சர்வதேசத்துடன் முரண்பட்டு நிற்கின்றது.'' - என்று கூறுகின்றார் அவர்.

இப்படி விபரீத புத்தியுடன் கொழும்பு செயற்படுவது வினாச காலத்துக்கு வெற்றிலை வைத்து அழைக்கும் செயற்பாடே.

# இலங்கையில் பொதுமக்கள் மீதான தாக்கு[illegible] சர்வதேச ரீதியாக விசாரணை நடத்தப்படவேண்டும்

## பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் கோரிக்கை



லண்டன், மே 1

இலங்கையில் இடம்பெற்றுவரும் யுத்தம் காரணமாக ஏற்படும் பொதுமக்கள் இழப்புக்கள் தொடர்பில் உடன் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென பிரித்தானிய நாடாளுமன்ற உறுப்பினர் எட்வட் டேவி கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையில் அரசாங்கப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் யுத்தம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் பெரும் அவலத்தை எதிர்நோக்கி வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் காரணமாக அதிக எண்ணிக்கையிலான பொதுமக்கள் கொல்லப்பட்டும், காயமடைந்தும் உள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மோதல் தவிர்ப்பு வலயத்தில் சிக்கியுள்ள பொதுமக்கள் பட்டினிப் பிணியால் வாடித் தவிப்பதாகவும், போதியளவு மருத்துவ வசதிகளின்றி இன்னல்களை எதிர்நோக்கி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இன்னும் சில தினங்களுக்குள் இலங்கையில் யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்படாவிட்டால் ஏற்படக்கூடிய பாரிய பொதுமக்கள் அனர்த்தத்தை தவிர்க்க முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

மோதல் இடம்பெற்று வரும் பிரதேசங்களுக்கு சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் தொண்டு நிறுவனங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளா[illegible].

யுத்த குற்றங்களை மேற்கொ[illegible]டோருக்கு எதிராக பிரித்தா[illegible] சாங்கம் நடவடிக்கை எடுக்க வே[illegible]டுமென அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் அமைப்பு, அமெரிக்கா, பொதுநலவாய நாடுகள் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து இலங்கையில் யுத்த நிறுத்த அமுலாக்கலை பிரித்தானியா வலியுறுத்த வேண்டுமென எட்வட் டேவி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் யுத்த முன்நகர்வுகள் குறித்து சில சிங்கள ஊடகங்கள் வேதனையுடன் கருத்து வெளியிட்டு வருவதாகவும் இலங்கை ஊடக அடக்குமுறை தொடர்பில் அந்நாட்டு ஊடகங்கள் வெட்கமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# 'மோதல் தவிர்ப்பு பிரதேசம்' என்ற ஒன்று தற்போது இல்லை கனரக ஆயுதங்களின் தாக்குதல் தளமாகவே அது உள்ளது

## ஐ.நா. மனிதாபிமான உதவிச் செயலர் நியூயோர்க்கில் தெரிவிப்பு



நியூயோர்க், மே 1

பாதுகாப்பு வலயத்தில் சிக்கியுள்ள பொதுமக்கள் பாரிய ஆபத்தில் சிக்கியுள்ளனர் எனவும் அவர்கள் எறிகணைகள் மற்றும் துப்பாக்கி பிரயோகங்களினால் மாத்திரம் இன்றி உணவு மற்றும் இதர அத்தியாவசிய வசதிகள் இல் லாததன் காரணமாகவும் பாதிப்படைவதாக ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக் கான உதவிச் செயலர் ஜோன் ஹோம்ஸ் நேற்று முன்தினம் நியூயோர்க் நகரில் வைத்து செய்தியாளர்கள் மத்தியில் தெரிவித்துள்ளார்.

தற்போது பாதுகாப்பு வலயம் அல்லது மோதல் தவிர்ப்பு பிரதேசம் என்று ஒன்று அங்கு இல்லை. அது கனரக ஆயுதங்களின் தாக்குதல் இடம் பெறும் தளமாகவே காணப்படுவ தாக ஜோன் ஹோம்ஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜோன் ஹோம்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்து ஜனாதிபதி உள்ளிட்ட முக்கியஸ்தர்களுடன் கலந்துரையாடலை மேற்கொண்டதுடன் வவுனியா முகாம்களுக்கு சென்று நேரடியாக பார்வையிட்டதன் பின்னர் இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கம் யுத்த நிறுத்தம் ஒன்றினை முன்வைத்தால் தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் எழுந்து விடுவர் என்ற அச்சத்தில் அந்த அறிவிப்பை பற்றி சிந்திக்காமலே இருக்கிறது.

அரசாங்கத்துடன் யுத்த நிறுத்தம் குறித்த இணக்கப்பாட்டுக்கு வர முடியாமை[illegible] வருத்தமடைவதாகவும் என[illegible] மோதல் பிரதேசங்களில் உள்ள பொது மக்களின் பாதுகாப்பின் பொருட்டும் அவர்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளை விநியோகிக்கும் பொருட்டும் தொடர்ந்தும் யுத்த நிறுத்தம் ஒன்றினை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தும் என்றும் ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை மோதல் பிரதேசத்தில் கடந்த வாரம் அரசாங்கம் அறிவித்ததைப் போல கனரக ஆயுதங்களை பாவிக்கக் கூடாது என்பது மிகவும் முக்கியமான விடயம் என ஜோன் ஹோம்ஸ் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் இந்த உறுதிமொழி தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

துரதிர்ஷ்ட வசமாக இருதரப்பினரும் இராணுவ நடவடிக்கையினை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றனர். இதன் காரணமாகவே இவ்வாறானதொரு நெருக்கடியான நிலை தோன்றியுள்ளது என ஜோன் ஹோம்ஸ் மேலும் சுட்டிக்காட்டினார்.

# கோதுமை மாவைப் பெற்றுக்கொள்ளுமாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 1

உலக உணவுத் திட்ட நிவாரணத்துக்கென அரச அதிபரால் கடன் அடிப்படையில் வழங்கப்பட்ட கோதுமை மா தற்போது மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக் கோதுமை மாவைப் பெற்றுக்கொள்வதற்கு விருப்பம் தெரிவிக்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் அதற்கான வழங்கற் கட்டளையினைமாவட்ட புனர்வாழ்வுபுனரமைப் புச் செயலகத்தில் சமர்ப்பித்து கோதுமை மாவைக் களஞ்சியத்தில் இருந்து எடுத்து விநியோகிக்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்துக்கு கப்பல்கள் மூலம் தருவிக்கப்பட்ட கோதுமை மா மாவட்டத்திலுள்ள 24 கூட்டுறவுச் சங்கங்களுக்கு போதியளவு விநியோகிக்கப்பட்டு வந்தது. உலக உணவுத் திட்ட நிவாரணத்துக்கென எம்மால் கடனடிப்படையில் வழங்கப்பட்ட கோதுமை மா இப்போது மீள ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே இதனைப் பெறுவதற்கு விரும்பும் கூட்டுறவுச் சங்கங்கள் அதனைப் பெற்றுப் பொதுமக்களுக்கு கட்டுப்பாடின்றி விநியோகிக்குமாறும் எச்சந்தர்ப்பத்திலும் கோதுமை மாவுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை எனவும் அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (50)

# பாடசாலைகளுக்கு இடையேயான சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், மே 1

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சதுரங்கப் போட்டிகள் நாளை சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் யாழ்.மத்திய கல்லூரியில் காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளதாக மாவட்ட விளையாட்டுக் குழுச் செயலாளர் உடற்கல்விப் பணிப்பாளர் மு.நடராசா அறிவித்துள்ளார்.

நாளை சனிக்கிழமை பெண்களுக்கான போட்டியும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆண்களுக்கான போட்டியும் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (50-9)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை 19 | 02.05.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | அட்டமி |
| | பி.ப. 04.27 வரை |
| நட்சத்திரம்: | ஆயிலியம் |
| | பி.இ. 02.16 வரை |
| சுபநேரம்: | 02.57 - 04.27 |
| ராகுகாலம்: | 08.57 - 10.27 |

# நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் நிவாரணம்

## வழங்கற் கட்டளைகள் செயலகத்தால் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 1

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து வந்து நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் கீழ் மே மாத நிவாரணம் விநியோகம் செய்யப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை யாழ். செயலகம் மேற்கொண்டு வருகின்றது.

இதற்கான வழங்கற் கட்டளைகள் யாழ்.செயலகத்தில் உள்ள உலக உணவுத்திட்ட மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் குறிப்பிட்ட ப.நோ.கூ. சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

வழங்கற் கட்டளைகளைப் பெற்றுக் கொள்ளாத ப.நோ.கூ. சங்கங்களை மாவட்ட முகாமைத்துவப் பிரிவில் அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறும் -

நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமைக்கு முன்னர் களஞ்சியத்தில் இருந்து உணவுப் பொருள்களை முழுமையாகப் பெற்றுக் கொள்ளுமாறும் யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் அறிவித்துள்ளார்.

விநியோக நடவடிக்கைகளை அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ஊடாக மேற்கொள்ளுமாறும் அரச அதிபர் அறிவித்துள்ளார். (203)

# சுழிபுரத்தில் அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியிலிருந்து விபூதி, சந்தனம், குங்குமம் வெளியேறும் அசாதாரண நிகழ்வு

யாழ்ப்பாணம், மே1

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் உள்ள ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியில் இருந்து விபூதி, சந்தனம், குங்குமம் என்பன வெளிவரும் நிகழ்வு நடந்து கொண்டிருக்கிறது.

இந்த அசாதாரண நிகழ்வு சித்திரைப் புத்தாண்டு தினத்தில் இருந்து இடம்பெற்று வருவதாகவும் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஆயிரத்து 500க்கு மேற்பட்ட அடியார்கள் நேரடியாகச் சென்று இந்த நிகழ்வைக் கண்டு வழிபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீமூர்த்தியில் இருந்து இதுவரை வெளியேறிய விபூதி, சந்தனம், குங்குமம் என்பன அடியவர்களுக்கு எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் வழங்கப்படவுள்ளதாக நிலையப் பொறுப்பாளர் கே.சிவலிங்கம் தெரிவித்துள்ளார். (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் முன்னேற்றப் பயணத்தில் உழைப்போரின் பங்கு உன்னதமானது

## மேதினச் செய்தியில் ஜனாதிபதி

கொழும்பு, மே1

நாட்டின் முன்னேற்றப்பயணத்தில் உழைக்கும் மக்களின் பங்களிப்பு மிகவும் உன்னதமானது என்று தாம் வெளியிட்ட மேதினச் செய்தியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

ஜனாதிபதியின் மேதினச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

நாட்டின் அபிவிருத்தியை சரியான பாதையில் வழிநடத்திச் செல்லும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள எமக்கு, உழைக்கும் மக்கள் வழங்கிவரும் பலத்தை மறந்துவிடமுடியாது. ஒரு பக்கத்தில் முழு உலகையும் அச்சத்துக்குள்ளாக்கி வருவதாகக் கூறப்படும் பயங்கரவாதத்துக்கு நாம் அச்சமின்றி முகங்கொடுத்தோம். அவ்வாறு முகம் கொடுத்து இன்று நாம் சுதந்திரமான ஒரு வருடத்துக்குள் காலடி வைத்துள்ளோம்.

அதேபோல் உலக பொருளாதார சவால்களுக்கு மத்தியிலும் எமது நாட்டின் வளங்களைப் பாதுகாத்து மக்கள் வாழ்க்கையை சுபீட்சமடையச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இந்த வெற்றிகள் சகலவற்றிலும் பங்குதாரராவதற்கு இந்த நாட்டின் உழைக்கும் மக்கள் பொறுமையைக் கையாண்டிருப்பது உலகெங்குமுள்ள உழைக்கும் மக்களின் கௌரவத்துக்கு பாத்திரமாகலாம் என நம்புகிறேன்.

இன்று நாம் வெற்றிமீது வெற்றி கொண்டு தேசத்தைப் பலப்படுத்தும் சந்தர்ப்பத்தை அடைந்துள்ளோம். எதிர்காலத்தில் இந்த நாட்டில் பிரிவினைவாதம் தொடர்பான எண்ணம் தலைதூக்காதவாறு உழைக்கும் மக்கள் ஐக்கியத்துடன் செயற்படுகிறார்கள். கட்சி, நிற வேறுபாடுகளுக்கு அப்பால் நாட்டை வெற்றியடையச் செய்யும் பாதையைத் தேசம் அடைந்துள்ளது. இதன்மூலம் உழைக்கும் மக்களின் இருப்பு உறுதிப்படுத்தப்படும் எனத் திடமாக நம்புகிறேன்.

இவ்வாறான எல்லா சவால்களையும் வெற்றிகொண்டு நாட்டை முன்னேற்றும் பயணத்தின்போது மக்களுக்கு உதவிகளைப் பெற்றுக்கொடுக்க முடிந்துள்ளமை உழைக்கும் மக்களுடன் இருந்த எனக்குப் பெருமையானதாகும்.



புதியதோர் இலங்கையைக் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைப் பலப்படுத்திய நாட்டின் உழைக்கும் சகலவித மக்களுக்கும் தேசத்தின் கௌரவம் உரித்தாகட்டும்.எமது நாட்டின் உழைக்கும் மக்களுக்கு வெற்றிமேல் வெற்றி கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

# தென்மராட்சியில் தமது உறவுகளை தேடி அலையும் உறவினர்கள்

யாழ்ப்பாணம், மே1

வன்னிப்பிரதேசத்தில் இருந்து மீட்கப்பட்டு யாழ். மாவட்ட நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டவர்களைத் தேடி உறவினர்கள் தினமும் நலன்புரி நிலையங்களுக்கு அலைகின்றனர்.

உறவுகள் இங்கு அழைத்துவரப்பட்டார்களா இல்லையா என்ற விவரம் தெரியாமல் தினமும் ஒவ்வொரு நலன் புரி நிலையங்களுக்கு அலைவதாகத் தெரிவித்தனர்.

அந்தந்த நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களின் விவரங்கள் நிலையங்கள் முன்பாக அல்லது பத்திரிகைகளில் பிரசுரிப்பின் மக்களின் அலைச்சல்கள் குறைவடையலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. (1-207)

# இனச்சிக்கலுக்கு நியாயமான தீர்வு கிட்டும் போதே வடக்கு, கிழக்கு தொழிலாளர் பிரச்சினைகள் தீரும்

## 'புளொட்' அமைப்பு மேதினச் செய்தி

வவுனியா, மே1

தேசிய இனப்பிரச்சினைக்கு நியாய முறையில் விடை காண்பதன் மூலமே வடக்கு, கிழக்குபிரதேசத்தில் வாழும் தொழிலாளர் வர்க்கத்தின் அடிப்படைப் பிரச்சினைக்கு விடிவு கிட்டும்.

மேதினத்தை ஒட்டி 'புளொட்' அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையின் சாராம்சம் வருமாறு:-

மே மாதம் முதலாம் நாள் தொழிலாளர் வர்க்கத்தின் காத்திரமான போராட்டத்தினால் கிடைத்த வெற்றியைக் குறிக்கும் நாள். ஆனால் இப்போது தொழிலாளர்கள் தமது வெற்றிக்காக போராடும் நாளாக மீண்டும் மாற்றப்பட்டு விட்டது.

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் பேசும் தொழிலாளர்கள் யுத்த கரங்களின் கெடுபிடிகளுக்குள் சிக்கி தமது வாழ்வாதாரங்களை இழந்து வருவது கடந்த முப்பது வருடமாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

வர்க்கரீதியான போராட்டங்கள் வெற்றிபெறும் போது அனைத்து விதமான சமூக ஏற்றத்தாழ்வுகள், அடக்குமுறைகள், இனமுரண்பாடுகள், கலாசார சீரழிவுகளும் முற்றுப்பெற்று விடும் என்று எண்ணியிருந்த காலம் மாறி, தேசிய இனச்சிக்கலுக்கு நியாயமான முறையில் விடை காண்பதன் மூலமே வடக்கு, கிழக்குப் பிரதேசத்தில் வாழும் தொழிலாளர் வர்க்கத்தினரின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு விடிவைத்தேடும் நடவடிக்கைகளுக்கு முதலடி எடுத்து வைக்கப்படமுடியும் என்று உறுதியாக நம்பக்கூடிய அளவிலேயே தமிழ் பேசும் மக்கள் குறிப்பாக தமிழினம் இலங்கையில் அவல வாழ்க்கையை அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

எமது தாயகத்தில் செயற்படுகின்ற செயற்பட வேண்டிய அனைத்துப் பிரிவுத் தொழிலாளர்களும் தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் பெற்றுக்கொள்ள வேண்டிய நிரந்தரமான உரிமைகளுக்காகத்தங்களை இணைத்துக்கொள்வது தேசிய இன விடுதலைப் போரில் முதன்மைப் பங்காளிகளாகத் திகழ்வதும் இன்றியமையாததாகும் - என்றுள்ளது. (1

# தொழிலாளரின் உரிமையை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மேதினச் செய்தியில் ரணில் வலியுறுத்து



கொழும்பு, மே1

போராடிப் பெறப்பட்ட தொழிலாளர்களின் உரிமைகள் இன்றைய தொழிலாளர் தினத்தில் இலங்கைத் தொழிலாளர்களின் உரிமைகளையும் தக்க வைக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ள மேதினச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு:-

உலக தொழிலாளர்கள் அவர்களது உரிமைகளை போராடிப்பெற்ற சுதந்திர தினம் இன்றைய மே தினமாகும்.

இத்தகைய தினத்தில் எமது நாட்டுத் தொழிலாளர்கள் அவர்களின் உரிமைகளை முற்றுமுழுதாக இழந்துள்ளனர். எத்தனையோ பேர் தொழில்களை இழந்துள்ளனர்.

தற்போது நூற்றுக்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் தொழிலை இழந் துள்ளனர். இப்படிப்பட்டவர்களுக்கு அரசு எந்த விதமான நிவாரணத்தையும் வழங்கவில்லை.

ஜனாதிபதியின் நண் பர்களுக்கும் உறவினர்களுக்கும் தான் நிவாரணம் வழங்கப்படுகின்றது. அப்பாவித் தொழிலாளர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்படுகின் றனர். இந்த தொழிலாளர் தினத்திலிருந்தாவது இந்த நிலைமை மாறி தொழிலாளர்கள் வாழ்வில் ஒளிவீச வேண்டும்.

உலகில் தொழிலாளர்கள் பாதிக்கப்படும் போது அவர்களுக்கு அந்தந்த நாட்டு அரசுகள் நிவாரணங்களை வழங்கி உதவி செய்கின்றன.எமது நாட்டில் அப்படியானதோர் ஏற்பாடு இல்லாதது கவலைக்குரிய விடயமாகும்.

# மூன்று வைத்தியசாலைகளில் இன்றுமுதல் தனியார் சுத்திகரிப்பு, பாதுகாப்புச் சேவைகள்

குருநகர், மே1

யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை, தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி ஆதரா வைத்தியசாலை ஆகியவற்றில் தனியார் சுத்திகரிப்புச் சேவை மற்றும் தனியார் பாதுகாப்புச் சேவை ஆகியவை இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நிறுவனங்களில் சுத்திகரிப்புச் சேவையை நடத்துவதற்கு எவரெடி சுத்திகரிப்பு நிறுவனத்திற்கும்-

பாதுகாப்புச் சேவையை நடத்துவதற்கு கோல்டன் ஈகிள் பாது காப்புச் சேவைக்கும் - யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இச் சேவைகள் 24 மணி நேரமும் இரவு பகல் சேவையாக நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# தென்மராட்சி நலன்புரி நிலையங்களின் பாவனைக்கு அம்புலன்ஸ் வழங்கப்பட்டது

கொழும்பில் இருந்து ஏ-9 பாதையூடாக எடுத்துவரப்பட்டுள்ள அம்புலன்ஸ் வண்டி சாவகச்சேரி வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டுள்ளது.

தென்மராட்சியில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களுக்கு உதவுவதற்காக இந்த அம்புலன்ஸ் வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அமெரிக்காவில் செய்படும் 'மெடிக்கல் ரீம் இன்ர நவுன்னல்' என்ற அமைப்பு இந்த அம்புலன்ஸ் வண்டியை அன்பளிப்பாக வழங்கியுள்ளது என்றும் அவர் கூறினார். (1-236)

# பண்டிதர் தேர்வுகள் ஜூலையில்

யாழ்ப்பாணம், மே 1

சைவபரிபாலன சபையினால் சைவசித்தாந்த பிரவேச, பாலபண்டிதர் தேர்வுகள் (2009) ஜூலை மாதம் நடத்தப்படவுள்ளன.

இப் பரீட்சைக்கு தோற்றவிரும்புவோரை அலுவலகத்தில் விண்ணப்பப்படிவத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு என தேர்வுச் செயலாளர் இரா. செல்வவடிவேல் தெரிவித்தார். (1)

# ஜெகோவாவின் சாட்சிகளின் மாநாடு

தீமையை நன்மையினால் வெல்லலாம் என்ற பொருள் கொண்ட ஜெகோவாவின் சாட்சிகளின் மாநாடு நாளையும் மறுதினமும் வீரசிங்கம் மண்டபத்தில் காலை 9.40 இற்கு ஆரம்பமாகி 3.55 வரை நடைபெறும்.

எல்லாத் தீமைக்கும் முடிவு விரைவில் என்ற பொதுப் பேச்சு ஞாயிறு பிற்பகல் 1.30 இற்கு நடைபெறும். (1)

# மரண அறிவித்தல்

## கார்த்திகேசு இராசரெத்தினம்



வேலணை மேற்கு, புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு இராசரெத்தினம் நேற்று(30.04.2009) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - நாகமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற கனகமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான கனகரெத்தினம், சிவலிங்கம், மாகலிங்கம் மற்றும் சரஸ்வதி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் லதா, குமாரி, நேசன்(சுவிஸ்), கீதா, வாசு, சுதா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சந்திரகுமாரன் (அபிராமியில்), இந்திரன், சந்திரிக்கா (சுவிஸ்), இராஜேஸ்வரன் (நதியா நகை மாடம்), விக்கினராசா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல.20/10, வைரவர் கோயில்
ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சந்திரகுமாரன்
(மருமகன்).

# மரண அறிவித்தல்கள்

## விஜயகுமார் சிற்றம்பலம்

(முன்னாள் ரெலிகொம் பிரிட்டன் இஞ்சினியர், லீலா இஞ்சினியர்ஸ் பொது முகாமையாளர்)

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயகுமார் சிற்றம்பலம் 25.04.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிற்றம்பலம் - ஞானாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும் சுமத்திரலேகாவின் அன்புக் கணவரும் வினோஜன், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மதினி, ரஜினி ஆகியோரின் அன்புச் சகோதரரும் குமரசிங்கம், சிறியோகநாதன் ஆகியோரின் மாமனாரும் விஜயரட்ணம் சுமித் திரா, ராமநாதர், ஞானசுந்தரி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Woodwale Cermatorium Brighton னில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் 03.05.2009 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு நடைபெற்று Charmandean Center, Forest Road, BN14 9HS இல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

120, South Street, Traping, Worthing,
West Sussex, BN 14 7NB, U.K.
T.P:- 0044 1903 823714

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி தயாபரி ஜெயமோகன் (ஆசிரியர்)



இத்தாவில், பளையைப் பிறப்பிடமாகவும் அரியாலையை வதிவிடமாகவும் கொண்ட தயாபரி ஜெயமோகன் நேற்று (30.04.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் இத்தாவில் பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற வரப்பிரகாசம் மற்றும் ஞானப்பு தம்பதியினரின் புதல்வியும் அரியாலை மேற்கை சேர்ந்தகாலஞ்சென்றவர்களான கதிரேசு - மணி தம்பதியினரின் அன்பு மருமகளும் ஜெயமோகனின் (இத்தாலி) அன்பு மனைவியும் ஜெரூசலின் (யா/புனித பத்திரிசியார் கல்லூரி - மாணவன்), ஜெயக்கிலீன் ( யாழ். புனித பெனடிக்ற் மகாவித்தியாலயம்- மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு,
அரியாலை.

தகவல்:
க.ஜெயமோகன் (இத்தாலி),
ஜெ.ஜெயரூசலீன் (மகன்),
ஜெ.ஜெயக்கிலீன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூரண சமாதானத்தை ஏற்படுத்த இன்றைய மேதினம் வழிவகுக்குமா?

## தொழிலாளர் இன்னல்களைத் தீர்த்துவைப்பதும் முக்கியம்

மே தினமானது வருடா வருடம் மே மாதம் முதலாம் திகதி உலகெங்கும் தொழிலாளர்களால் கொண்டாடப்படுகிறது. இரவு பகலாக உதிரம் சிந்தி உழைத்த தொழிலாளர்கள் விடுதலை அடைந்ததையும், வேலைகொள்வோரின் அடக்கு முறைகளில் இருந்தும் காப்பாற்றப்பட்டதையும் நினைவுகூரும் நாளாக இதை எண்ணுகிறார்கள்.

அன்றைய தினம் பாதிக்கப்பட்ட தொழிலாளர்கள் நடத்திய புரட்சியின் காரணமாக இன்றைய தொழிலாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளன.

முற்காலத்தில் ஆதிமனிதர்கள் செல்வந்தர்களால் அடிமைகளாக்கப்பட்டு நாள் முழுவதும் ஓய்வின்றி வேலை செய்த காலங்கள் உண்டு.

உதாரணமாக ரோம் நகரில் ஆபிரிக்க கறுப்பு இனத்தவர்கள் வண்டிகளில் மாடுகளாக பூட்டப்பட்டு இழுவைக்குப் பயன்பட்டார்கள். வேலை செய்து முடிய, கைகளில் விலங்கு பூட்டி அடைத்து வைத்து மறுநாள் வேலைக்குத் திறந்து விடப்படுவார்கள்.

ஆனாலும் பின்னிட்ட காலங்களில் வேலை நேரம் குறைக்கப்பட்டு பின்பு 18 மணித்தியாலங்கள் என சட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

அதை மறுத்து பேச யாருக்கும் உரிமையில்லை. ஆனாலும் 1820 ஆம் ஆண்டில் தொழிலாளர் போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. பின்பு 1834 ஆம் ஆண்டிலும் வேலை நேரத்தைக் குறைக்கும்படி தொழிலாளர்கள் போராடினார்கள்.

மேலும் 1880ஆம் ஆண்டு தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாளைக்கு 8 மணித்தியாலம் மட்டும் வேலை எனவும், கிழமைக்கு ஒரு நாள் லீவு வழங்க வேண்டும் எனவும் வாதாடினார்கள். உரிமைக்காக குரல் கொடுத்தார்கள்.

இந்த உரிமைப் போராட்டமானது, அடுத்த நான்கு ஆண்டுகளாக எங்கும் வியாபித்து தொழிலாளர்களின் பாரிய போராட்டத்திற்கு வழி வகுத்தது. அதன் மூலமாக 1881 ஆம் ஆண்டு தொழிலாளர் அமைப்புகள் ஒன்றிணைந்து ஏக மனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

அதாவது அடுத்த இரண்டாண்டு முடிய முன்பு எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி அனைத்துத் தொழிலாளர்களும் நாளொன்றுக்கு 8 மணித்தியாலம் மட்டும்தான் வேலை செய்ய வேண்டுமென தீர்மானித்தனர். 1886 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி அமெரிக்காவில் சிக்காக்கோ நகரில் நடைபெற்ற எழுச்சிப் போராட்டத்தில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். அன்று நாளுக்கு 8 மணித்தியாலம் மட்டும் தான் வேலை என்பது கைச்சாத்திடப்பட்டது.

இந்த மே தினம் 1 ஆம் திகதிதான் தொழிலாளர் உரிமை பெற்ற தினமாக பிரகடனப் படுத்தப்பட்டது. ஆனாலும் அண்மைக்காலமாக மே தினம் என்ற ரீதியில் பார்க்கும்போது கொழும்பிலும், அதனை அடுத்துள்ள நகரங்களிலும் மே தினம் சிறப்பாக கொண்டாடப் படுகின்றன. ஆனால், இவை அரசியல் கட்சிகளின் கூட்டங்களாக - ஆர்ப்பாட்டப் பேரணிக ளாக அல்லது அரசியல் பிரசாரக் கூட்டங்களாக நடத்தப்படுகின்றன.

இதன் நோக்கம் அரசியல் கட்சிகளின் வெற்றி. ஆனால், தொழிலாளர்களின் வெற்றியல்ல. இலங்கையில் மற்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்த மாதிரியான நிகழ்வுகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஓர் ஜனநாயக நாட்டில் தொழிலாளர் உரிமைகள் பாதுகாக்கப்படல்வேண்டும். இதற்கு சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் தொழில் உரிமைச் சட்டங்கள் பாதுகாப்பாகவுள்ளன.

இன்று நம் நாட்டில் தொழிலாளர்கள் உரிமைகள் பாதுகாக்கப்பட்டுள்ளனவா என்பது ஓர் கேள்வியாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் உரிமைகள் என்பது ஓர் தளம்பல் நிலையில் உள்ளது.

- பெருந்தோட்ட தொழிலாளர்களின் பிரச்சினை.
- மீன்பிடியாளர்களின் பிரச்சினை.
- விவசாயிகளின் பிரச்சினை.
- கைத்தொழில் / கூலியாட்களின் பிரச்சினை.
- அரச உத்தியோகத்தர்களின் பிரச்சினை.
- கூட்டுறவுச் சங்கத் தொழிலாளர்களின் பிரச்சினை.
- பொருளாதார வாழ்வாதார பிரச்சினைகள் - குறை ஊதியம், வறுமை, வீடின்மை, சுகாதாரம்.
- வேலையில்லாத் திண்டாட்டம் போன்றவையாகும்.

1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதி இலங்கை பிரித்தானியா ஆட்சியில் இருந்து சுதந்திரம் அடைந்தது.

சுதந்திரம் அடைந்து ஒரு சில மாதங்களுக்குள்ளே இலங்கையின் தேசிய வருமானத் தில் பெரும் பகுதியை சம்பாதித்துக் கொடுத்த மிகப் பெரிய தொழிலாளர் அமைப்பாக விளங்கிய இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை, வாக்குரிமை பறிக்கப்பட்டு, நாடற்ற அனாதைகளாக்கப்பட்டார்கள்.

ஆனால், தந்தை செல்வநாயகம் இதற்காகப் போராடினார். குரல் கொடுத்தார். இது இன்று இந்தியத் தமிழருக்கு நாளை இலங்கைத் தமிழருக்கும் இது ஏற்படும் என தீர்க்கதரிசனமாகக் கூறினார். ஆனால், இன்று வரையும் இந்திய வம்சாவளி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை. அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. மொழி உரிமை பாதிக்கப்பட்டுள்ளது.

உதிரத்தை வேர்வையாக சிந்தி உழைக்கும் வேலைக்கு ஏற்ற ஊதியம் இன்றுவரையும் வழங்கப்படவில்லை. கடந்த 60 ஆண்டுகளாக நடந்த போராட்டத்தினால், எந்தப் பலனும் கிடைக்கவில்லை. அரசியல் கட்சிகளின் பேரால் மக்களைப் பிரித்து அரசியல் தலைவர்கள் இலாபமீட்டி வருகிறார்கள்.

மலையகத் தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும் எப்போது ஒன்றுசேர்ந்து ஒரே நோக்கத்துக்காகப் பாடுபடும் நாள் வருமோ அன்றுதான் சுதந்திரம் அல்லது விடுதலை கிடைக்கும் எனக் கூறமுடியும்.

**கடல் தொழிலாளர்கள் :-**

கடல் தொழிலாளர்கள் உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன. கடல் தொழிலாளர் சுதந்திரமாக மீன்பிடிக்க முடியாது- கடல் படையினரின் (பாஸ்) அனுமதிபெற்றுத்தான் மீன் பிடிக்கமுடியும். இரவு மீன்பிடிக்க செல்ல முடியாது. பாதுகாப்பு காரணம் எனக் கூறி கடந்த மூன்று தசாப்தங்களாக துன்புறுத்தப் படுகின்றார்கள் -

மீன்பிடிப் படகுகளுக்குத் தேவையான பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய் பெற முடியாது. இந்த எரி பொருள்களின் விலை அதலபாதாள அளவிற்கு உயர்ந்துள்ளது. தேவையான அளவு எரிபொருள் பெறமுடியாது. வடக்கு, கிழக்கு மாகாண கடல் தொழிலாளர் சங்கங்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

மீன்பிடிக்கச் செல்லும் படகும் அதில் செல்லும் மீன்பிடியாளர்களும் மாயமாய் மறைந்து விடுகிறார்கள். ஆழ்கடல் மீன்பிடிக்கும் உரிமையும், இரவு மீன்பிடிக்கும் உரிமையும் தடை செய்யப்பட்டுள்ளன. 15 குதிரை வலுவுக்கு மேற்பட்ட இயந்திரங்களை தமிழ் மக்கள் கொள்வனவு செய்ய முடியாது.

செல்லும் பாதையில் பல தடைமுகாம்கள். இதில் கொழும்பு சென்றடையும் முன்பே மீன்கள் பழுதடைந்து விடும். மதவாச்சி தடைமுகாமுக்கு மேல் மீன் லொறிகள் செல்லமுடியாது. இப்படியான சூழ்நிலையில் மீனவர்கள் எப்படி மே தினத்தை கொண்டாட முடியும்?

விவசாயிகளின் பிரச்சினை:- விவசாயிகள் தமது காணியில் பயிர் செய்ய முடியாது. குளங்களும், வயல் நிலங்களும் உயர்பாதுகாப்பு வலயம் என கூறுவார்கள். வயல்களுக்கு யாரும் இரவு காவல்களுக்குச் செல்லமுடியாது. பயிர்களை மாடு, பன்றி, யானை போன்றன சாப்பிட்டு விடும். மிகுந்த கஷ்டங்களின் மத்தியில் அறுவடைசெய்த தானியங்களை சந்தைப் படுத்த முடியாது.

உற்பத்தி செய்யப்பட்ட விளைபொருள்களுக்குத் தகுந்த விலை பெறமுடியாது. வருடா வருடம் பாதிப்படைந்து வருகிறார்கள். வடக்கு - கிழக்கு மாகாணம் 2/3 பங்கு நெல் உற்பத்தி செய்யும் வரண்ட வலயப் பிரதேசமாகும். ஆனால், இரண்டு தசாப்தங்களாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அகதிகள் முகாமில் பயத்துடன் வாழ்கிறார்கள். பல விவசாயக் குளங்கள் நீர் நிறைந்து இருந்தாலும் பயிர் செய்யமுடியாது கைவிடப்பட்டுள்ளது. இந்தக் குளங்களும், நெற்செய்கைப் பிரதேசங்களும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.

உதாரணமாக மன்னார் மாவட்டத்தில் 30 ஆயிரம் ஏக்கருக்கு நீர்பாய்ச்சும் கட்டுக்கரைக் குளம், கிளிநொச்சியில் 28 ஆயிரம் ஏக்கருக்கு நீர் பாய்ச்சும் இரணைமடுக்குளம் போன்றன் வாகும்.

தேவையான யூரியா போன்ற உரங்களைப் பெறமுடியாது. உழுதலுக்கும், அறுவடை செய்தலுக்கும் தேவையான எரிபொருள்களை பெறமுடியாது. அவற்றின் விலை ஆகாயத்தைத் தொடுமளவிற்கு உயர்ந்துள்ளது. தேவையான ஐஸ் தொழிற்சாலைகள் இல்லை.

இதேபோன்று அரச உத்தியோகத்தர்கள், கைத்தொழில்செய்யும் கூலியாட்கள் பொருள்களின் குறைபாடுகளினால் பாதிப்படைந்துள்ளார்கள். பொருளாதாரத் தாக்கம், பணவீக்கம் என்பனவற்றினால் தொழிற்சாலைகள் மூடப்படும் நிலையில் உள்ளன.

இந்த ஆண்டில் 50 ஆயிரம் பேர் இலங்கையில் வேலை இழக்கவேண்டிய நிலையுள்ளதாகக் கூறப்படுகிறது. இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பிற்கான முன்னோடி வேலைத் திட்டங்கள் இல்லை. இதனால் நாடு எதிர்காலத்தில் பாரிய சீரழிவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. மேற்படி சீரழிவுகளுக்கு மே தினம் எப்படித் தீர்வு காணப் போகிறது?

கூட்டுறவுச் சங்கங்களுக்கும், கடைகளுக்கும் தேவையான கொள்வனவுகளைச் செய்யமுடியாது. மக்களுக்குத் தேவையான முக்கிய நுகர்வுப் பொருள்கள் தடைசெய்யப்பட்ட பொருட்களாகவுள்ளன. சில இடங்களில் சங்க முகாமைத்துவம் பணத்தை நேர்மையற்ற முறையில் கையாள்வதனால் பண மோசடிகள் நடைபெறுகின்றன.

பொதுப்பணம் சிலரின் கையில் சிக்குவதனால் சாதாரண சங்க அங்கத்தவர்கள் பாதிப்படைந்துள்ளார்கள். கூட்டுறவு முகாமைத்துவக் குழுக்கள் மற்றும் ப.நோ.கூ.சங்கங்கள் நேர்மையாக இயங்க அரசும், மக்கள் அமைப்புகளும் கவனம் எடுக்கவேண்டும்.

தற்போது நடைபெற்றுவரும் போரினால் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் இறந்

**பீ.ஏ.அந்தோனிமார்க்**

துள்ளார்கள். 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் காயமடைந்து ஊனமுற்றவர்களாக, கை, கால்கள் இழந்தவர்களாக வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, அநுராதபுரம் வைத்திய சாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளார்கள்.

ஒட்டுமொத்[illegible] லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிக[illegible]ம்களிலும், உறவினர் வீடுகளிலும் தஞ்ச[illegible] அடைந்துள்ளார்கள். இந்நிலையில் தொழிலாளர்கள் மேதினம் கொண்டாட முடியுமா?

2009 ஆம் ஆண்டு மே தினமானது இந்த நாட்டில் போரை நிறுத்தி, பூரண சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். இறந்தவர்கள் போக மிகுதியாக உள்ளவர்கள் இனியாவது அழிக்கப்படாமல் தமது தாயகத்தில் குடியேறி, இழந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப இந்த மே தினம் உதவவேண்டும்.

## உழைக்கும் வர்க்கத்தின் ஊன்று கோல் மே தினம்!

மாடாய் உழைக்கும் மனிதரெல்லாம் தம்மை இனம் காட்டிடும்
மகத்தான திருநாளாம் மே முதல் நாள் என்று
மார்க்ஸிஸ கொள்கை கொண்ட தலைவரெல்லாம்
எடுத்துரைத்த மாண்புடைப் பெருநாளாம் மே தினம்
மாடங்களும் கோபுரங்களும் தொழிலாளியின் மாசிலாக் கைகளினால் உயர்ந்திருக்க
அவன் கட்டிய மனக்கோட்டைகள் கனவாகிப் போகிடாமல்
ஒன்றிணைந்து செயற்பட்டு தொழிலாளர் எதிர்காலம் ஓங்கிடவே வழி சமைப்போம்;
உழைக்கின்ற வர்க்கமெல்லாம் ஒன்று கூடித்
தம் உரிமைக்குக் குரல் கொடுக்க புறப்பட்ட நாளிதுவாம்
கோரிக்கைகளை வலியுறுத்திக் கோஷமிட்டு
தொழிலாளர் கொடி தன்னை உயர்த்தி நின்று குரல்கொடுத்து
பாட்டாளி வர்க்கம் உயர்ந்திடவே நாம் உற்சாகமாகவே உதவிடுவோம்
உழைப்பவனின் உழைப்பதுதான் பலன்தரவே
நல் ஊன்று கோலாய் என்றும் நாமிருந்து
ஆகட்டும் அவன் தேவைகள் தாம்
அடையட்டும் தன் உரிமைகளையென்றேயிருந்த
மேதினத்தில் அவன் பெருமைதனை ஏற்றியே போற்றிடுவோம்.

குப்பிளான் செ.ரவிசாந்.



பிரபல பொருளியல் ஆசிரியர் வே.கருணாகரனின் பொன்விழா நிகழ்வுகள் யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன. ஆசிரியர் கழகத் தலைவர் செ.தர்மராஜன் தலைமை உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் கல்லூரி ஆசிரியர் கழகம் சார்பில் வழங்கிய நினைவுச் சின்னத்தை யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் மா.சின்னத்தம்பி வழங்குவதையும் அருகில் கல்லூரி அதிபர் வி.மாணிக்கம் நிற்பதையும் இரண்டாவது படத்திலும் விழாவைச் சிறப்பித்து விழா நாயகருக்கும், பாரியாருக்கும் பொன்னாடை போர்த்தி, மலர்மாலை அணிவித்துக் கௌரவித்த யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் க.வே.ஞானகாந்தன் மற்றும் பிரதி அதிபர் சு.தியாகலிங்கம் ஆகியோரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவ பலத்தால் இலங்கை இனப் பிரச்சினையில் வெற்றி காணலாம் ஆனால் தீர்வு காண முடியாது என்கிறார் உள்துறை அமைச்சர் சிதம்பரம்

கொழும்பு, மே.01

இராணுவ பலத்தால் இலங்கை பிரச்சினையில் வெற்றி காணலாம் ஆனால் தீர்வு காண முடியாது. தற்போதைய சூழ்நிலையில், விடுதலைப் புலிகளின் விளையாட்டு முடிந்து விட்டது. இவ்வாறு கூறியுள்ளார் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம்.

இதுகுறித்து ப.சிதம்பரம் அளித்துள்ள ஒரு பேட்டியில் கூறியிருப்பதாவது:-

இலங்கைப் பிரச்சினையால் அங்கிருந்து பெருமளவில் அகதிகள் வருவார்கள் என நான் நினைக்கவில்லை. சிலர் வரலாம். அதை அரசு சமாளிக்கும். நமது கவலைகள் எல்லாம் சண்டை நிற்க வேண்டும் என்பதுதான்.

மனிதக் கேடயமாக அப்பாவிகளை பயன்படுத்துவதை விடுதலைப் புலிகள் நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகளை அழிப்பதற்காக அப்பாவி மக்களை இலங்கை அரசு பாடுபடுத்தக்கூடாது.

இந்தக் கவலைகள் உரிய முறையில் இலங்கைக்கு தெரிவிக்கப்பட்டது. இந்த கவலைகள் குறித்து இந்தியா மட்டுமல்லாது அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பிய யூனியன் மற்றும் உலக சமுதாயம் தொடர்ந்து கூறிவந்தன. ஆனால் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே போட மறுத்து வந்தனர். இலங்கையும் தாக்குதலை நிறுத்த முடியாது என பிடிவாதம் பிடித்து வந்தது.

இரண்டு பேரிலும் அதிக தவறை செய்தது இலங்கை அரசுதான். இராணுவத்தைக் கொண்டு வெற்றி காணலாம் என அவர்கள் முடிவு செய்து விட்டனர். இராணுவ ரீதியாக தீர்வு காணலாம். ஆனால் நிரந்தர வெற்றி பெற முடியாது. இராணுவ நடவடிக்கையின் அடிப்படையில் விடுதலைப் புலிகளின் ஆட்டம் முடிந்து விட்டது.

பிரபாகரன் உயிருடன் பிடிபடுவாரா இல்லையா என்பது குறித்து என்னால் எதுவும் கூற முடியாது. மனித உயிர்கள் இழப்பை நாம் அனுமதிக்க முடியாது. அதற்கு மேல் இப்போதைக்கு நாம் எண்ண வேண்டிய அவசியம் இல்லை.

பிரபாகரனுக்கு நாங்கள் கெடுதல் நினைக்க விரும்பவில்லை. ஆனால் அவர் ஆயுதங்களைக் கீழே போட வேண்டும் என விரும்புகிறோம். இலங்கைக்கு இந்தியா இராணுவ உதவிகளைச் செய்கிறது என்று சிலர் கூறுகின்றனர் அது தவறு. அப்படி எதையும் இந்தியா செய்யவில்லை- என்று கூறியுள்ளார். (203)

## கைதடி நலன்புரி நிலையத்தில் ப.நோ.கூ.சங்கத்தின் நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், மே.01

கைதடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் கைதடி பகுதியில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் மக்களின் அத்தியாவசிய தேவை கருதி நடமாடும் விற்பனை நிலையத்தை நடத்தி வருகின்றது.

இந்த நடமாடும் சேவை தினமும் இடம்பெற்று வருவதாகச் சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நலன்புரி நிலைய மக்களின் தேவை கருதி சகல பொருள்களும் இச் சேவை மூலம் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (203-224)

## நாய்க்குட்டியை சீண்டிய சிறுவன்; மூதாட்டியை கடித்தது நாய்

யாழ்ப்பாணம், மே.01

சைக்கிளில் சென்ற சிறுவன் நாய்க்குட்டியை மோதிவிட்டு செல்கையில் பற்றைக்குள் படுத்திருந்த தாய் நாய் ஓடி வந்து வீதியில் நடந்து சென்ற மூதாட்டியை கடித்துக் குதறியது.

இச்சம்பவம் சாவகச்சேரி தாளையம்பதி வீதியில் இடம்பெற்றது.

நாய்க்கடிக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த சின்னராசா தவமணி (வயது 67) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (203-207)

## உள்ளூராட்சி சபைகளின் நூலகங்களில் தேசிய நூலக வாரம் அனுஷ்டிக்கப்படவுள்ளது

யாழ்ப்பாணம், மே1

உள்ளூராட்சி சபைகளின் பொது நூலகங்களில் இவ் வருடத்துக்கான தேசிய நூலக வாரம் எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 18ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படவுள்ளது.

தேசிய நூலக ஆவணங்கள் சபையினால் நாடுமுழுவதும் இவ்வாரம் அனுஷ்டிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

* வாழ்க்கை நீடித்த கல்விக்காக ஒவ்வோர் நூலகங்களையும் தயார்ப்படுத்தல்.
* சகல வயதினரும் முதியோர், இளைஞர், சிறுவர்கள் பொது நூலகத்தினைப் பயன்படுத்தக் கூடியவாறு நூலகங்களை உருவாக்குதல்.
* சமூகம் பற்றிய தகவல்களை சகல குடி மக்களும் பெற்றுக் கொள்வதற்கு ஊக்குவித்தல்.
* நூலக சேவையை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி நூலக சேவையை விரிவுபடுத்த உதவுதல்.
* நூலகம் சம்பந்தமான கவிதை, கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகள் மற்றும் புத்தகக் கண்காட்சிகளையும் தொடர்ச்சியாக நடத்துவதற்கு ஊக்குவித்தல்.
* தனிநபர் ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கு ஏற்றவகையில் சந்தர்ப்பங்களை வழங்கி ஊக்குவித்தல் போன்ற நோக்கங்களைக் கொண்டதாக மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த வருட நூலக வார நிகழ்ச்சியானது போட்டித் தன்மையுடன் நடத்தப்பட்டு மாகாண மட்டத்தில் சிறந்த நூலகம், சிறந்த நூலகர் ஆகியவற்றை தெரிவு செய்ய திணைக்களத்தினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (203)

## யாழ்.மாவட்டம் முழுவதும் நாளை மின் தடைப்படும்

யாழ்ப்பாணம், மே.01

யாழ்.மாவட்டம் முழுவதும் நாளை சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை மின் தடைப்படும் என்று இலங்கை மின்சார சபையின் யாழ்.அலுவலகம் தெரிவித்துள்ளது.

திருத்த வேலைகள் செய்யப்படவுள்ளதால் அன்றைய தினம் மின் தடைப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (203)

## ஈழத்தமிழர்களுக்கு எதிராக இன்றைய இந்தியா செயற்படுகிறது புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் கவலை தெரிவிப்பு

தமிழ்மக்கள் மீதான சிறிலங்கா அரசின் இன அழிப்பு நடவடிக்கைக்கு தொடர்ந்து இராணுவ உதவிகளையும் இராஜதந்திர ஆதரவையும் வழங்கி, இன்றைய இந்திய அரசு ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டு வருவது கண்டு தாம் ஏமாற்றமும் கவலையும் அடைந்துள்ளதாகத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

'த ஸ்ரேற்ஸ்மன்' இதழின் வெளிவிவகாரங்களுக்கான ஆசிரியர் சிம்ரன் சோதிக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போதைய இந்திய மத்திய அரசின் நிலைப்பாடுகளும், செயற்பாடுகளும் எமக்கு ஏமாற்றத்தையே தருகின்றன. இந்தியாவின் உண்மையான நண்பர்கள் யார் என்பதை அடையாளம் காண்பதில் - இந்தப் பிராந்தியத்தில் இந்தியாவின் இயற்கையான கூட்டாளிகள் யார் என்பதை அறிவதில் இன்றைய இந்திய அரசு தவறிவிட்டது; அது ஈழத் தமிழர்கள்தான்.

அவர்கள் ஈழத்தமிழ் மக்களுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றனர். இதனைக் கண்டு நாம் மிகுந்த வேதனை அடைந்துள்ளோம்.

போரை நிறுத்தி தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணும் முயற்சிகள் எதனையும் இந்தியா மேற்கொள்ளவில்லை.

கடந்த சனிக்கிழமை சிறிலங்கா வான் படையின் வானூர்திகள் நான்கு தடவைகள் மக்கள் செறிவாக வாழும் பாதுகாப்பு வலயத்தின் மீது குண்டுத் தாக்குதல்களை நிகழ்த்தின.

பீரங்கித் தாக்குதல்களும் கடுமையாகத் தொடர்கின்றன. இந்திய அதிகாரிகளின் கொழும்பு பயணத்தின் பின்னரே இவ்வாறான தாக்குதல்கள் உக்கிர நிலையை எட்டியுள்ளன.

விடுதலைப்புலிகள் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தவில்லை, இராணுவத்தினரே படையெடுப்பினை மேற்கொள்ளும்போது மக்களை மனிதக் கேடயங்களாக முன்னால் நகர்த்தி முன்னேறுகின்றனர்.

தமிழ் மக்கள் மீது பல வழிகளிலும் மேற்கொள்ளப்படும் இன அழிப்புக்களின் உண்மைத் தன்மையை அனைத்துலக சமூகம் இப்போது மெதுவாக உணரத் தொடங்கியுள்ளது.

தமது மண்ணில் சுதந்திரமாக வாழ்ந்து, தமது தாயகத்தை தாமே ஆளும் நியாயமான அரசியல் அவாக்கள் எமது மக்களுக்கு உள்ளன. அந்த அரசியல் அவாக்களை வென்றெடுப்பதற்கு விடுதலைப்புலிகளையே அவர்கள் தமது பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டுள்ளனர்.

தமிழ் மக்களின் அரசியல் அவாவுக்கான போராட்டம் அவற்றை அவர்கள் அடையாத வரை முடிவுக்கு வராது.

எனவே, இங்கு தமிழ் மக்கள் மனிதப் பேரவலம் ஒன்றைச் சந்தித்துள்ள இன்றைய வேளையில், உலக சமூகம் உடனடியாகத் தலையிட்டு அவர்களைக் காக்க வேண்டும் - என்றார். (203)

## மேதினக் கொண்டாட்டத்தை ரத்துச் செய்தது ஐ.தே.கட்சி

கொழும்பு,மே.01

ஐக்கிய தேசியக் கட்சி தனது மே தினக் கொண்டாட்டங்களை ரத்துச் செய்துள்ளது. இதற்குப் பதிலாக புறக்கோட்டையில் அமைந்துள்ள சிறுவர் இல்லம் ஒன்றில் சமய, சிரமதான மற்றும் உதவி வழங்கல் நிகழ்வுகளை நடத்தப்போகிறது என அக்கட்சித் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியும் அக்கட்சி சார்பு தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து இந்த முடிவை எடுத்துள்ளன என்று அக்கட்சி தெரிவித்துள்ளது.

இந்தச் சிறுவர் இல்லத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நிகழ்ச்சி முற்பகல் 10.30 மணிக்கு எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இடம் பெறும்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு அச்சிறுவர் இல்லத்தில் உள்ள 250 இற்கும் மேற்பட்ட சிறுவர்களுக்குத் தங்களால் முடிந்த உதவிகளை வழங்குமாறு ஐக்கிய தேசியக் கட்சி பொது மக்கள் அனைவருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்ந நிகழ்வின்போது அச்சிறுவர்களுக்கு கணனிகள், புத்தகங்கள்,உடைகள் உள்ளிட்ட பல பொருள்கள் வழங்கப்படும் என்று அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (சி)

## கோப்பாய் பிரதேச செயலர் பிரிவு கலை இலக்கியப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே.01

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற கலை இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதன் விவரம் வருமாறு:

**கட்டுரை கனிஷ்ட பிரிவு**

இ.யயேந்திரன் (கோப்பாய் மகாவித்தியாலயம்), செ.துஸ்யா (யா/ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்), மு.லாவண்யா (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு**

ப.வனிதா (யா/இடைக்காடு மகாவித்தியாலயம்), க.நிரோசினி (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்), ம.கபிரினி (யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி).

**கவிதை கனிஷ்ட பிரிவு**

வே.கிருஸ்ணவி (யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), இ.ஜெயப்பிரியா (யா/கோப்பாய் நாவலர் வித்தியாலயம்), ம.நிருசன் (யா/ஆவரங்கால் மகாஜனா வித்தியாலயம்).

**சிரேஷ்ட பிரிவு**

செ.மேரியூறியஸ் (யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), ச.தர்சிகா (யா/நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி), த.சிந்துஜா (யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி).

**சிறுகதை சிரேஷ்ட பிரிவு**

ந.பிரசாந்தன் (யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்), ஜெ.டென்சி (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்), யே.மேரிஜெனேசின் (யா/கோப்பாய் மகாவித்தியாலயம்).

**திறந்த பிரிவு கவிதை**

பி.உமாராணி (நாவற்காடு அச்சுவேலி), பா.துளர்சிகா (ஆவரங்கால் மேற்கு), செ.மோக நாதன்(கோப்பாய் மத்தி).

**சிறுகதை**

ம.நிறைஞ்சனி (ஆவரங்கால் மேற்கு), பா.துளர்சிகா (ஆவரங்கால் மேற்கு), சி.கௌதமன் (கோப்பாய் வடக்கு).

**பாடலாக்கம்**

செ.மோகநாதன் (கோப்பாய் மத்தி), பா.கமலாராணி (கோப்பாய் வடக்கு), த.றொசற்மெலானி (அச்சுவேலி மேற்கு). (203)



மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் வசிக்கும் ஏழைச் சிறுவர்களுக்குத் தைத்த ஆடைகள் வழங்கும் நிகழ்வொன்று அண்மையில் சிறுவர் பாதுகாப்பு நிறுவன அனுசரணையுடன் நடைபெற்றது. நிகழ்வினை ஆரம்பித்து வைத்து மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் உரையாற்றுவதை முதல் படத்திலும் அருகில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் மா. பத்மராஜ் நிற்பதையும் நிகழ்வில் உடைகள் பெற்ற மாணவர்களில் முதல் தொகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம். (09)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நல்லூர் கொன்றையடி வைரவர் ஆலயத் தேர்த்திருவிழா கடந்த 24ஆம் திகதி இடம்பெற்றது.

புதிதாக அமைக்கப்பட்ட தேரில் வைரவப் பெருமான் எழுந்தருளி விதியுலா வருவதைப் படத்தில் காணலாம். *(203)*



காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த் திருவிழாவின் போது எடுக்கப்பட்ட படம். சுவாமி தேரில் எழுந்தருளி மக்களுக்கு அருள் பாலிப்பதை படத்தில் காணலாம். *(250)*



பண்டத்தரிப்பு காளையடி ஞான வேலாயுத சுவாமி ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சித்திரத் தேருக்கான பவளக்கால் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்ற போது எடுக்கப்பட்ட படம். *(29)*



யாழ்ப்பாணம் வண்ணை வைத்தீஸ்வரன் [illegible] விழா[illegible] சுவாமி வீதியுலா வருவதையும் சுவாமி [illegible] படங்களில் காணலாம். *(படங்கள்: கதிரவேலு)*

# மோதலில் சிக்கியோருக்கு உதவ ஆஸி. நிதியுதவி

கொழும்பு,மே1

இலங்கையில் மோதலில் சிக்குண்டுள்ள மக்களுக்கு உதவுவதற்கு அவுஸ்திரேலியாவின் சர்வதேச மனிதாபிமான அமைப்பு இலங்கை அரசுக்கு நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சர் ஸ்டீபன் ஸ்மித் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையின் வட பகுதியில் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்காக அவுஸ்திரேலியா 4கோடி 50லட்சம் அமெரிக்க டொலர்களை மனிதாபிமான உதவிக்கென வழங்கும்.

மருத்துவ உதவிகள், குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளுக்காக இந்த உதவி வழங்கப்படும்.

மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினர் அனைவரும் பொதுமக்களைப் பாதுகாப்பதில் முன்னுரிமை கொடுத்து செயல்பட வேண்டும் என்பதை அவுஸ்திரேலியா மீள வலியுறுத்துகிறது.

இலங்கையின் வடபகுதியில் காணப்படும் மனிதாபிமான நிலை குறித்து அவுஸ்திரேலியா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

மேலும் ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான குழுவை மோதல் நடைபெறும் பகுதிகளுக்குச் செல்வதற்கு அனுமதி வழங்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் விடுத்துள்ள கோரிக்கையை அவுஸ்திரேலியா ஆதரிக்கின்றது என்று தெரிவித்தார். (சி)

# பிரிட்டிஷ், பிரான்ஸ் அமைச்சர்கள் வவுனியாவில் அகதிகளுடன் கலந்துரையாடினர்

கொழும்பு,மே1

பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி பேணாட் குஷ்னர், பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் ஆகியோர் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹனவுடன் வவுனியா மனிக்பாம் பகுதிக்கு விஜயம் செய்து அங்கு தங்கவைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்து வந்துள்ள மக்களின் நிலைமைகளை நேரில் கண்டறிந்தார்கள்.

இடம்பெயர்ந்த மக்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள தங்குமிட வசதிகள், அடிப்படை தேவைகள் குறித்து மீள் குடியேற்ற அமைச்சர் ரிசாட் பதியுதீன், வன்னிப் பிராந்திய பாதுகாப்புப் படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் ஜயசூரிய ஆகியோரும் வவுனியா அரசாங்க அதிபர் மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித கோஹன ஆகியோர் பிரான்ஸ் மற்றும் பிரித்தானிய அமைச்சர்களுக்கு விளக்கமளித்தனர்.

பின்னர் இந்த அமைச்சர்கள் இருவரும் பொதுமக்களையும் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், உலக உணவுத் திட்டத்தின் களஞ்சியம், அங்கு அமைக்கப்பட்டுள்ள இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான நூலகம் என்பவற்றையும் பார்வையிட்டனர்.

செட்டிகுளம் அரச வைத்தியசாலைக்கு அருகில் பிரான்ஸ் அரசாங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள புதிய வைத்தியசாலையையும் அவர்கள் பார்வையிட்டதுடன், அங்கு பணிபுரியும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகளிடமும் கலந்துரையாடினார்கள்.

இந்தப் புதிய வைத்தியசாலையில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 60 நோயாளர்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டதாகவும், சத்திர சிகிச்சை, மகப்பேற்று வைத்தியம் உட்பட பல்வேறு வைத்திய சேவைகளும் இங்கு வழங்கப்படுவதாகவும், இதற்கென நிபுணத்துவம் மிக்க வைத்தியர்கள், தாதியர்கள், ஏனைய வைத்தியர்கள் என 90இற்கும் மேற்பட்ட பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்தவர்கள் இங்கு பணிபுரிவதாக அங்குள்ள வைத்தியர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த வெளிநாட்டு அமைச்சர்களின் விஜயத்தின்போது தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கும், அபிவிருத்திக்குமான அமைச்சர் ரோகித அபேகுணவர்தன, சப்ரகமுவ முதலமைச்சர் மகிபால ஹேரத், வடமாகாண ஆளுநர் டிக்சன் சரத்சந்திர ஜெயலபண்டார, வவுனியா அரசாங்க அதிபர் திருமதி சாள்ஸ் உட்பட முக்கிய அதிகாரிகளும், சர்வதேச தொண்டு நிறுவன அதிகாரிகளும் மனிக்பாம் பகுதிக்கு வருகை தந்திருந்தார்கள்.

# ஆலயங்களும் மகோற்சவங்களும்

கோயில்களே பக்திநெறியை வளர்க்கும் வாயில்களாகும். ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தெய்வீகத்தை உயிராகக் கொண்டு வாழ்க்கை நடத்தியவர்கள் தமிழர்கள். இவர்களுடைய நாகரிகம் சமய அடிப்படையிலேயே வளர்ச்சியுற்றது. மலையிலும், காட்டிலும், வயலிலும், கடற்கரையிலும் இறைவழிபாடு நடத்திய மக்கள் காலகதியில் நிலையான ஆலயங்களை அமைக்கத் தொடங்கினார்கள். அவற்றைச் சார்ந்து வாழ்த்த வாயும், நினைக்க நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனாக இறைவனை வழிபடுவதே மனிதப் பிறவியின் குறிக்கோள் எனக் கொண்டார்கள். இதன் பயனாகவே ஆலயங்கள் சிறப்படைந்தன.

உள்ளத்தின் வளர்ச்சிக்கும் உயிரின் வளர்ச்சிக்கும் வழிபாடு முக்கியமாகும். இறைவன் எங்கும் இருக்கின்றான் என்றாலும் கோயிலில்தான் அவனை உணரமுடிகிறது. பார்க்கும் இடம் எங்கும் நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தனாகிய அவன் கோயிலிலும் இருக்கிறான் என்பதை நம்பிக்கையோடு ஏற்றுக்கொள்கின்றோம். ஏனைய இடங்களில் இறைவன் விளங்குவதற்கும் கோயிலில் எழுந்தருளி இருப்பதற்கும் வேறுபாடு உண்டு. இறைவனை எங்கும் காணவேண்டுமானால் அவர்களுக்கு உயர்ந்த ஞான பக்குவம் வேண்டும். காணுகின்ற பொருள்கள் அனைத்திலும் கடவுளைக் காணுகின்ற ஞானிகளுக்கே அந்த நிலை ஏற்றது. ஆனால் அத்தகையோர் ஒரு சிலரே. ஏனையோர் கோயிலிலே அமைக்கப்பட்டிருக்கும் விக்கிரகங்களையும் வடிவங்களையும் காண்பதனால்தான் இறைவனை உணருகிறார்கள்.

''திருக்கோயில் உள்ளிருக்கும்
திருமேனி தன்னை
சிவனெனவே கண்டவர்க்குச்
சிவன்உறைவான் ஆங்கே''

ஞானக்கதிர்

என்ற வாக்கின்படி விக்கிரகத்தின் உள்ளே ஊடுருவி நின்று நாம் காணவேண்டிய உண்மைப் பொருளே இறைவனாகும்.

சிறப்பாக இறைவனைக் கற்கோயில்களிலும் அடியவர் உள்ளத்திலும் காண முடியும். நினைப்பவர் மனம் கோயிலாகக் கொள்பவன் அவன். அந்த நிலையிலே சிந்தித்த மனிதன் உடம்பின் அமைப்பையே கோயில் அமைப்பாகக் கொண்டு கட்டடங்கள் அமைத்து ஆலயங்களை அமைத்தான். பண்டைக் காலத்துத் தமிழ் மக்கள் வாழ்க்கையில் கோயில்களே முதன்மையான இடம்பெற்றிருந்தன. கோயிலுக்குரிய செலவுகள் போக எஞ்சிய பகுதி கலை வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது. ஏழைகளுக்கு விடுதிகளும், மருத்துவ விடுதிகளும், இசைக் கல்லூரிகளும் ஆலய நிர்வாகத்திலேயே இயங்கின. தஞ்சை இராசராசன் காலத்தில் இத்தகைய திருப்பணிகள் நடைபெற்றதாகச் சரித்திரச் சான்றுகள் உள. மக்கள் பணியே மகேசன் பணியாகப் பேணப்பட்டது. இதனால் ஆலயங்களும் மக்கள் வாழ்க்கையும் நெருங்கிய தொடர்புடையனவாக விளங்கின.

நல்லமுறையில் அழகான கட்டடங்களும் விக்கிரகங்களும் அமைத்தால் மட்டும் போதாது. விழாக்களும் நித்திய நைமித்தியங்களும் சிறப்புற நடைபெறுவது ஆலய வளர்ச்சிக்கு இன்றியமையாதன. காலத்துக்குக் காலம் குடமுழுக்காட்டி சிறப்பு விழாக்கள் செய்வது திருவருள் சக்தி பெறுவதற்கு இடமளிப்பதாகும். மந்திரம் மூலமாகவும் அபிஷேகம் மூலமாகவும் விக்கிரகத்திற்கு தெய்வீக சக்தி கொடுக்கப்பட வேண்டும். மின்சார இணைப்பும் மின்விசிறியும் சேர்ந்து காற்று வீசுவதற்கு உதவுவது போல மந்திரம் முதலிய கிரிகைகளும் விக்கிரகத்திலிருந்து தெய்வீக சக்தி வீசுவதற்கு உதவுகின்றன. மின்சார இணைப்பு இல்லாவிட்டால் மின் விசிறியால் பயனில்லை. அதேபோல் கிரியைகளோடு கூடிய பூசைகள் இல்லாவிட்டால் விக்கிரகத்திலிருந்து திருவருட்சக்தியை எதிர்பார்க்கமுடியாது. இதனாலேயே ஆலயங்களில் விழாக்கள் சிறப்பாக அமையவேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பகையை வளர்க்கும் அணுகுமுறைகளே அரசிடம்

## ஐ.தே.கட்சி கடும் கண்டனம்

கொழும்பு, மே 1

''இலங்கை அரசு இராஜதந்திர அணுகுமுறையைப் புரிந்து கொள்ளாது- முன்பின் யோசிக்காது சர்வதேசத்துடன் சண்டை போட்டு வீண் பகைமையை வளர்த்துக் கொள்கிறது.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதன் விளைவுகளை அப்பாவிகளான இந்நாட்டு மக்களே அனுபவிக்க வேண்டிவரும் என்று அக்கட்சி எச்சரித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அக்கட்சியின் எம்.பியும், பொதுச் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்கவே இதனைக் கூறினார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கை அரசு சர்வதேசத்துடன் ஒன்றிணையாது தனிப் பயணம் செய்கிறது. முன்பின் விளைவுகள் பற்றி யோசிக்காது சர்வதேசத்துடன் முரண்பட்டுக்கொண்டு நிற்கின்றது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ள விருந்த சுவீடன் நாட்டு வெளிவிவகார அமைச்சருக்கு இலங்கை அரசு அனுமதி மறுத்துள்ளது. இதனால் இரு நாடுகளுக்குமிடையிலான இராஜதந்திர உறவில் விரிசல் ஏற்படத் தொடங்கியுள்ளது.

ஆனால், இலங்கை அரசு இப்போது அதற்கு வேறொரு காரணத்தைச் சொல்கிறது. எதைப்பற்றியும் யோசிக்காது சண்டியன்போல் சர்வதேசத்துடன் மோதிவிட்டு பிறகு அதை மாற்றிப்போடுவதைத்தான் இலங்கை அரசு செய்து கொண்டிருக்கின்றது.

இலங்கை அரசுக்கு சிறிதளவேனும் இராஜதந்திர அணுகுமுறைகள் தெரியாது. சர்வதேசத்துடன் ஒத்து நிற்காமல் தனியாகவே பயணம் செய்ய முற்படுகின்றது.

இந்தச் செயற்பாடுகள் எமது நாட்டுக்கு நல்லதல்ல. இதன் விளைவுகளை எமது மக்கள்தான் அனுபவிக்க வேண்டிவரும் என்றார். (சி)

---

## 31ஆம் நாள் நினைவு தினமும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு 04.10.1933

உதிர்வு 01.04.2009



### அமரர் தம்பு தியாகராசா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)
B.A.(Hons) (Mad), B.A. (Spc)
Dip. in Edu. (cey)

கடந்த 01.04.2009 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் தம்பு தியாகராசா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று 01.05.2009 வெள்ளிக் கிழமை எமது இல்லத்தில் இடம்பெறவிருப்பதால் இந்நிகழ்விலும் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

22. இலந்தைக் குளம் வீதி,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்.

---

## 6 ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

இலுப்பையடிப் பிள்ளையார் துணை



கோப்பாய் - இணுவில்

### அமரர் கந்தையா ஆறுமுகம்

(ஆசிரியர்)

தவப்பேறு :-21.12.1918
சிவப்பேறு :-08.05.2003

எம்மை ஆற்றுப்படுத்தி,
நல்வாழ்வு தந்த எந்தையே!
என்றும் உங்களை நினைத்து
வணங்குகின்றோம்.

28, கைலாச பிள்ளையார் வீதி,
நல்லூர்.

மனைவி- திருமதி சரஸ்வதி ஆறுமுகம்
(இளைப்பாறிய ஆசிரியை),
குடும்பத்தவர்கள்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



''வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன்,
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்படும்''

மண்ணில்:1936.06.29



விண்ணில்:2008.05.11
திதி:-ஸப்தமி

### அமரர் சின்னார் தேவராசா

(முன்னாள் சாரதி, சிமெந்துக் கூட்டுத்தாபனம்-காங்கேசன்துறை )

ஆண்டு ஒன்று சென்றதையா!
எம்மை விட்டு நீர் பிரிந்து
ஆயிரம் உறவுகள் எம்மருகில்
இருந்தாலும் அவை அனைத்தும்
உங்கள் அன்புக்கு ஈடாகுமோ?
உங்கள் ஆத்மா சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நி.மு.: குருவீதி,
கே.கே.எஸ்.வீதி,
த.மு.: சம்பந்தபிள்ளையார் வீதி,
ஆனைக்கோட்டை.

மனைவி-இரத்தினபாக்கியம்,
மகன்-தர்மசீலன் [ஜேர்மனி], மருமகள்-கனித்திரா [ஜேர்மனி],
பேரப்பிள்ளைகள்- பவித்திரன், பவதாரணி,
பகலவன், கலைவிழி [ஜேர்மனி].

---

சிவமயம்



## எந்தை விட்டகலா ஓராண்டு நினைவஞ்சலி

### திருமதி துரைராஜா தேவகி

(ஓய்வுபெற்ற தொலைக் கல்வி போதனாசிரியையும்
யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய
பிரதி அதிபரும்)

தோற்றம் 27.04.1942

மறைவு 30.04.2008

காலத்தால் மறக்க முடியாத தாயே!
பாசத்தால் எம்மை கட்டுண்டறுத்த தாயே!
வந்தாரை வாழவைக்கும் பெருமனம் படைத்த தாயே!
பிள்ளைகளையெல்லாம் உன் பிள்ளை போல் காத்த தாயே!
காலமெல்லாம் கல்விக்கே சேவை செய்த தாயே !
நாம் இனி உம் திருமுகத்தை எப்போது காண்போம் தாயே!
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போம்.

அன்னாரின் நினைவையொட்டி இன்று (01.05.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புரிமையுடன் அழைக்கின்றோம் .

பருத்தித்துறை லேன், அரியாலை,
யாழ்ப்பாணம்.

கணவர், உற்றார்,
உறவினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சுடர் சிந்தனை :- '' அன்பினால் உலகையே வெல்ல முடியும் ''

ஆசிரியர் பொன்.சக்திவேல் தொகுத்து வழங்கும்

# இலகுவழி ஆங்கிலம்

**BY Pon. Sakthivel AIAB (Lond) ACEA**
**(Lond) Special English Trained Teacher (E.S.U Sri Lanka.)**

உச்சரிப்பு சரியாக அமைவதற்கு சொற்களின் உச்சரிப்பை பிரிப்பதை (Syllable) என அழைப்பர். அதற்கிணங்க முக்கியமான சொற் களை கீழே காணலாம். இவை Day to Day Conversation நாளாந்த பாவனை வாக்கியங்களில் வரும். இவற்றைப் பலமுறை படித்து பழக்கப்படுத்திக் கொள்ளவும்.

**23.04.2009 Continuity.....**

| | சொற்கள் | சொற்கள் | உச்சரிப்பு | கருத்து |
|---|---|---|---|---|
| 36. | Babble | Bab - ble | பப்பிள் | மழலைப்பேச்சு |
| 37. | Babbler | Bab - bler | பப்பிளர் | பிதற்றல்காரன் |
| 38. | Bachelor | Bach - elor | பச்சுலர் | திருமணம் புரியாதவன் |
| 39. | Backbone | Back - bone | பாக்போன் | முதுகெலும்பு |
| 40. | Background | Back - ground | பக்கிரவுண்ட் | பின்னணி |
| 41. | Backing | Back - ing | பாக்கிங் | ஆதரவாளர் |
| 42. | Balance | Bal - ance | பலன்ஸ் | மிகுதி |
| 43. | Barefoot | Bare - foot | பார்புட் | வெறுங்கால் |
| 44. | Bargain | Barg - ain | பாகையின் | பேரம்பேசல் |
| 45. | Beautiful | Beaut - iful | பியூட்டிபுல் | அழகான |
| 46. | Behaviour | Behav - iour | பிகேவியர் | நடத்தை |
| 47. | Believable | Believ - able | பிலிவெபிள் | நம்பக்கூடிய |
| 48. | Birthday | Birth - day | பேத்டே | பிறந்ததினம் |
| 48. | Bookkeeper | Book - keeper | புக்கீப்பர் | கணக்கு எழுதுபவர் |
| 49. | Breakable | Break - able | பிரேக்கபிள் | உடையக்கூடிய |
| 50. | Breakfast | Break - fast | பிரேக்பாஸ்ட் | காலை உணவு |
| 51. | Briefcase | Brief - case | பிறிப்கேஸ் | சிறியபெட்டி |
| 52. | Brother - in - law | Broth - er - in law | பிறதரின்லோ | மைத்துனன் |
| 53. | Butterfly | Butt - erfly | பட்டர்பிளை | வண்ணத்துப்பூச்சி |
| 54. | Buyer | Buy - er | பையர் | வாங்குபவர் |
| 55. | Calculation | Calcula - tion | கல்குலேசன் | கணக்கிடல் |
| 56. | Calendar | Cal - endar | கலண்டர் | நாட்காட்டி |
| 57. | Calling | Call - ing | கோலிங் | அழைத்தல் |
| 58. | Calmly | Calm - ly | காம்லி | அமைதியாக |
| 59. | Cancel | Can - cel | கன்சல் | ரத்துச்செய் |
| 60. | Candle | Can - dle | கன்டில் | மெழுகுவர்த்தி |
| 61. | Capacity | Capa - city | கப்பசிட்டி | கொள்ளவு |
| 62. | Carefully | Care - fully | கெயர்புலி | ஜாக்கிரதையாக |
| 63. | Carpenter | Carp - enter | காப்பென்ரர் | தச்சன் |
| 64. | Casually | Ca - sually | கசுவலி | தற்செயலாக |
| 65. | Celebrate | Cel - ebrate | செலிபிரேட் | கொண்டாடு |
| 66. | Certainly | Cert - ainly | சேட்டின்லி | நிச்சயமாக |
| 67. | Certificate | Certif - icate | சேட்டிபிக்கட் | நற்சான்றிதழ் |
| 68. | Challenge | Chall - enge | சலன்ச் | அறைகூவல் |
| 69. | Circle | Cir - cle | சேர்க்கில் | வட்டம் |
| 70. | Clarify | Cla - rify | கிளாரிபை | தெளிவாக்கு |
| 71. | Clarification | Clarifica - tion | கிளரிபிகேசன் | தெளிவுரை |
| 72. | Classification | Classifica - tion | கிளசிபிகேசன் | வகைப்படுத்தல் |
| 73. | Clearance | Clear - ance | கிளியரன்ஸ் | சுத்தம்செய்தல் |
| 74. | Cleverly | Clev - erly | கிளவர்லி | திறமையாக |
| 75. | Cockfight | Cock - fight | கொக்பைட் | கோழிச்சண்டை |
| 76. | Collaborate | Collab - orate | கோலப்பிரேட் | கூடிவேலைசெய் |
| 77. | Collect | Coll - ect | கலக்ட் | ஒன்றுசேர் |
| 78. | Columnist | Colum - nist | கொலம்னில்ட் | பத்திஎழுத்தாளர் |
| 79. | Comedian | Comed - ian | கொமடியன் | கோமாளி |
| 80. | Comfortable | Com - fortable | கொம்பட்டபிள் | சுகமான |
| 81. | Commission | Commi - ssion | கொமிஷன் | தரகு |
| 82. | Commissioner | Commi - ssioner | கொமிஷனர் | நிறைவேற்று அதிகாரி |
| 83. | Committee | Committ - ee | கொமிட்டி | ஆலோசனைச்சபை |
| 84. | Composing | Compos - ing | கொம்போசிங் | ஒழுங்குபடுத்தல் |
| 85. | Concentrate | Con - centrate | கொன்சின்றேட் | ஒருமுனைப்படுத்து |
| 86. | Condition | Condi - tion | கொன்டிஷன் | நிபந்தனை |
| 87. | Condolence | Condol - ence | கொன்டோலன்ஸ் | அனுதாபம் |
| 88. | Conference | Con - ference | கொன்பரன்ஸ் | கூட்டம் |
| 89. | Confidentially | Confiden - tially | கொன்பிடன்ஷலி | நம்பகமான |
| 90. | Confusion | Confu - sion | கொன்பயூசன் | குழம்பியநிலை |
| 91. | Congratulation | Congratula - tion | கொன்கிறாசுலேசன் | வழ்த்துக்கூறல் |
| 92. | Connection | Connec - tion | கொனக்ஷன் | இணைப்பு |
| 93. | Considerable | Consid - erable | கொன்சிடறபிள் | கவனிக்கத்தக்க |
| 94. | Convenient | Conven - ient | கொன்வினியன்ட் | வசதியான |
| 95. | Conversation | Conversa - tion | கொன்வசேஷன் | உரையாடல் |
| 96. | Cooperate | Co - op - erate | கோப்பிரேட் | ஒத்துழை |
| 97. | Correspondence | Correspon - dence | கொறஸ்பொன்டஸ் | கடிதப்போக்குவரத்து |
| 98. | Currency | Cu - rrency | கரன்ஸி | காகிதநாணயம் |
| 99. | Daily | Dail - y | டெயிலி | நாளாந்தம் |
| 100. | Damage | Dam - age | டமிஜ் | நஷ்டம் |
| 101. | Dancer | Dan - cer | டான்ஸர் | நடனம் ஆடுபவர் |
| 102. | Danger | Dan - ger | டேஞ்சர் | அபாயம் |
| 103. | Darling | Darl - ing | டாலிங் | அன்புக்குரிய |
| 104. | Decently | De - cently | டீசன்ட்லி | மரியாதையாக |
| 105. | Decoration | Decora - tion | டெக்கறேசன் | அலங்கரித்தல் |
| 106. | Dedicate | Ded - icate | டிக்கேட் | அர்ப்பணம்செய் |
| 107. | Definite | Def - inite | டெபினிட் | தீர்மானமாக |
| 108. | Delegate | Del - egate | டெலிகேட் | பிரதிநிதி |
| 109. | Delicious | Deli - cious | டிலிஷெஸ் | சுவையான |
| 110. | Delightful | Delight - ful | டிலைட்புல் | மகிழ்ச்சிதரும் |
| 111. | Delivery | Deliv - ery | டிலிவரி | வழங்குதல் |
| 112. | Democracy | Democ - racy | டிமோகிரசி | ஜனநாயகம் |
| 113. | Demolish | Demol - ish | டிமொலிஷ் | இடித்துத்தள்ளு |
| 114. | Dependent | Depen - dent | டிபெண்ட்டன்ற் | தங்கியிருத்தல் |
| 115. | Describable | Describ - able | டிஸ்கிறைபபிள் | விவரிக்கத்தக்க |
| 116. | Desirous | Desir - ous | டிசயரஸ் | ஆவலாக |
| 117. | Detective | Detec - tive | டிரெக்ரிவ் | துப்பறிபவன் |
| 118. | Development | Devel - opment | டிவலப்மெண்ட் | அபிவிருத்தி |
| 119. | Dialogue | Di - alogue | டயலொக் | உரையாடல் |
| 120. | Difference | Diff - erence | டிபரன்ஸ் | மாறுபட்டநிலை |
| 121. | Diphthong | Diph - thong | டிப்தொங் | ஈருயிர் சந்தி |
| 122. | Disadvantage | Disadvan - tage | டிஸ்அட்வான்டேஜ் | பிரதிகூலம் |
| 123. | Disappoint | Disap - point | டிஸப்பொன்ட் | ஏமாறல் |
| 124. | Disaster | Disas - ter | டிசாஸ்டர் | பேராபத்து |
| 125. | Disciplinary | Dis - ciplinary | டிசிப்பிளனரி | நல்லொழுங்குமுறை |
| 126. | Discount | Dis - count | டிஸ்கவுண்ட் | கழிவு |
| 127. | Discovery | Disco - very | டிஸ்கவரி | கண்டுபிடித்தல் |
| 128. | Disgraceful | Disgrace - ful | டிஸ்கிரேஸ்புல் | அகௌரவமான |
| 129. | Dishonest | Dishon - est | டிஸ்ஒனிஸ்ட் | வஞ்சகமான |
| 130. | Dishonour | Dishon - our | டிஸ்ஒணர் | அவமரியாதை |
| 131. | Dislike | Dis - like | டிஸ்லைக் | விரும்பாதே |
| 132. | Dispensary | Dispen - sary | டிஸ்பென்சரி | மருத்துவசாலை |
| 133. | Disgraceful | Disgrace - ful | டிஸ்கிறாஸ்புல் | வெட்கக்கேடான |
| 134. | Dissatisfied | Dissat - isfied | டிஸ்சற்றிஸ்பைட் | திருப்தியில்லாத |
| 135. | Distribute | Distrib - ute | டிஸ்ட்றிபியூட் | பங்கிடுதல் |
| 136. | Dividend | Di - vidend | டிவிடன்ட் | பிரிக்கப்பட்ட |
| 137. | Document | Doc - ument | டொக்யுமெண்ட் | ஆவணம் |
| 138. | Donation | Dona - tion | டொனேசன் | தமதி |
| 139. | Doubtful | Doubt - ful | டவுட்புல் | தகமான |
| 140. | Drainage | Drain - age | டெரின்னெஸ் | வ[illegible]கால்திட்டம் |
| 141. | Drinkable | Drink - able | டிறிங்கபிள் | குடிக்கக்கூடிய |
| 142. | Duration | Dura - tion | டுறேஷன் | நீடிக்கும் காலம் |
| 143. | Duplicator | Duplica - tor | டுப்பிளிக்கேற்றர் | பிரதி எடுக்கும் இயந்திரம் |
| 144. | Durability | Durabil - ity | டியூரபில்லிட்டி | நீண்டநாள் உழைக்கும் |
| 145. | Durability | Dyn - amite | டையினமெட் | கடுமையான வெடி |
| 146. | Dynasty | Dyn - asty | டினெஸ்டி | பரம்பரை |
| 147. | Dysurity | Dysu - rity | டிசூரிட்டி | மூத்திரவியாதி |
| 148. | Eager | Ea - ger | எகர் | ஆவலுள்ள |
| 149. | Early | Ear - ly | ஏர்லி | முன்பாக |
| 150. | Earning | Earn - ing | ஏர்னிங் | வருமானம் |
| 151. | Earth quake | Earth - quake | ஏர்த்குவாக் | பூமி அதிர்ச்சி |
| 152. | Economic | E - co - nom - ic | எக்கொனமிக் | பொருளாதாரம் |
| 153. | Editor | Ed - i - tor | எடிட்டர் | பத்திரிகை ஆசிரியர் |
| 154. | Editorial | Ed - i - tor - i - al | எடிரோரியல் | ஆசிரியர் உரை |
| 155. | Education | Ed - u - ca - tion | எடியூகேசன் | கல்வி |
| 156. | Effect | Ef - fect | எபக்ட் | விளைவு |
| 157. | Effective | Ef - fect - tive | எபக்ரீவ் | செயலூக்கம் உடைய |
| 158. | Efficiency | Ef - fi - cien - cy | எபிஷன்சி | இயங்கும் திறன் |
| 159. | Electricity | E -lec -tric - i -ty | எலக்ரிசிட்டி | மின் ஆற்றல் |
| 160. | Elegant | El - e - gant | எலிகண்ட் | அழகுடைய |
| 161. | Eligible | El - i - gi - ble | எலிஜிபில் | தகுந்த |
| 162. | Elocution | El - o - cu - tion | எலெகுயுசன் | சொல்திறன் |
| 163. | Embassy | Em - bas - sy | எம்பசி | தூதரகம் |
| 164. | Emblem | Em - blem | எம்பிளெம் | சின்னம் |
| 165. | Employ | Em - poly | எம்புளோய் | ஊதியத்திற்கு அமர்த்து |
| 166. | Encourage | En - cour - age | என்குறிஜ் | ஊக்கமூட்டு |
| 167. | Encyclopeadia | En-cy-clo-pea-dia | என்சிகிளொபீடிய | கலைக் களஞ்சியம் |
| 168. | Endeavour | En - deav - our | என்டோவர் | முயற்சி |
| 169. | Endorse | En - dorse | என்டோர்ஸ் | ஆதரவுகொடு |
| 170 | Enemy | En - e - my | எனிமி | எதிராளி |
| 171. | Energy | En - er - gy | எனர்ஜி | ஊக்கம் |
| 172. | Engage | En - gage | என்கேச் | திருமண உறுதி |
| 173. | Enjoy | En - joy | என்யோய் | மகிழ்ச்சிகொள் |
| 174. | Enlarge | En - large | என்லார்ச் | பெரிதாக்கு |
| 175. | Enough | E - nough | இன்னாவ் | போதுமான |
| 176. | Enrich | En - rich | என்றிச் | உயர்த்து |
| 177. | Ensure | En - sure | என்சுவர் | உறுதிப்படுத்து |
| 178. | Entertain | En - ter - tain | என்ரரெயின் | உபசரி |
| 179. | Entire | En - tire | என்ரயர் | முழுமையான |
| 180. | Environment | En-vi-ron-ment | என்விறன்மென்ட் | சுற்றாடல் |
| 181. | Equality | E - qual - i - ty | இகுவலிட்டி | சமநிலை |
| 182. | Escape | Es - cape | எஸ்கப் | தப்பிப்போ |
| 183. | Essential | En - sen - tial | எசன்சல் | மிகமுக்கியமான |
| 184. | Estimate | Es - ti - mate | எஸ்ரிமேட் | மதிப்பிடு |
| 185. | Ethicks | Eth - icks | எதிக்ஸ் | ஒழுக்கவியல் |

இவற்றின் தொடர்ச்சி எதிர்வரும் வெள்ளிக்கிழமை இலகுவழி ஆங்கிலம் - 17 இல் வெளிவரும்......

மேலதிக தொடர்புகளுக்கு :-
உதயன் கல்விச்சுடர்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி -
071-4273035, 021-2223837

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெஸ்ரேன் யூனியன் பணப் பரிமாற்ற சேவை நிலையங்கள் யாழ்.ப.நோ.கூ.சங்கம், உடுப்பிட்டி கிராமிய வங்கி ஆகியவற்றில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. யாழ்.ப.நோ.கூ.சங்கத்தில் சங்கத்தின் பொது முகாமையாளர் து.மனோகரன் மங்கள விளக்கேற்றுவதையும் சங்கத் தலைவர் ப.கிரிதரன் நிலையத்தைத் திறந்து வைப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். உடுப்பிட்டி கிராமிய வங்கியில் முதல் வாடிக்கையாளருக்கு உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.கணபதிப்பிள்ளை பணப்பரிமாற்றத்தை ஆரம்பித்து வைப்பதை மூன்றாவது படத்தில் காணலாம். (111-224-253)

# தொடரும் ஷெல் வீச்சுக் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை!

## வெளிவிவகாரப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே.1

இலங்கையில் மோதல் நடைபெறும் பகுதிகளில் தொடர்ந்தும் ஷெல் வீச்சுகள் இடம்பெறுகின்றன என வெளியாகியுள்ள தகவல்கள் குறித்து அமெரிக்கா கவலை வெளியிட்டுள்ளது. மோதலில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினரும் தாம் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும் என்று அமெரிக்கா கேட்டுள்ளது.

- இவ்வாறு அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வூட் தெரிவித்துள்ளார்.

வாஷிங்டனில் நடைபெற்ற பத்திரிகையாளர்கள் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை நிலைவரம் குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சருடன் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் தொலைபேசியில் உரையாடினார் எனவும் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

சுவீடன் வெளிவிவகார அமைச்சருக்கு விசா மறுக்கப்பட்ட விடயம் தொடர்பான விவகாரங்கள் குறித்து எமக்கு எதுவும் தெரியாது. இது குறித்து மேலதிக விவரங்களைப் பெற இலங்கை அரசுடனோ அல்லது சுவீடனுடனோ தொடர்புகொள்ள இருக்கிறோம். மோதல் நடைபெறும் பகுதிகளில் கடுமையான ஷெல் வீச்சுகள் இடம்பெறுகின்றன என வெளியான உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் குறித்து நாங்கள் கவலையடைந்துள்ளோம்.

. இலங்கை அரசும் விடுதலைப்புலிகளும் பொதுமக்களை பாதுகாப்பதற்காக தங்களால் முடிந்தளவு செயற்படுவதை உறுதி செய்ய வேண்டும்.

மோதல் நடைபெறும் பகுதிக்கு சில விநியோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை அறிகிறோம். இதனை நாங்கள் வரவேற்கிறோம். சில உணவு விநியோகங்கள் இடம்பெற்றன என்று அறிகிறோம்.

இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் மோதலை நிறுத்துமாறும் பொது மக்களைப் பாதுகாக்க அனைத்தையும் செய்யுமாறும் மோதலால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அப்பகுதிக்குள் மருந்துப் பொருள்களை அனுமதிக்குமாறும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளும் எண்ணமெதுவும் அமெரிக்க அரசின் மூத்த அதிகாரிகள் எவருக்குமில்லை.

வெளிவிவகார அமைச்சர் சமீபத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சருடன் பேசினார். இலங்கை நிலைவரம் குறித்து பல தொலைபேசி உரையாடல்கள் இடம் பெற்றுள்ளன.

இலங்கையின் மனிதாபிமான நிலை குறித்து நாங்கள் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம்.

தமது கடப்பாடுகளையும் நிறைவேற்றுமாறு இரு தரப்பினருக்கும் நாங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளோம்.

அவர்கள் தாங்கள் சில விடயங்களை செய்யமாட்டோம் எனத் தெரிவிக்கின்றனர்.

இலங்கை அரசு மேலதிக மோதலில் ஈடுபடப் போவதில்லை என தெரிவிக்கின்றது. விடுதலைப் புலிகளும் தமது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ள போவதில்லை என தெரிவித்திருக்கின்றனர். அவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும்.

மிக முக்கியமாக - தெளிவான விதத்தில், ஆபத்துக்குள்ளாகியுள்ள மக்களை அவர்கள் பாதுகாக்க வேண்டும்.

இரு தரப்பினரும் இராணுவ நடவடிக்கைகளை கைவிடுவதையும் மோதல் நடைபெறும் பகுதிகளிலுள்ள மக்களுக்குத் தேவையான விநியோகங்களை சென்றடைவதையும் உறுதி செய்ய வேண்டும். இதற்காக நாங்கள் இராஜதந்திர ரீதியில் முயற்சிகளை மேற்கொள்வோம்.

இலங்கை அரசுக்கு சீனா ஆயுதங்களை விநியோகம் செய்வது குறித்து நாங்கள் அறிந்திருக்கவில்லை. எனினும், இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்படவேண்டும். பொதுமக்கள் பாதுகாக்கப்படவேண்டும். இதுவே தற்போது எமது முக்கிய கவலைக்குரிய விடயமாகவுள்ளது.

மேலும் மோதலிற்குப் பிந்திய சூழ்நிலை குறித்தும், நாங்கள் எப்படி உதவலாம் என்றும் ஆராய்கிறோம் - என்றார். (சி)

## சிங்களமொழி டிப்ளோமா கற்கைக்கான பரீட்சை

யாழ்ப்பாணம்,மே1

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் சிங்கள மொழிச் சான்றிதழ் வழங்கல், டிப்ளோமா கற்கை நெறிக்கான இறுதிப்பரீட்சை என்பன இந்த மாத இறுதிவாரத்தில் நடைபெறவுள்ளதாகப் பிராந்திய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (204)


### ஸ்ரீ அம்மா பகவான் அற்புதப் பொருள் வழங்கல்



சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் ஸ்ரீ மூர்த்தியில் இருந்து புதுவருட தினம் முதல் அற்புதமாக வருகின்ற வீபூதி, சந்தனம், குங்குமம் என்பன எதிர்வரும் 05.05.2009 செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணிமுதல் இடம்பெறும் கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வில் வழங்கப்படவுள்ளன. நேரடியாக வருகைதந்து பார்வையிட்ட பக்தர்கள் வருகைதரவும்.

தொடர்புக்கு: பொறுப்பாளர்.
தொ.பே. 060 221 7352
சுழிபுரம் சந்தி அருகில், சுழிபுரம்.



### நெஞ்சை விட்டகலா நீர் நிறைந்த விழிகளுடன் ஓராண்டு



தோற்றம் 26 . 11 . 1935 — மறைவு 11 . 05 . 2008

அமரர் வைத்திய கலாநிதி நவமலர் கனகரட்ணம்

(முன்னாள் பணிப்பாளர் - யாழ்.போதனா வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி - தெல்லிப்பழை. முன்னாள் பிராந்தியத் தலைவர் - லயன்ஸ் கழகங்கள்)

அன்புடைய தாயாய் அவனிக்கு சேவை செய்ய
வந்துதித்த அம்மா நவமலர் கனகரட்ணம்
நன்மையே நாற்பத் தோராண்டு நற்பெரும் சேவையாற்றி
எம்மையே பிரிந்த தேனோ ஏங்கியே தவிக்கின்றோமே
வைத்தியச் சேவை ஒன்றே வாழ்வென வரித்துக்கொண்ட
உத்தம தாயே உங்கள் பொன்னடி தொழுகின்றோமே.

ஓம் சாந்தி!

சுதுமலை மேற்கு, மானிப்பாய். (84751)
அன்னாரது பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.



### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பம், கனடா பிரஜாவுரிமை, பூசம் 2 ஆம் பாதம், 28 வயது மணமகனுக்கு மணமகள் தேவை.
தொடர்பு:- 0777066487

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, கலட்டி, இலட்சுமணன் தோட்டத்தில் வீடு கட்டக்கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 1298201

(சி/558263) ராஜா

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள DK மொடல் (75000 ரூபா)DL மொடல் (30 000 ரூபா) றலி சைக்கிள்கள் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- வை.தர்மபாலச்சந்திரன், பறளாய் வீதி, சுழிபுரம்.
பார்வையிடும் நேரம் :- காலை 6 .00 -7.45, மாலை:- 5 .00-6.30மணி

### விற்பனைக்குண்டு

பருத்தித்துறை, தும்பளை வீதியில் மூன்றாம் குறுக்குத்தெருவிற்கு அருகே ஒரு பரப்பு விஸ்தீரணமுள்ள காணியுடன் சகல நவீன வசதிகளையும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு. இடைத்தரகர்கள் தேவையில்லை. விபரங்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.2263928



### நன்றி கூறுகின்றோம்



சிவஸ்ரீ வைத்திலிங்க ஐயா
இராஜேஸ்வரக் குருக்கள்

நேற்று (30.04.2009) வியாழக்கிழமை எம்மைக் குருத்துவத்திற்கான குருவாக்கிய எமது குரு சிவஸ்ரீ சோ.நடராஜாக்குருக்கள் (B.A. உபஅதிபர்) அவர்களுக்கும் வைபவத்திற்கு உரிய நேரத்தில் வருகைதந்து ஆசி வழங்கிய ஏனைய குருமாருக்கும் எமது வைபவத்தை சிறப்பாக நடத்திய சுப்பர்மடம் முனீஸ்வரர் ஆலய நிர்வாகசபை, அடியார்கள், தொண்டர்கள் ஆகியோருக்கும் எம்மை வாழ்த்திய ஏனைய உறவினர்களுக்கும் வாழ்த்து மடல்களை வழங்கிய அன்பர்களுக்கும் மற்றும் மங்களவாத்தியம், பந்தல் ஏனைய சேவை வழங்குநர்களுக்கும் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு அனைவருக்கும் இறையருள் கிட்டவேண்டும் என்றும் இந்த நாட்டு மக்கள் சாந்தியும் சமாதானமுமாக வாழ்வதற்கு இறைவனை வேண்டுகின்றோம்.

சிவஸ்ரீ வை.இராஜேஸ்வரக்குருக்கள்,
(சுப்பர்மடம் முனீஸ்வரர் தேவாலய பிரதமகுரு).



### ஓராண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில் 21 ★ 04 ★ 1925 — இறைவன் பாதத்தில் 11 ★ 05 ★ 2008

அமரர் கந்தப்பு சபாரத்தினம்

திதி: 01.05.2009 (வளர்பிறை ஸப்தமி)

சுன்னாகம் - தாளையடி ஹரிஹர புத்திர ஐயனாரின்திருவடிப் பேறடைந்த எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு தின நிகழ்வை முன்னிட்டு அவரின் ஆத்மசாந்திக்காக கதிர்காம வேலாயுதப் பெருமானையும் தாளையடி ஐயனையும் பிரார்த்திக்கின்றோம்.

கொத்தியாவத்தை, சுன்னாகம். (சி/558257)
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழியர் சேமலாப நிதியைப் பெறத் தகுதியிருந்தும் அங்கத்தவர்கள் அதனை இன்னும் பெறவில்லை

## உதவித் தொழில் ஆணையாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம்,மே 1

ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்கள் தமது ஊழியர் சேமலாப நிதிப் பணத்தை மீளப் பெறுவதற்குத் தகுதி இருந்தும் அதனை மீளப் பெறவில்லை என்று உதவித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

ஊழியர் சேமலாபநிதி அங்கத்தவர்கள் தமது ஊழியர் சேமலாப நிதிப் பணத்தினை மீளப்பெறுவதற்கு தகுதி இருந்தும், அதனை மீளப்பெறாமல் உள்ளமை தெரியவந்துள்ளது.

தொழில் நிலையங்களில் வேலை செய்து உரிய வயதினை அடைய முன்னரே வேலையை விட்டவர்கள் தாம் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் என்பதை மறந்து மீளப் பெறாமல் விடுகின்றனர்.

இவ்வாறான அங்கத்தவர்கள் தம்மிடம் அதற்கான எவ்விதமான சான்றுகளும் இல்லையே என மனம் தளராமல் எமது தொழில் அலுவலகத்திற்கு வருகைதந்தால் எமது அலுவலகம் அவர்களுக்கு உதவத் தயாராக இருக்கின்றது.

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர்கள் தமது ஊழியர் சேமலாப நிதியினை மீளப்பெறமுடியும்.

* பெண்கள் 50 வயதினையும் ஆண்கள் 55 வயதினையும் பூர்த்தியடைந்து வேலையில் இருந்து ஓய்வுபெறும் போது பெற்றுக்கொள்ளமுடியும்.
* பெண்கள் திருமணம் செய்யும் சந்தர்ப்பங்களில் திருமணப்பதிவு நடைபெற்ற தினத்திற்கு முன்னுள்ள 3 மாத காலத்திலும் திருமணப்பதிவு நடைபெற்ற திகதிக்குப் பின்னுள்ள 5 வருடகாலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் வேலையில் இருந்து விலகும் போது ஊழியர் சேமலாப நிதியினை மீளப்பெறமுடியும்.
* ஊழியர் சேமலாப நிதி அங்கத்தவர் ஒருவர் ஓய்வூதிய உரித்துடைய அரச பதவி ஒன்றில் இணையும் போது ஊழியர் சேமலாப நிதியினை மீளப்பெறமுடியும்.
* ஊழியர் சேமலாநிதி அங்கத்தவர்கள் இலாபமடையும் போது உரிய வயதினை அடைய முன்னர் மருத்துவச் சான்றிதழ்களைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஊழியர் சேமலாப நிதியினை மீளப்பெறமுடியும்.

மேற் கூறிய நிபந்தனைகளில் ஏதாவது ஒன்றின் கீழ் ஊழியர் சேமலாப நிதியை மீளப்பெற தகுதியுடையவர்கள் வீரசிங்கம் கட்டடத்தில் 4ஆம் மாடியில் உள்ள தொழில் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு ஊழியர் சேமலாப நிதியை மீளப் பெற நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகின்றேன்- என்றுள்ளது. (203)

## இலங்கை அதிபர் சேவையில் உள்ளோர் விவரம்;

# கல்வி அமைச்சின் இணையத்தளத் தகவல்களில் பெரும்பாலானவை ஒப்புநோக்கித் திருத்தப்படவில்லை

அச்சுவேலி,மே 1

இலங்கை அதிபர் சேவையில் உள்ளவர்களின் விவரங்களை கணனிமயப்படுத்தி சேவை மூப்பு திறமை அடிப்படையில் பதவியுயர்வு வழங்குவதற்கு வசதியாக கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட தகவல்களை ஒப்புநோக்கி சீர்படுத்துவதற்கு பெரும்பாலான அதிபர்கள் விண்ணப்பிக்கவில்லை.

தமது விவரங்களில் உள்ள தவறுகளைச் சீர்செய்வதற்கு உரியமுறையில் சரியான தகவல்களை வழங்கி உதவாதவர்களுக்கு எதிர்காலத்தில் பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்வதில் தடங்கல்கள் ஏற்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட தகவல்களில் பெயர், பால், கல்வித்தகைமை, நியமனத் திகதி, பதவியுயர்வு பெற்ற திகதி, சேவை விவரம் உள்ளிட்ட பல்வேறு விதமான தவறுகள் காணப்பட்டன.

மேற்படி விவரங்களில் தவறு காணப்படின் உரிய படிவத்தில் தவறுகளைச் சுட்டிக்காட்டி திருத்தமான விவரங்களைச் சமர்ப்பிப்பதற்கு விண்ணப்பப் படிவமும் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருந்தது.

''பெரும்பாலான அதிபர்கள் தமது விவரங்களைப் பார்வையிட்டு ஒப்புநோக்கி சீர்செய்வதற்கு சரியான விவரங்களை உரிய காலப்பகுதியில் கல்வி அமைச்சுக்கு வழங்கவில்லை.

கணனி மயப்படுத்தப்பட்ட தகவல்களின் அடிப்படையிலேயே எதிர்காலத்தில் சேவைமூப்பு திறமை அடிப்படையிலான பதவி உயர்வுகள் வழங்கப்படும்.

இந்தவகையில் ஏற்படவிருக்கும் தவறுகளுக்குச் சம்பந்தப்பட்டவர்களே பொறுப்பாவர்'' எனக் கல்வி அமைச்சின் உயர் அதிகாரி தெரிவித்தார்.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 3 இலிருந்து வகுப்பு 2:IIஇற்கு; வகுப்பு 2:II இலிருந்து வகுப்பு 2:I இற்கு; வகுப்பு 2:I இலிருந்து தரம் Iஇற்கு; தரம் I இலிருந்து கல்வி நிர்வாக சேவை என்பனவற்றுக்கு சேவைமூப்பு திறமை அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது. (203-11)

# நெல்லியடி ம.வி யில் தங்கியுள்ளோரில் 462 பேர் 18 வயது வரையான சிறுவர்கள்

கரவெட்டி, மே 1

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் தங்கியுள்ளோரில் 462 பேர் சிறுவர்கள்.

ஒரு வயது தொடக்கம் 18 வயது வரையான சிறுவர்கள் இவர்களுள் அடங்குவர்.

ஒரு வயது ஆண்கள் 36 பேர், பெண்கள் 24 பேர்.

2 தொடக்கம் 5 வயது வரை ஆண்கள் 61 பேர், பெண்கள் 55 பேர்.

6 தொடக்கம் 12 வயது வரை ஆண்கள் 99 பேர், பெண்கள் 71 பேர்.

13 தொடக்கம் 18 வயது வரை ஆண்கள் 58 பேர், பெண்கள் 58 பேர்.

இவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் நலன்புரி நிலையங்களில் உள்ள ஆசிரியர்களின் உதவியுடன் இவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (203-70)

# கோப்பாய் கால்நடை அபிவிருத்தி சங்கத்தில் தீவனங்கள் விநியோகிக்கும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 1

கோப்பாய் கால்நடை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கால்நடை தீவனங்கள் விற்பனை செய்யும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேற்படி சங்கத்தின் தலைவர் கே.சிவபாலன் தெரிவித்தார்.

இந்தச் சங்கத்தில் கால்நடைக்கான தீவனங்களையும் அவற்றிற்கான மருந்துப் பொருள்களையும் கால்நடை வளர்ப்போர் பெற்றுக் கொள்ளமுடியும்.

தற்போது இந்தச் சங்கம் கோப்பாய் பூதர் மட வீதிக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் இயங்கி வருகின்றது. (203-224)

## ஒரு தொகுதி ஒட்சிசன் சிலிண்டர்கள் கொழும்புக்கு அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், மே 1

யாழ்.போதனா வைத்தியசாலை மேலும் ஒரு தொகுதி ஒட்சிசன் வெற்று சிலிண்டர்களை கொழும்பிற்கு கப்பல் மூலம் அனுப்பி வைத்துள்ளது.

தற்போது வைத்தியசாலையில் சிலிண்டர்களில் இதற்கான இயந்திரம் மூலம் ஒட்சிசன் அனுப்பப்பட்டு வருகின்றது.

பெரிய அளவிலான சிலிண்டர்களே கப்பல் மூலம் கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (203-224)

## சுகாதாரத் திணைக்களத்திற்கு மோட்டார் சைக்கிள்கள்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களத்திற்கு நான்கு மோட்டார் சைக்கிள்களும் மற்றும் ஒரு வானும் கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளன.

கப்பலில் வந்து சேர்ந்த இந்த நான்கு மோட்டார் சைக்கிள்களும் பொதுச் சுகாதார பரிசோதகர்களின் பாவனைக்கு வழங்கப்படவுள்ளன.

இதேசமயம் - அன்புலன்ஸ் வண்டி ஒன்றையும் கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (203-224)

## நவமலர் கனகரத்தினத்தின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்த தினம்

யாழ்ப்பாணம், மே 1

யாழ்.போதனா வைத்தியசாலையின் முன்னாள் பணிப்பாளர் டாக்டர் அமரர் லயன் நவமலர் கனகரத்தினத்தின் முதலாம் ஆண்டு ஞாபகார்த்த தினம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுதுமலை, மானிப்பாயில் அமைந்துள்ள அமரர் லயன் நவமலர் கனகரத்தினத்தின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் ஆறு. திருமுருகன், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம், உலக சுகாதார நிறுவன இணைப்பாளர் டாக்டர் என்.சிவராஜா, சண்டிலிப்பாய் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் திருமதி சத்தியவதனி பிரபாகரன் ஆகியோர் கலந்து கொள்வர். (204)

## மரவேலைப் பயிற்சி பெற்றோருக்குச் சான்றிதழ்

மண்டுவில், மே1

இலங்கைத் தொழில் பயிற்சி அதிகார சபையின் கீழ் இயங்கும் சாவகச்சேரி கிராமிய தொழில் பயிற்சி நிலையத்தில் 2007, 2008ஆம் ஆண்டுகளில் மரவேலைப் பயிற்சிபெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

இது சம்பந்தமாக மேற்படி பயிற்சி பெற்றவர்கள் எதிர்வரும் திங்கட்கிழமை அலுவலக நேரத்தில் கச்சாய் வீதி, சாவகச்சேரியில் அமைந்துள்ள கிராமிய தொழில் பயிற்சி நிலையத்தில் தொடர்பு கொள்ளுமாறு போதனாசிரியர் அறிவித்துள்ளார். (203-59)

## நலன்புரி நிலைய மாணவர்களுக்கு தளபாடங்கள் வழங்கப்பட்டன

கொழும்பு, மே 1

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து தற்காலிகமாகப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களது நலன்கருதி சங்கானைக் கல்விக் கோட்டப் பாடசாலை அதிபர்கள் ஆயிரம் தளபாடங்களை தென்மராட்சிக் கல்வி அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளனர்.

கோட்டக் கல்வி அதிகாரி துரை எங்கரசு, வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் ஆகியோரது முயற்சியினால் வழங்கப்பட்ட இத்தளபாடங்கள் கைதடி, மிருசுவில் நலன்புரி நிலைய மாணவர்களது பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனையினர் தெரிவித்தனர். (203-59)

## எட்டு கோப் சிற்றிகளே குடாநாட்டில் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், மே 1

குடாநாட்டில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் இதுவரை எட்டு மினிகோப் சிற்றி விற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ.சிவலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் குறைந்தது மூன்று மினி கோப்சிற்றி விற்பனை நிலையங்களை திறந்து வைக்க வேண்டும்.

ஆனால் தற்போது எட்டு மினி கோப் சிற்றிகளே திறக்கப்பட்டுள்ளன.

சங்கங்கள் இந்த மினி கோப் சிற்றிகளை விரைந்து திறந்து வைக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (203-224)

## விசேட கூட்டம்

மானிப்பாய், மே1

உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான விசேட கூட்டம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இல. 56, பழம் வீதி, கந்தர்மடம் என்னும் முகவரியில் இடம்பெறவுள்ளது.

பிரதேச சபைகள், நகர சபைகள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்கள் ஆகியவற்றில் கடமை புரியும் சகல உள்ளூராட்சி உதவியாளர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக தவல்களுக்கு 0718561581 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (203-95)

## கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே1

யாழ்.சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாதாந்த மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சம்பந்தப்பட்டோர் கலந்துகொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (204)






சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் அண்மையில் உடுவில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டெனிஸ் அகதிகளுக்கான நிறுவனப் பாதுகாப்பு ஆலோசகர் எலிசபெத்தோஷர் பெண் தலைமைத்துவ [illegible] தொழிலுக்கான உதவு தொகை வழங்குவதையும் சுயதொழில் உதவி பெற்றவர்களுடன் பிரதேச [illegible] எலிசபெத்தோஷர் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்: நேசன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவும் பாகிஸ்தானும் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி இலங்கையில் ஆழமாகக் காலூன்றத் தொடங்கிவிட்டன

## இறுதியில் இலங்கையினால் நாம் ஒதுக்கப்படும் நிலை உருவாகும் என்கிறார் இந்திய ராஜதந்திரி டோக்ரா

சீனாவும் பாகிஸ்தானும் தங்களது நலனுக்கு வாய்ப்பு உருவாகியிருப்பதாக உணர்ந்து, இலங்கையில் ஆழமாகக் காலூன்றத் தொடங்கிவிட்டன. இறுதியில் இலங்கையினால் நாம் ஒதுக்கப்படும் நிலைக்கு உள்ளாகலாம். வேட்டை நாயுடன் சேர்ந்து வேட்டை ஆடவும் எங்களால் முடியவில்லை, அஞ்சி ஓடும் முயலுடன் சேர்ந்து அதற்கு ஆதரவாக ஓடவும் எமக்கு மனமில்லை என்று இந்தியாவின் முன்னாள் இராஜதந்திரியான ராஜீவ் டோக்ரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளேட்டுக்கு அவர் எழுதிய கட்டுரையின் தமிழ் வடிவம் வருமாறு:

உலகம் தட்டையாகவும் இல்லை, இணைக்கப்பட்டதாகவும் இல்லை. தட்டைத் தன்மை என்ற ஒன்று இருக்குமானால் அது அதன் மனச்சாட்சியில்தான் இருக்க வேண்டும்.

ஏனெனில் மாபெரும் மனிதப் பெருந்துன்பம் சுற்றி நிகழ்ந்து கொண்டிருக்கும் போது, செத்துப்போன ஆன்மா மட்டுமே பாதிக்கப்படாமல் இருக்கும். உலகம் உண்மையிலேயே இணைக்கப்பட்டதாக இருக்கும் எனில் இந்தப் பயங்கரம் குறித்த செய்தி உலகில் எங்காவது எதிர்ப்பைத் தூண்டியிருக்கும், உலகின் 24 மணிநேரச் செய்தி ஊடகங்களில் ஒரு சிறு பகுதியாவது இலங்கையில் என்ன நடக்கிறது என்பது குறித்துச் சிறிய அளவாவது செய்தி வெளியிட்டிருக்கும்.

இன்னும் சுருங்கச் சொன்னால், இலங்கையின் சின்னஞ்சிறு பகுதியில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பது குறித்து உலகம் கவனம் செலுத்தியிருக்க வேண்டும். கொடும் செயல்களைச் செய்து முன்னேறிக் கொண்டிருக்கும் சிறிலங்கா படையினால் அந்தப் பகுதி நாளுக்கு நாள் சுருங்கிக் கொண்டிருக்கிறது.

### இளைஞர்கள் அழிந்து விட்டனர்

சுருங்கிக் கொண்டிருக்கும் அந்தச் சிறிய நிலப் பகுதியில்தான், ஒரு காலத்தில் தன்னாட்சி குறித்த தமிழ் இளைஞர்களின் நம்பிக்கை சுடர் விட்டுக்கொண்டிருந்தது. இப்போது அந்தப் பகுதியில் வயதான ஆண்களும் பெண்களும், புதிதாகப் பிறந்த குழந்தைகளும்தான் இருக்கிறார்கள். இளைஞர்கள் அழிந்துவிட்டனர். தங்களின் தாயகக் கனவை தங்களுடன் வேறு உலகத்துக்கு எடுத்துச் சென்றுள்ளனர்.

தெய்வங்களுடன் தொடர்புகொள்வது கூட அவர்களுக்கு எளிதாக இருக்க வாய்ப்பு இருக்கிறது. ஆனால் இந்த உலகில் உள்ள கடவுள்கள் கேளாக் காதினராகவும், பேசாத வாயினராகவும்தான் இருக்கின்றனர்.

உலகின் தலைவிதியைத் தீர்மானிக்கும் நடுவர்போல அன்றாடம் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்காவோ, பாகிஸ்தானை சரிக்கட்டுவதில்தான் மும்முரமாக இருக்கிறது.

சாதாரணமாக, எங்கேயாவது மனித உரிமைகள் மீறப்படுவதாக உறுதியற்ற செய்தி வந்தால்கூட வலுவான கண்டனங்கள் தெரிவிக்கப்படும். அமெரிக்க ஊடகங்கள் வெகு விரைவாகச் செயற்படும்.

உண்மையான, கற்பனையான மனித உரிமை மீறல் செய்திகளை அச்சில் ஏற்றுவதற்காக தொன் கணக்கில் செய்தித்தாள் காகிதம் அர்ப்பணிக்கப்படும். பிறகு குற்றஞ் சாட்டப்பட்ட தரப்பு, அமெரிக்காவின் ஆணைப்படியான ஏற்பாட்டுக்கு அடிபணியும் வரையில், அனைத்துலக அரங்குகளுக்கோ மற்றவற்றுக்கோ இழுத்து வரப்படும். ஒரே ஒரு உயிர் போயிருந்தால் கூட, ஒரே ஒரு மனித உரிமை மீறல் நிகழ்ந்திருந்தால் கூட இவை எல்லாம் நடக்கும்.

### அமெரிக்கா ஏன் நடிக்கிறது

ஆனால், இலங்கையில் நாள்தோறும் நடைபெறும் அடக்குமுறைகள் குறித்து எதையுமே பார்க்காதது போல, எதையுமே கேட்காதது போல அமெரிக்கா ஏன் நடிக்கிறது? இவ்வளவு நாள்களாக அமைதியாக இருக்கும்படி அதைத் தூண்டியது எது?.

அமெரிக்காவின் இந்த அக்கறையற்ற போக்குதான் ஐக்கிய நாடுகள் சபையின் செயலின்மைக்கும் காரணமாகும். அமெரிக்கா சைகை காட்டுமானால், ஐ.நா. கிளர்ந்தெழுந்து செயற்படும் என்பது உண்மைதான். அந்த ஒப்புதல் கிடைத்த உடனே, உலக ஆட்சிப்பணி அதிகாரிகள் மிகுந்த வேகத்துடன் செயற்படுவார்கள். அவர்கள் அதிகம் சாதிக்க முடியாவிட்டாலும் கூட, குற்றம் இழைக்கப்படும் நாட்டுக்குச் சென்று வருவார்கள், தொடர்ந்து அவர்கள் அங்கு சென்று வருவது, குறைந்தது உலகின் செய்தியையாவது அந்த நாட்டுக்குத் தெரிவிக்கும்.

உலகின் இந்த உயர்நிலை கவனம், அதைத் தொடர்ந்த ஊடகங்களின் பார்வையும் தடுப்புக்கேடயமாக மாறி குற்றம் இழைப்பவர்களைத் தடுத்து நிறுத்துவதற்கும், மனித உரிமை மீறல்களின் தீவிரத்தை ஓரளவுக்குக் குறைப்பதற்கும் உதவும்.

ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில் இவை எதுவுமே நடக்கவில்லை. அக்கறையற்ற இந்தப் போக்குதான், சிறிலங்கா அரசை துணிச்சல் அடைய வைத்திருக்கிறது என்பது தெளிவு.

### அப்பாவித் தமிழர்கள் கைவிடப்பட்டனர்

மேலும், இலங்கையில் உள்ள அப்பாவித் தமிழர்கள் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும்படி கைவிடப்பட்டனர். தொடர்ச்சியான குண்டுவீச்சுத் தாக்குதல்கள், மருத்துவ வசதிகள் இல்லாத நிலை, சுகாதாரமற்ற வாழ்க்கை நிலைமைகள், நாள்தோறும் பலர் மடிவது என்பதே அங்கு நெறிமுறையாகிவிட்டது.

மனித உரிமை மீறல்களை உலகம் வகைப்படுத்துவதிலும் சாதி முறை இருக்கிறதோ என்று வியப்படைந்தால் அதுதான். இல்லாவிடில் பொஸ்னியா, கொசோவோ தொடர்பாக போர்க்கால நடவடிக்கை போன்ற செயற்பாட்டுக்கு உலகம் கிளர்ந்தெழுந்தது ஏன்? சேர்பியாவைப் பணிய வைப்பதற்காக அதன் மீது குண்டு வீசியது ஏன்? தமிழர்களின் இரத்தத்தை விடவும் வெள்ளையர்களின் இரத்தம் மதிப்பில் உயர்ந்ததோ? பின்னர் ஏன் உதவி கோரும் இலங்கைத் தமிழர்களின் கூக்குரல் உலகச் சமுதாயத்தின் காதுகளில் விழவில்லை? இதில் இந்தியாவின் நிலை என்ன? நமக்கு பொறுப்பு இல்லையா?

புவியியல், வரலாறு, இனம், மொழி, மதம், பண்பாடு என அவர்களுடன் நமக்குள்ள அனைத்துத் தொடர்புகளும் அதைத்தானே வலியுறுத்துகின்றன. எப்போதேனும் அமைச்சர் ஒருவர் அரை மனதுடன் முயற்சி எடுப்பார். நிதானத்துடன் நடந்து கொள்ளுமாறு வேண்டுகோள் ஒன்றை விடுப்பார். அதற்கு அதிக முக்கியத்துவம் இல்லை என்பதுபோல சிறிலங்கா அரசு விரைவிலேயே அதை ஒதுக்கித் தள்ளிவிடும்.

இந்த முடிவு பிரபாகரனுக்கு வேண்டும் என்பது போன்ற பழிவாங்கும் பார்வையை நமது பார்வையாளர்களில் சிலர் கொண்டிருக்கிறார்கள். பிரபாகரனுக்கு எதிராக மட்டுமின்றி, விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் எதிரான இந்த வாதத்தில் ஒருவேளை வலு இருக்கலாம். அவர்களுக்காக யாரும் வாதாடவில்லை. அவர்கள் விடயத்திலும்கூட அதேபோல அண்மையில் நடந்த நிகழ்வு ஒன்று நினைவுக்கு வருகிறது.

மும்பயில் பிடிபட்ட பயங்கரவாதி அஜ்மல் காசப் செய்த குற்றங்களையும் படுகொலைகளையும் தொலைக்காட்சியில் லட்சக்கணக்கான மக்கள் பார்த்திருக்கின்ற நிலையில், வழக்கு விசாரணையில் அஜ்மல் காசப்புக்கு விரிவான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பது ஏன்? அஜ்மல் காசப்பும் அவனது கூட்டாளிகளும் இந்தியாவின் பொருளாதார அடித்தளத்துக்கே அறைகூவல் விடுத்தனர். 180 பேரை படுகொலை செய்தனர்.

எனினும் அஜ்மல் காசப்புக்கு அரசுதரப்புக்கு எதிராகப் பேசுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. பிரபாகரனுக்கும் மற்ற விடுதலைப் புலிகளுக்கும் அவர்களது விதிப்படி நடக்கட்டும் என்று விட்டுவிட நாம் முடிவு செய்தாலும்கூட, பாதுகாப்பற்ற வயதான ஆண்கள், பெண்கள், குழந்தைகளை நாம் எப்படி விட முடியும்? அவர்கள் மீது நமக்கு எந்தப் பொறுப்பும் இல்லையா? அவர்களைப் பற்றி நாம் அக்கறைப்பட வேண்டியதில்லை என்று சிலர் வெட்கமின்றி வாதாடுகிறார்கள். நம்முடன் மரபுவழி உறவுள்ள இந்தியத் தமிழர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவுக்குக் குடிபெயர்வதற்கு திருப்பி அனுப்பப்பட்டுவிட்டனர் என்றும், மற்றவர்கள் எல்லாம் இலங்கைத் தமிழர்கள், அவர்களிலும் பெரும்பகுதியினர் பயங்கரவாதிகள், இது இலங்கையின் உள்நாட்டு விவகாரம் என்று அவர்கள் சொல்கிறார்கள்.

உலகம் தட்டையாகவும் இல்லை, இணைக்கப்பட்டும் இல்லை என்பதற்கு இத்தகைய மனிதர்களே வாழும் எடுத்துக்காட்டு. நமது உலகம் மற்றவர்களின் வேதனைகளைப் புரிந்து கொண்டு பரிவு காட்டாத உணர்ச்சியற்ற உலகம் என்பதற்கு இவர்களே சான்று. ஆனால் இலங்கைத் தமிழர்களுக்கும் நமக்கும் உள்ள உறவு வரலாற்று வழிப்பட்ட உறவு. அதுவே பலவழிகளிலும் அவர்கள்பால் நம்மைப் பொறுப்புள்ளவர்கள் ஆக்குகிறது. அத்தகையதொரு பொறுப்புணர்வை நிறைவேற்றும் வகையில்தான் இராமர் இலங்கைக்குச் சென்றார்.



### இந்தியா அசையாமல் இருந்து வருகின்றது

வருந்தத்தக்க வகையில், இந்தியா அடிக்கடி அதன் சொந்த மக்களின் துன்பங்களைக் கண்டும் அசையாமல் இருந்து வருகிறது. இல்லாவிடில், உகண்டாவில் கொடுங்கோலன் இடி அமீனால் தமது மக்கள் ஒடுக்கப்பட்டபோது, நாம் அவர்களது உதவிக்குச் சென்றிருப்போம். பிஜித் தீவில் உள்ள இந்தியர்களுக்கு உதவி செய்திருப்போம். கரீபிய நாடுகளில் உள்ள இந்திய மரபுவழித் தமிழர்கள் இழிவுடன் நடத்தப்படுவதற்கு எதிராக உறுதியுடன் குரல் கொடுத்திருப்போம். அவர்களைப் போலவே, நமக்கு அண்டையில் உள்ள இலங்கைத் தமிழர்களையும் அவர்கள் விதிப்படி நடக்கட்டும் என்று கைவிட்டு விட்டோம்.

தேர்தல் மட்டும் வரவில்லை என்றால் அவர்கள் அப்படியேதான் விடப்பட்டிருப்பார்கள். திடீரென, அரசியல் கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு அறிக்கைகளை வெளியிட்டு வருகின்றன. பதிலுக்கு மத்திய அரசு கடந்த சில நாள்களாக அது மேற்கொண்டு வந்த முயற்சிகள் பயன் அளித்துள்ளதாகக் கூறிவருகிறது.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தும் போர்ப்படை நடவடிக்கைகளை நிறுத்துவதற்கு சிறிலங்கா அரசு ஒப்புக் கொண்டு விட்டதாக அது தெரிவித்துள்ளது. தமிழர்கள் சிக்கியிருக்கும் பகுதி சிறிய பகுதியாகச் சுருங்கிவிட்டதால், கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவது தேவை இல்லை என்பதால், படை நடவடிக்கைகளின் அளவை சிறிலங்கா ஓரளவுக்குக் குறைத்துக் கொண்டு விட்டது என்பதுதான் உண்மையான காரணம்.

நாம் நேர்மையானவர்களாக இருந்தால், அரசினுடைய நெருக்குதல் இலங்கையில் பயனளிக்கத் தொடங்கிவிட்டது என்பது உண்மையாக இருந்தால், இதைச் செய்வதற்கு இவ்வளவு காலம் அது ஏன் காத்திருந்தது? என்று மத்திய அரசிடம் நாம் கேள்வி எழுப்ப வேண்டும். ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்படுகிற, முடமாக்கப்படுகிற, விதவைகள் ஆக்கப்படுகிற, ஆதரவற்றவர்கள் ஆக்கப்படுகிற வரையில் அது ஏன் காத்திருக்க வேண்டும்? எதையும் செய்வதற்கு மனமற்ற, அக்கறையற்ற கொள்கையை இந்தியா பின்பற்றி வந்திருக்கிறது என்பதுதான் உண்மை.

இதற்கிடையே, நமது அண்டை நாடுகளான சீனாவும் பாகிஸ்தானும் தங்களது படைசார் நலனுக்கு நல்ல வாய்ப்பு உருவாகியிருப்பதாக உணர்ந்து, இலங்கையில் ஆழமாகக் காலூன்றத் தொடங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன. இறுதியில் சிறிலங்காவினால் நாம் ஒதுக்கப்படும் நிலைக்கு உள்ளாகலாம். நம்மால் வேட்டை நாயுடன் சேர்ந்து வேட்டை ஆடவும் முடியவில்லை, அஞ்சி ஓடும் முயலுடன் சேர்ந்து அதற்கு ஆதரவாக ஓடவும் மனமில்லை. என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் குமரையா

தேவராஜன்

பிறப்பு 05.07.1950

இறப்பு 01.05.1977

பூப்போல் பூமியில் பிறந்தவனே
பூப்போல் உன் ஆயுளும் குறுகியதோ?
பூவின் வாசம் போல் உன் வாசமும்
புனிதமானதே
என்றும் உன்வாசம் எம்
சுவாசத்தோடு கலந்திருக்கும்.

28, [illegible],
கண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (84755)

தகவல்:
மனைவி,
மகன்மார், தாய்.

# அறிவித்தல்

பருத்தித்துறை தும்பளை நெல்லண்டை அம்மன் கோயில்
தருமபரிபாலன சபை

## 65ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 31.05.2009 ஞாயிற்றுக்கிழமை நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோயிலில் அமைந்துள்ள திருஞானசம்பந்தர் மடத்தில் மு.ப. 9 மணிக்கு ஆரம்பமாகும். பிரமாணங்களில் மாற்றம், திருத்தம் சம்பந்தமான விடயங்களை 17.05.2009க்கு முன் கடிதமூலம் செயலாளருக்கு அனுப்பிவைக்கவும். மேற்படி கோயிலின் வருடாந்தப் பொங்கல் 2009.05.29 வெள்ளிக்கிழமை நடைபெறும்.

ஆ.நவரத்தினசாமி, தலைவர்.
(சி/558269)
ச.வீரகத்திப்பிள்ளை, செயலாளர்.

தும்பளை, நெல்லண்டை அம்மன் கோயில் தருமபரிபாலன சபை.

# கட்டடம் அமைத்தலுக்கான கூறுவிலை

எமது சங்கத்தின் பாற்பொருள் உற்பத்திப் பகுதியில் அமைய இருக்கும் கட்டடத்திற்கான பின்வரும் வேலைகளுக்கு கூலிக்கு கூறுவிலை கோரப்படுகின்றது.

விவரம் வருமாறு:

1.மேசன் வேலை
2.தச்சு வேலை
3.மின்சார வேலை
4.வர்ணம் பூசுதல் வேலை
5.கதவு வேலை.

மேற்படி வேலை தொடர்பான விவரங்களை அலுவலகத்தில் பார்வையிட்டு கூறுவிலையை 11.05.2009ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கவும்.

பொது முகாமையாளர்,
யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து),
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
(சி/558266)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக்கில் தொடர் கார்க் குண்டுவெடிப்பு 41 பேர் உயிரிழப்பு; 79 பேர் காயம்

பக்தாத்,மே 01

ஈராக்கின் தலைநகரான பக்தாத்தில் புதன் கிழமை அடுத்தடுத்து இடம்பெற்ற மூன்று கார்க்குண்டுத் தாக்குதல்களில், 41 பேர் கொல்லப்பட்டனர். 79 பேர் காயமடைந்தனர். காயமடைந்தவர்களில் 28 பேர் ஆபத்தான கட்டத்திலிருந்தனர் என பொலிஸ் வட்டாரம் தெரிவித்தது.

''பக்தாத்தின் ஷியா மாவட்ட சத்ர் நகர சந்தைப் பகுதியில் மக்கள் நடமாட்டமிகுந்த வேளையில், இக்குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. அருகருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று கார்களிலிருந்து இக்குண்டுகள் வெடித்தன. இவை தன்னியக்கக் கருவியால் வெடிக்க வைக்கப்பட்டுள்ளன'' என நகர பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டார்.

சத்ர் நகரில் அடுத்தடுத்து அமைந்துள்ள மூன்று சந்தைகளுக்கெதிரில், புதன்கிழமை உள்ளூர் நேரப்படி பிற்பகல் 1.30 மணியளவில் இக்குண்டுகள் வெடித்தன. இக்குண்டு வெடிப்புகளை அடுத்து, இப்பகுதி ஈராக்கிய பாதுகாப்புப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டை மேற்கொள்ளப்பட்டது என நகர அதிகாரியொருவர் பி.பி.ஸிக்குத் தெரிவித்தார்.

ஈராக்கில் சமீபகாலமாக குண்டுத் தாக்குதல் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன. குறிப்பாக ஷியாக்களே இதுவரை இவற்றிற்கு இலக்காகி வந்துள்ளார்கள். ஷியாக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலும், ஷியாக்களின் புனித ஸ்தலப் பகுதிகளிலும் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றுள்ளன என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பக்தாத்தில் கடந்த வியாழக்கிழமையும், வெள்ளிக்கிழமையும் இடம்பெற்ற நான்கு தற்கொலைக் குண்டுத்தாக்குதல்களில் 150 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களில் 60 பேர் பக்தாத்திலுள்ள முக்கிய ஷியா வழிபாட்டு ஸ்தலத்தில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதலில் பலியாகியவர்களாவர் என்றும் அந்த அதிகாரி விவரித்தார்.

பக்தாத்தில் புதன்கிழமை இடம்பெற்ற மூன்று குண்டுத் தாக்குதல்களால் அந்தப் பகுதி குடியிருப்பாளர்கள் ஆத்திரமடைந்தார்கள். இத் தாக்குதல்களை முன்கூட்டியே தடுத்து நிறுத்த இப்பகுதியில் நிலைகொண்டுள்ள ஈராக்கியப் படையினர் தவறிவிட்டனர் என அவர்கள் குற்றஞ்சாட்டினார்கள். பலர் ஆத்திர மேலீட்டால், படையினரை நோக்கி கல் வீச்சில் ஈடுபட்டனர். எனினும், நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

உலக அரங்கில்

# கராச்சியில் கலவரம் 23பேர் பலி! 22 பேர் காயம்

பாகிஸ்தானிய கராச்சி நகரில் முத்தாஹிதா குவாமி இயக்கத் தொண்டர்கள் இருவர் மர்மமான முறையில் இறந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் 23 பேர் கொல்லப்பட்டனர்; 22 பேர் காயமடைந்தனர்.


தங்கள் கட்சியைச் சேர்ந்த இருவர் இறந்ததைத் தொடர்ந்து முத்தாஹிதா குவாமி ஆதரவாளர்கள் கராச்சியில் வன்முறையில் ஈடுபட்டனர்.

வானை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். கடைகளுக்கும் வீதியில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களுக்கும் தீ வைத்தனர். நகரின் பல்வேறு இடங்களுக்கும் வன்முறை பரவியது. துப்பாக்கிச் சூட்டில் உதவிப் பொலிஸ் அதிகாரி உட்பட 6 பொலிஸார் காயமடைந்தனர்.

வன்முறையாளர் நடத்திய துப்பாக்கிச் சூடு காரணமாக சிலர் கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பாக 21 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

1947 இல் இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு இடம்பெயர்ந்தவர்கள்தான் முத்தாஹிதா குவாமி இயக்கத்தினர்.

# பன்றிக் காய்ச்சலால் அமெரிக்காவில் 160 பேர் பலி! நியூஜோர்க்கில் குழந்தைகள் பெரும் எண்ணிகையில் பாதிப்பு!!



மெக்ஸிக்கோ, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் ஆகியவை உட்பட உலகம் முழுவதும் பல நாடுகளில் பன்றிக் காய்ச்சல் வேகமாக பரவி வருகிறது. தென் கொரியாவின் பாஜு நகரில் பன்றிப்பண்ணை ஒன்றில் கிருமிநாசினி தெளிக்கப்படுகிறது.

நியூயோர்க்,மே 01

அமெரிக்காவில் பன்றிக் காய்ச்சலுக்கு முதன் முதலாக ஒருவர் பலியாகியுள்ளார். அதேவேளை, நியூயோர்க் நகரில் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் இந் நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். மெக்ஸிக் கோவில் இந் நோய்க்குப் பலியானோரின் எண்ணிக்கை 160 ஆகும்.

மெக்ஸிக் கோவில் பன்றிக் காய்ச்சல் நோய்த் தாக்குதலுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. அதனால் அந்நாட்டு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மெக்ஸிக்கோ நகரில் மக்கள் அதிகளவில் கூடும் இடங் களான உணவு விடுதிகள், திரையரங்குகள், கேளிக்கை விடுதிகள் ஆகியவற்றை மூட உத்தரவிடப்பட்டுள்ளது என மெக்ஸிக்கோ நகர மேயர் மார்ச்சலோ தெரிவித் துள்ளார்.

அதேவேளை, அமெ ரிக்க நியூயோர்க் நகரில் மட் டும் நூற்றுக்கும் அதிகமான பள்ளிக் குழந்தைகள் பன் றிக் காய்ச்சல் நோயால் பாதிக் கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு வைத்திய சாலைகளில் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் பன்றிக் காய்ச்சல் நோய் மேலும் பரவாமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித் துள்ளார்.

மற்ற நாடுகளில் பன்றிக் காய்ச்சல் பரவினாலும் அந்நாடுகளில் உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை. ஆனால், இப்போது அமெரிக்காவில் ஒரு குழந்தை பலியாகியுள்ளது.

மெக்ஸிக்கோவைச் சேர்ந்த இரண்டு வயதுக் குழந்தை, பெற்றோருடன் அமெரிக்கா வந்திருந்தது. டெக்சாஸ் நகரில் தங்கியிருந்த போது குழந்தைக்கு திடீர் காய்ச்சல் ஏற்பட்டது. வைத்தியசாலையில் சேர்த்தனர். சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தது.

அந்தக் குழந்தை பன்றிக் காய்ச்சலால் உயிரிழந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதனால் அமெரிக்கா முழுவதும் பீதி ஏற்பட்டுள்ளது.

பன்றிக் காய்ச்சல் அமெரிக்கா கண்டத்தில் மட்டும் அல்லாமல் ஐரோப்பா, ஆசியா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களுக்கும் பரவி விட்டது. ஆபிரிக்கா கண்டம் மட்டுமே தப்பியுள்ளது.

நோய் மேலும் பரவாமல் தடுக்க அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்குமாறு உலக சுகாதார அமைப்பு அனைத்து நாடுகளையும் கேட்டுள்ளது. எனவே, அனைத்து நாடுகளிலும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வெளிநாடுகளிலிருந்து வரும் பயணிகள் மூலமும் நோய் பரவி விடக்கூடாது என்பதற்காக விமான நிலையங்களில் தீவிர பரிசோதனைக்கு பிறகே வெளிநாட்டுப் பயணிகள் அனுமதிக்கப்படுகின்றனர்.

# பன்றிக் காய்ச்சல் பரவுவதைத்தடுக்க எகிப்திலும் பல்வேறு ஏற்பாடுகள்

கெய்ரோ, மே 01

எகிப்தில் பன்றிக் காய்ச்சல் பரவுவதைத் தடுக்கும்பொருட்டு, ஆயிரக்கணக்கான பன்றிகள் கொல்லப்படவுள்ளன. பன்றிகளைக் கொல்லும் பணி ஆரம்பமாகியுள்ளது.

எகிப்தில் இதுவரை எவர் ஒருவரேனும் பன்றிக் காய்ச்சலுக்கு இலக்காகவில்லை. எனினும், அயலிலுள்ள இஸ்ரேலில் இருவரை இந்நோய் தாக்கியுள்ளது. இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எகிப்தில் எடுக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு தெரிவித்தது.

எகிப்திலுள்ள பன்றிப் பண்ணைகளிலுள்ள பன்றிகள் கொல்லப்படும். பன்றி அழிப்புப் பணி வியாழக்கிழமை (நேற்று) ஆரம்பமாகிவிட்டது. மேற்குக் கெய்ரோவில் பன்றிப் பண்ணைகள் அதிகளவில் உள்ளன என சுகாதார அமைச்சர் ஹதம் எல் கபாலி, மெனா செய்தி நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

மேற்குக் கெய்ரோவில் ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் வசிக்கிறார்கள். அவர்களில் அநேகர் பன்றி வளர்ப்பதிலும் ஈடுபடுகின்றனர். எகிப்தில் 2 லட்சத்து 50 ஆயிரம் முதல் 4 லட்சம் பன்றிகள் வரை இருக்கலாமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என ஓர் அதிகாரி குறிப்பிட்டார்.

# ஒபாமாவின் பாதுகாப்பு விமானம் தாழப் பறந்தமையால் பரபரப்பு!

வாஷிங்ரன்,மே 01

அமெரிக்க நியூயோர்க் நகரில், ஜனாதிபதி பராக் ஒபாமாவின் பாதுகாப்பு விமானம் தாழப் பறந்தமையால், மக்கள் மத்தியில் ஏற்பட்ட கலக்கத்துக்காக பராக் ஒபாமா மன்னிப்புக் கோரினார்.

ஜனாதிபதியின் பாதுகாப்பு விமானம் மிகத் தாழ்வாகப் பறந்து நகரை வட்டமிட்டது. இதனால் நகர மக்கள் பீதியடைந்தனர். பலர் வீடுகளையும், கட்டடங்களையும் விட்டு வெளியேறினர். அலுவலகங்கள் மூடப்பட்டன.

2001 ஆம் வருட செப்ரெம்பர் 11 ஆம் திகதி, நியூயோர்க் நகரில் அல்-குவைதா மேற்கொண்ட விமானத் தாக்குதல் ஞாபகத்துக்கு வரவே அநேகர் கலக்கமடைந்தனர். அது போன்ற தாக்குதல் மேற்கொள்ளப்படலாமென்றும் அச்சங்கொண்டனர். எனினும், தாழப்பறந்து வட்டமிட்டது ஜனாதிபதியின் பாதுகாப்பு விமானந்தான் என்பதை அறிந்து ஆறுதல் அடைந்தனர்.

கலக்கத்தை ஏற்படுத்திய இச்சம்பவத்துக்காக, ஜனாதிபதி பராக் ஒபாமா, நியூயோர்க் நகர மக்களிடம் மன்னிப்புக் கோரினார். ''இது ஒரு தவறு. இந்தத் தவறு இனிமேல் நேராது'' என அவர் நிருபர்களிடம் தெரிவித்தார்.

''இச்சம்பவத்தை அறிந்ததும் ஒபாமா கோபமடைந்தார். இது குறித்து, வெள்ளை மாளிகை இராணுவ செயலகப் பணிப்பாளருக்கும் தெரிவிக்கப்பட்டது'' என ஒபாமாவின் உதவியாளர்கள் தெரிவித்தார்கள்.

# தொடக்கப் பள்ளியில் தாயும் மகனும்; சீன மாநிலம் ஒன்றில் அதிசயம்

பீஜிங், மே 01

சீனாவின் ஷின் ஜியாங் மாநிலத்தைச் சேர்நத டோங் ஷியாவோ ஜு என்னும் 39 வயது பெண், தனது 10 வயது மகனுடன் தொடக்கப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்துள்ளார். தாயும் மகனும் ஆரம்பக் கல்வி கற்று வருகிறார்கள்.

டோங் ஷியாவோஜு ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். குடும்பம் வறுமையில் உழன்றதால் இவரால் பள்ளிக்கூடம் செல்ல முடியவில்லை. அதனால், கல்வி கற்கவேண்டுமென்ற இவரது ஆசை நிராசையாகி விட்டது.

இவர் யுவதியான பின்னர், சிச்சுவான் மாநிலத்தில் ஒருவரை திருமணம் செய்து, கணவரோடு அம்மாநிலத்திலேயே குடியேறினார். அங்கு சில ஆண்டுகள் வரை டோங் ஷியாவோஜு தொழிலாளியாக வேலை செய்தார். புதல்வன் பிறந்த பின்னர், வேலைக்குச் செல்வதை நிறுத்திக் கொண்டார். எனினும், கல்வித் தாகம் இவரை விட்டபாடில்லை.

தற்போது இவரது மகனுக்கு வயது 10. சமீபத்தில் மகனை தொடக்கப்பள்ளியில் சேர்த்தார். மகன் பள்ளிக்கூடம் செல்லும் போதெல்லாம் தானும் எழுத,படிக்கக் கற்றுக்கொள்ள வேண்டுமென்ற ஆசை இவரை ஆட்டிப்படைத்தது.

இவர் தனது ஆசையை நிறைவேற்றிக் கொள்வதற்காக, மகன் பயிலும் தொடக்கப் பள்ளிக்கூடத்திலேயே தானும் சேர்நது கொண்டார். தாயும் மகனும் ஒரே வகுப்பில் படிக்கின்றனர். ஒன்றாகவே பள்ளிக்கூடம் சென்று வருகின்றனர்.

கல்வி கற்கும் தனது மனைவியை கணவரும் ஊக்குவித்து வருகிறார். மகனுடன் வீட்டுப் பாடம் எழுதும்போது, மனைவியின் பல [illegible] கொண்டு வருகிறார்.

# ஆப்கானிலுள்ள நேட்டோ படைக்கு மேலதிகமாக 300 ஆஸி. சிப்பாய்கள்

கான்பரா,மே1

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள நேட்டோ படைகளுக்கு, அவுஸ்திரேலியா மேலும் 300 இராணுவ சிப்பாய்களை அனுப்பிவைக்கும். இவர்களைத் தவிர பொலிஸாரும் அனுப்பி வைக்கப்படுவார்கள் என அவுஸ்திரேலியப் பிரதமர் கெவின் ரூத் தெரிவித்தார்.

தற்போது ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள நேட்டோப் படையில், ஆயிரத்து 220 அவுஸ்திரேலிய சிப்பாய்கள் உள்ளார்கள். மேலதிக 300 இராணுவ சிப்பாய்களால் இந்த எண்ணிக்கை ஆயிரத்து 520 ஆக உயர்வடையும். ஆப்கானில் பல பகுதிகளில் பாதுகாப்பு நிலைவரம் சீரடையவில்லை என்றும் அவர் கூறினார்.

ஆப்கானிஸ்தானில் ஓகஸ்டில் நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. தற்போது அனுப்பப்படும் இராணுவ சிப்பாய்களும், பொலிஸாரும் தேர்தல்கால பாதுகாப்புக் கடமையிலும் ஈடுபடுவார்கள். அத்துடன் இந்த 300 இராணுவ சிப்பாய்களும் ஆப்கானிஸ்தான் இராணுவத்துக்கும் பயிற்சி அளிப்பார்கள்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆப்கானிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளை ஒடுக்குவதற்கான போராட்டத்தில் நேட்டோப் படைகள் ஈடுபட்டு வருகின்றன. எனினும், படைகளின் எண்ணிக்கை போதியளவில் இல்லையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் மேலதிக இராணுவ சிப்பாய்களை அனுப்பிவைக்குமாறு, அமெரிக்கா அதன் நட்பு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

இந்த வேண்டுகோளுக்கிணங்கவே, அவுஸ்திரேலியா மேலதிக சிப்பாய்களை அனுப்பி வைக்க முன்வந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு முதல், ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராக நடை பெற்று வரும் போராட்டத்தில், இதுவரை, 10 அவுஸ்திரேலிய சிப்பாய்கள் பலியாகியுள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தியில் நாம் சொல்வதைக் கேட்கும் அரசு அமைந்தால்

# இலங்கைக்கு இந்தியப் படையை அனுப்பி தனி ஈழம் அமைப்போம்

## ஜெயலலிதா மீண்டும் முழக்கம்

நாமக்கல், மே.01

தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெற்று மத்தியில் நாங்கள் சொல்வதைக் கேட்கும் அரசு அமைந்தால், இந்திரா காந்தி எந்த அனைத்துலக சட்டத்தைப் பின்பற்றி பங்களாதேஷிற்கு விடுதலை வாங்கிக் கொடுத்தாரோ, அதே அனைத்துலக சட்டத்தைப் பின்பற்றி - அதே தர்ம நியாயங்களைப் பின்பற்றி, ஈழத் தமிழர்களைப் பாதுகாக்க இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பி தனி ஈழம் அமைப் போம் - என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா முழங்கியுள்ளார்.

நாமக்கல்லில் நேற்றுமுன்தினம் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். மேலும் அவர் அங்கு தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட, உண்ணாவிரத நாடகம் நடத்தி, தான் உண்ணாவிரதம் இருந்ததால் உடனே இலங்கை அரசு போர் நிறுத்தம் என்று அறிவித்துவிட்டது; எனவே, தனது உண்ணாவிரதத்திற்கு வெற்றி கிடைத்துவிட்டது என்று அறிவித்துவிட்டு, உண்ணாநோன்பை முடித்துக்கொண்டு கருணாநிதி வீடு திரும்பிவிட்டார்.

ஆனால் உண்மையில் போர் நிறுத்தம் ஏற்பட்டதா? அப்படி அறிவிக்கவே இல்லை, என்று இலங்கை அரசு மறுப்பு வெளியிட்டுள்ளது. இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் இராணுவம் மேற்கொண்டிருக்கும் தாக்குதல் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.



இராணுவத்தின் தொடர் தாக்குதலில் எண்ணற்ற தமிழர்கள் உயிரிழந்துகொண்டிருக்கிறார்கள் என்று அங்கிருந்து வருகின்ற செய்திகள் கூறுகின்றன.

எங்களுடைய சொல்லைக் கேட்கும் புதிய மத்திய அரசு அமைந்தால், தனி ஈழம் அமைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று அண்மையில் சொல்லி இருந்தேன். இதற்கு ஒரு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர், இந்த அம்மாவுக்கு சர்வதேச சட்டம் தெரியவில்லை. எப்படி இலங்கையில் தனி ஈழம் அமைக்க முடியும்? இலங்கை என்ன இந்தியாவின் மாவட்டமா? கொலனியா என்று வினவியிருக்கிறார். இதிலிருந்து இவர்தான், விவரம் புரியாத ஒரு மனிதர் என்பது தெரிகிறது.

இந்திரா காந்தி எந்தச் சர்வதேச சட்டத்தை பின்பற்றி, பங்களாதேஷுக்கு விடுதலை வாங்கிக் கொடுத்தாரோ, ராஜீவ் காந்தி எந்தச் சர்வதேச சட்டத்தைப் பின்பற்றி இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பினாரோ; அதே சர்வதேச சட்டத்தைப் பின்பற்றித்தான், அதே தர்ம நியாயங்களை பின்பற்றித்தான், நான் சொல்வதை கேட்கும் மத்திய அரசு அமைந்தால், இலங்கைக்கு இந்திய இராணுவத்தை அனுப்பி அங்கே தனி ஈழம் அமைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று சொல்கிறேன்.

இலங்கையில் தனி ஈழம் அமைக்க நடவடிக்கை எடுப்பேன் என்று நான் சொன்னது தேசத் துரோகச் செயல் என்று மற்றொரு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் அண்மையில் கருத்துத் தெரிவித்து இருந்தார். இந்தியாவைத் துண்டாட நினைப்பதுதான் தேசத் துரோகச் செயலே தவிர, இலங்கையில் தனி ஈழம் அமைப்பேன் என்று சொல்வது தேசத் துரோகச் செயல் அல்ல என்று நான் தெளிவுபடுத்தினேன்.

## சிவாஜிலிங்கம் எம்.பி. பிரசாரம்: இந்தியச் சட்டத்துக்கு எதிரானது

### அமைச்சர் வயலார் ரவி பேட்டி



சென்னை, மே. 01

தேர்தலில் இந்திய அரசுக்கு எதிராக இலங்கைத் தமிழ் எம்.பி. பிரசாரம் செய்வது இந்தியச் சட்ட திட்டத்துக்கு எதிரானது - என்று மத்திய அமைச்சர் வயலார் ரவி கூறியுள்ளார்.

முதல்வர் கருணாநிதியை அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் காலை சந்தித்துப் பேசி விட்டு வெளியே வந்த அவரிடம் செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளும், அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு -

**கே** - முதல்வர் கருணாநிதியைச் சந்தித்து என்ன பேசினீர்கள்?

ப - இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டி முதல்வர் கருணாநிதி உண்ணாவிரதம் இருந்ததற்கு வாழ்த்துத் தெரிவித்தேன். அவரின் உடல்நிலை குறித்து கேட்டறிந்தேன். இது ஒரு மரியாதை நிமித்த சந்திப்பு, அவ்வளவுதான்.

**கே** - இலங்கை அரசின் போர் நிறுத்தம் குறித்து?

ப - இந்திய அரசு, இலங்கை அரசுடன் பேசி போர் நிறுத்தத்தை அறிவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. உலக நாடுகளும் இதை வலியுறுத்த வேண்டும் என்று நாங்கள் கூறினோம். இதனை ஏற்று உலக நாடுகளும் இலங்கை அரசை வற்புறுத்தின. இந்தியா மற்றும் உலக நாடுகளின் வற்புறுத்தல் காரணமாக அங்கு போர் நிறுத்தம் ஏற்பட்டிருக்கிறது.


இந்தப் போர் நிறுத்தத்தால் இலங்கைத் தமிழர்களுக்கு மகிழ்ச்சி என்றால் எங்களுக்கும் அதில் மகிழ்ச்சிதான்.

**கே** - வேறு நாட்டு எம்.பி. இந்தியாவில் தேர்தல் பிரசாரம் செய்யலாமா?

ப - இலங்கை எம்.பி. சிவாஜிலிங்கம் இந்திய அரசை விமர்சித்து தேர்தல் பிரசாரம் செய்து வருகிறார். இது கண்டிக்கத்தக்கது. அவரின் இந்த தேர்தல் பிரசாரம் இந்திய சட்ட திட்டத்துக்கு எதிரானது - என்றார்.

## ஈழத்தில் பீரங்கிக்குண்டுகள் வீசப்படுவது மழை விட்ட பின்னர் ஏற்படும் தூவானமா?

### கருணாநிதிக்கு நெடுமாறன் கண்டனம்



சென்னை, மே 01

இலங்கை அரசு போரை நிறுத்தாமல் தாக்குதல் நடத்தி வருகிறது. இலங்கை அரசு பீரங்கிகள் மூலம் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனச் செய்திகள் கிடைத்துள்ளன. ஆனால் இதை மழைக்குப் பின் ஏற்படும் தூவானம் என்று சொல்லி கருணாநிதி அலட்சியப்படுத்துகிறார் - என்று தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழுவின் அமைப்பாளர் பழ.நெடுமாறன் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

இதுகுறித்து நேற்றுமுன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையின் விவரம் வருமாறு -

இலங்கை அரசு பீரங்கிகள் மூலம் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குண்டுகளை வீசியுள்ளது. இதில் ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர் எனச் செய்திகள் கிடைத்துள்ளன. ஆனால் இதை மழைக்குப் பின் ஏற்படும் தூவானம் என்று சொல்லி கருணாநிதி அலட்சியப் படுத்துகிறார்.

உண்ணாவிரதத்தின் விளைவாக போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது எனக் கூறும் கருணாநிதியைக் கண்டிக்கிறேன்.

இலங்கை விவகாரம் தேர்தல் முடிவுகளைப் பாதிக்காது என்று கருணாநிதி கூறுகிறார். அப்படியானால் தேர்தல் நேரத்தில் எதற்காக உண்ணாவிரதம் இருந்தார் என்பதையும், நிவாரணப் பொருள்களை அவசரஅவசரமாக இலங்கைக்கு அனுப்பி வைத்து விளம்பரம் செய்து கொள்வது ஏன் என்பதையும் அவர் விளக்க வேண்டும்.

போரைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சி எடுக்காத மத்திய அரசையும், அதற்குத் துணையாக இருக்கும் கருணாநிதியின் அரசையும் மக்கள் அறிவார்கள். இதன் விளைவாக இலங்கை விவகாரம் மக்களவைத் தேர்தலில் நிச்சயம் எதிரொலிக்கும் - என்றார்.

## நளினியை விடுவிக்கக் கோரி தொடர்ந்த வழக்கு தள்ளுபடி



சென்னை, மே 01

ராஜீவ்காந்திகொலை வழக்கில் தண்டனை விதிக்கப்பட்ட நளினி உட்பட 7 பேரை விடுதலை செய்யக்கோரி தாக்கல் செய்த மனுவை சென்னை உயர் நீதிமன்று நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்தது. வழக்கு தொடர்ந்தவர் ஒரு லட்சம் ரூபாவை நீதிமன்றச் செலவாக வழங்க வேண்டுமென்று நீதிபதிகள் உத்தரவிட்டுள்ளனர். ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி உட்பட 7 பேரை விடுதலை செய்ய வேண்டும் என்று திருச்சியைச் சேர்ந்த வேலுச்சாமி சென்னை உயர்நீதிமன்றில் மனுவை தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவிற்கு சி.பி.ஐ. சார்பிலும், தமிழக அரசு சார்பிலும் பதில் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 7 பேருக்கும் தண் டனையை உச்சநீதிமற்றில் உறுதி செய்த பின்னர் சென்னை உயர்நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது என்று அந்தப் பதில் மனுவில் கூறப்பட்டிருந்தது.

நீதிபதிகள் தர்மாராவ், சி.டி.செல்வம் ஆகியோர் இந்த வழக்கை விசாரணை செய்ய உகந்ததல்ல என்று கூறி தள்ளுபடி செய்து நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கினர்.

தேவையில்லாமல் இந்த வழக்கை தொடர்ந்த மனுதாரர் ரூபா ஒரு லட்சத்தை நீதிமன்றச் செலவாக வழங்க வேண்டுமென்று நீதிபதிகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

## இந்தியச் செய்திகள்

## நாடாளுமன்ற வளாகத்தில் இறங்கிய பொம்மைக் ஹெலியால் பெரும் பரபரப்பு

புதுடில்லி, மே 01

'ரிமோட் கொன்ட்ரோல்' மூலம் இயக்கப்படும் பொம்மை ஹெலிகொப்டர் ஒன்று நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் காலை தரையிறங்கியதால் டில்லியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

டில்லியில் நாடாளுமன்ற வளாக 3 கி.மீ. சுற்றளவுப் பகுதியில் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், ரிமோட் கொன்ட்ரோல் மூலம் இயக்கப்படும் பொம்மைக் ஹெலிகொப்டர் ஒன்று நாடாளு மன்ற கட்டடத்தின் மேல் நேற்றுமுன்தினம் காலை 11 மணிக்கு பறந்தது. தால்கதோரா விளையாட்டு அரங்கம் இருக்கும் திசையில் இருந்து அந்த ஒரு அடி நீள பொம்மைக் ஹெலிகொப்டர் பறந்து வந்தது. பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மத்திய பொலிஸார் இதைப் பார்த்து அதிர்ச்சியடைந்தனர்.

அந்த ஹெலிகொப்டர் நாடாளுமன்ற கட்டட வளாகத்தில் தரை இறங்கியது. உடனடியாக அதிரடிப்படையினரும், வெடிகுண்டு நிபுணர்களும் வந்தனர். சோதனையில் அந்த குட்டி ஹெலிகொப்டரில் குழந்தைகள் பயன்படுத்தும் பொம்மைகளோடு நவீன வசதிகள் இருந்தமை தெரிந்தது. இது தீவிரவாதிகளின் கைவரிசையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

நாடாளுமன்றக் கட்டடத்துக்கு தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் உள்ள நிலையில் ஒத்திகை பார்ப்பதற்காக இப்படி செய்தார்களா என்பது பற்றி விசாரணை நடக்கிறது. இந்தச் சம்பவம் டில்லியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

## தமிழகம் வழியாக புலிகள் ஊடுருவல்? உஷார் நிலையில் இந்தியக் கடற்படை!

புதுடில்லி, மே 01

தமிழகக் கடற்கரைப் பகுதி வழியாக விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்க இந்தியக் கடற்படை, கடலோரக் காவல்படை என்பன உஷார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று இராணுவத் துணைத் தளபதி நோபல் தம்புராஜ் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இலங்கை இராணுவம் நடத்திவரும் தீவிர தாக்குதல் காரணமாக மிகக்குறைந்த பரப்புக்குள் விடுதலைப் புலிகள் ஒடுக்கப்பட்டுள்ளனர். எனவே, அவர்கள் அங்கிருந்து தப்பி தெற்குக் கடற்கரை வழியாக இந்தியாவுக்குள் ஊடுருவ வாய்ப்புள்ளது.

ஆயினும் அப்படி ஊடுருவும் முயற்சியில் இதுவரை புலிகள் இறங்கவில்லை. எனினும் முன்னெச்சரிக்கை அடிப்படையில் விடுதலைப் புலிகள் ஊடுருவுவதைத் தடுக்கும் நோக்கத்தில் போதிய எண்ணிக்கையில் கரையோரத்தில் கடற்படை, கடலோர காவல் படையை நிறுத்தியுள்ளோம் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பை ஜே.வி.பியிடம் ஒப்படைக்குக!

## அரசிடம் அக்கட்சி பகிரங்க வேண்டுகோள்

கொழும்பு,மே 01

வவுனியா அகதிமுகாம்களில் உள்ள அகதிகளைப் பராமரிக்கும் பொறுப்பை தம்மிடம் ஒப்படைக்குமாறு ஜே.வி.பி. கட்சியினர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அகதிகளைப் பராமரிப்பதற்கான திறமையும், வளமும் தம்மிடம் நிறையவுள்ளன என்று அக்கட்சியின் நாடாளுமன்றத் தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் அக்கட்சி நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வவுனியா அகதிமுகாம்களில் தங்கியுள்ள அகதிகளின் வெளிக்காயங்களுக்கு மருந்து போட்டுவிடலாம். ஆனால், உள் காயத்திற்கு மருந்து போடுவதென்றால் அந்த மக்கள் நல்லமுறையில் நடத்தப்படல் வேண்டும்.

அவர்களின் அத்தியாவசியத் தேவைகள் அனைத்தும் சரியான முறையில் நிறைவேற்றப்படல் வேண்டும். ஆனால், அவ்வாறு நிறைவேற்றப்படுவதாகத் தெரியவில்லை. அரசு அந்த மக்களை தனது அரசியல் இலாபத்திற்காகவே பயன்படுத்துகிறது.

எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றிபெறுவதற்காக அரசு இந்த அப்பாவி அகதிகளின் வாழ்க்கையில் விளையாடுகின்றது. இந்த மாதிரியான அரசியல் லாபம் கொண்டதான விளையாட்டை அரசு கைவிட வேண்டும்.

அந்த மக்களைப் பராமரிப்பதற்கான முழுப் பொறுப்பையும் அரசு எம்மிடம் ஒப்படைக்க வேண்டும். அதற்கான திறமையும் வளமும் எம்மிடமுண்டு.

செந்தாரகை நிவாரண இயக்கம் ஒன்று எம்மிடம் உண்டு. இந்த அமைப்பு இப்போது அநுராதபுரத்தை மையமாகக் கொண்டு வவுனியா அகதிகளுக்காக நாடு முழுவதிலும் பொருள்களைத் திரட்டி வருகிறது.

எமது இந்த அமைப்பில் வைத்தியர்கள் உட்படப் பலர் உள்ளனர். இது அதிக மனித வளத்தைக் கொண்டது. அந்த அகதிகள் அனைவரையும் பராமரிப்பதற்கான முழு ஆற்றலும் எம்மிடம் உண்டு.

ஆகவே,அந்த அகதிகளின் பராமரிப்பை அரசு எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் - என்றார். (அ-சி)

# 24 நாள்கள் தொடர்ந்த உண்ணாவிரதத்தை தற்காலிகமாகக் கைவிட்டார் பரமேஸ்வரன்

லண்டன், மே 1

பிரிட்டிஷ் நாடாளுமன்றம் முன்னால் கடந்த 24 நாள்களாக உண்ணாவிரதம் மேற்




கொண்டு வந்த பரமேஸ்வரன் , பிரிட்டிஷ் அரசு வழங்கிய உறுதிமொழியை அடுத்து போராட்டத்தை கைவிட்டார்.

பிரிட்டிஷ் நாடாளுமன்ற உறுப்பினர் சைமன் ஹக்ஸ் பழச்சாறு வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

பிரித்தானியா அரசு தனக்கு அளித்த வாக்குறுதியின் அடிப்படையில் தான் தற்காலிகமாக உண்ணாநிலைப் போராட்டத்தை நிறுத்தியுள்ளதாகவும் அந்த வாக்குறுதி நிறைவேற்றப்படாத நிலையில் தன்னுடைய போராட்டம் தொடரும் எனவும் அவர் தெரிவித்தார். இன்று மதியம் 12 மணியளவில் ஊடகங்களுக்கு உரை வழங்கும் போது பரமேஸ்வரன் இதனை அறிவித்துள்ளார்.

பரமேஸ்வரனின் உடல் நிலை மிகவும் தளர்ந்தநிலையில் அவரை பிரித்தானிய அவசர சிகிச்சை பிரிவினர் மருத்துவமனைக்கு அழைத்து சென்றுள்ளனர்.

அதன் பின் நாடாளுமன்றத்தில் அவர் சில சந்திப்புகளை தொடர்வார் எனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

பரமேஸ்வரனின் 24 நாள் உண்ணாநிலைப் போராட்டம் தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டு மாணவர்களால் சுழற்சி முறையிலான உண்ணாநிலை போராட்டம் தொடர்கின்றது

பரமேஸ்வரனின் உண்ணாநிலை இடை நிறுத்தப்பட்டாலும் தங்களுடைய போராட்டம் மக்களின் ஆதரவுடன் தொடரும் என மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

அத்துடன் [illegible] முறையிலான உண்ணாநிலைப் [illegible]ாட்டம் தமிழ் மக்களால் பரமேஸ்வரனி[illegible]ாரத்தில் தொடரும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதே வேளை பரமேஸ்வரனின் 5 அம்ச கோரிக்கையை முன்வைத்து ஸ்கொட்லாண்டின் எடின்பறோ நகரத்தில் மக்களால் போராட்டம் நடத்தப்படுகின்றது. (1)

# இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஐ.தே.கட்சி எம்.பி. லக்ஷ்மன் கிரியெல்லவே இவ்வாறு கேள்வி எழுப்பினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

ஒருசில நாள்களாக சர்வதேசத்தின் மீது இலங்கை அரசு கடுமையாகப் பாய்ந்துகொண்டிருக்கின்றது. சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளுக்கெதிராக கொழும்பில் சுவரொட்டிகள் ஒட்டப்படுகின்றன.

**தேசியப் பிரச்சினை சர்வதேச மயமாகிவிட்டது**

அரசின் அனுசரணையுடன்தான் இது செயற்படுகின்றது. இது அரசின் வெளிநாட்டுக் கொள்கையில் ஒன்றாக இருக்கலாம். இலங்கை விடயம் தொடர்பாக எந்த நாடும் கருத்துத் தெரிவிக்க முடியாது. அப்படித் தெரிவித்தால் அந்நாடு துரோகி நாடாகிவிடுகிறது.

எமது தேசியப் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்தியதால்தான் சர்வதேச நாடுகள் இதில் தலையிடுகின்றன. இப் பிரச்சினையை சர்வதேசமயப்படுத்தியது மஹிந்த ராஜபக்ஷதான். எமது பிரச்சினையை எமது நாட்டு மக்களான தமிழ் மக்களுடன் பேசித் தீர்ப்போம் என்று எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறினார். அதை மஹிந்த ராஜபக்ஷ கேட்காது அதை சர்வதேசத்திற்குக் கொண்டுசென்றார்.

**வெளிநாடுகளிடம் நிதி உதவி கேட்க முடியுமென்றால் அவர்களது கருத்தை ஏன் செவிமடுக்க முடியாது?**

இப்போது சர்வதேச நாடுகள் எமது பிரச்சினை தொடர்பில் கருத்துத் தெரிவித்தால் அந்நாடுகள் மீது இலங்கை அரசு பாய்கிறது. அந்நாடுகளிடம் இலங்கை அரசால் நிதியுதவி கேட்க முடியும் என்றால் ஏன் அந்நாடுகள் தெரிவிக்கும் கருத்து களை இலங்கை அரசால் செவிமடுக்கமுடியாது?

சர்வதேச நாடுகளின் கருத்துகளுக்கு இராஜதந்திர அணுகுமுறைகள் மூலம்தான் பதிலளிக்க வேண்டும். வீதிகளில் சுவரொட்டிகளை ஒட்டி அந்நாடுகளை விமர்சிப்பது சரியில்லை. யுத்தம் தொடங்கப்பட்டதுமுதல் இப்போதுவரை இலங்கையில் ஜனநாயகம் அழிந்துகொண்டு வருகிறது. இப்போது யுத்தம் முடிவுக்கு வரும் சந்தர்ப்பத்தில் இங்கு ஜனநாயகத்தை நிலைநாட்ட சர்வதேச நாடுகள் உதவவேண்டும். அதற்கான வேண்டுகோளை நாம் விடுக்கின்றோம் - என்றார்.

# இலங்கை விவகாரம் ஐ.நாவில்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பி.பி.ஸிக்கு அளித்துள்ள பேட்டியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் ஜனநாயக உறுப்பு நாடென்ற வகையில் இலங்கை தனக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

சர்வதேச ரீதியில் தமிழ் மக்கள் மேற்கொள்ளும் போராட்டங்களை நியாயப்படுத்தியுள்ள மில்லி பாண்ட், தமிழ் மக்கள் சந்தித்துள்ள அவலங்களால் பயங்கரவாதம் இன்னும் 25 வருடங்களுக்கு தொடரலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்குத் தெளிவான அரசியல் உரிமைகள் வழங் கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அவர், இது குறித்து மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

**பாதுகாப்பு வலயம் பாதுகாப்பானதல்ல**

இலங்கையின் பாதுகாப்பு வலயமென அழைக்கப்படும் பகுதி பாதுகாப்பானதேயல்ல. அனைத்து மோதல்களும் அங்கேயே இடம்பெறுகின்றன.

இலங்கையின் பாதுகாப்பு அமைச்சர் இனிமேல் கடும் ஷெல் தாக்குதல் இருக்கவேயிருக்காது என்று உறுதி செய்தார். எனினும், அதனை நடைமுறைப் படுத்த வேண்டும்.

எனினும், ஐரோப்பிய ஒன்றியமும், ஜி - 8 நாடுகளும் மோதலை நிறத்துமாறு வேண்டுகோள் விடுக்கின்றன.

தற்போது விடுதலைப் புலிகளால் பொதுமக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். பயங்கரவாத அமைப்பு, அவர்கள் பாதுகாப்பு வலயத்திலிருந்து வெளியேறுவதை தடுக்கின்றது.

எனினும், அரசிற்கும் பொறுப்புணர்வுள்ளது. ஐக்கிய நாடுகளின் ஜனநாயக உறுப்பினர் என்ற வகையில் அது செயற்படவேண்டும். சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை அது கடைப்பிடிக்கவேண்டும்.

மக்கள் குறித்தே கவனம் செலுத்தி வருகின்றோம்

இந்த உள்நாட்டு யுத்தம் கடந்த 25 வருடங்களில் 80 ஆயிரம் மக்களின் உயிர்களைப் பலியெடுத்துள்ளது.

நாங்கள் பாதுகாப்பு வலயத்தில் உணவு, குடிதண்ணீர், ஏன் பாதுகாப்புக் கூட இல்லாத மக்கள் குறித்தே தெளிவாக கவனம் செலுத்துகிறோம்.

நாட்டின் வட கிழக்கு பகுதிகளுக்கு ஊடகங்கள் அனுமதிக்கப்படுவதில்லை. இதுவும் கவலைக்குரிய விடயமாகும்.

பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகியன இந்த விடயம் குறித்து ஐக்கிய நாடுகள் சபையில் ஆராயவுள்ளன.

**பிராந்திய ரீதியில் தாக்கங்கள் ஏற்படுத்தும்**

எனினும், இது பாதுகாப்புச் சபைக்குரிய விடயம். இது பரந்துபட்ட பிராந்திய ரீதியிலான தாக்கங்களை ஏற்படுத்தக்கூடிய விடயம்.

இலங்கையில் யுத்தக் குற்றங்கள் இழைக்கப்படுகின்றனவா என்பது உண்மையில் தெரியாது.

எனினும், விடுதலைப் புலிகள் பொதுமக்களை துஷ்பிரயோகம் செய்தமை குறித்து சந்தேகமில்லை. அவர்கள் பொதுமக்களை வெளியேறாமல் தடுக்கின்றனர்.

அதேவேளை, நாங்கள் மோதல் நடைபெறும் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் கடும் ஷெல் தாக்குதல் குறித்து கவலை கொண்டுள்ளோம்.

உலகம் முழுவதிலும் உள்ள மக்கள் இந்த நிலை குறித்து மிகவும் கவலையடைகிறார்கள்.

ஒரு இலட்சத்து இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையில் பிரிட்டன், பிரான்ஸ் போன்ற நாடுகள் சர்வதேச நாடுகளில் கவலைகளைத் தெரிவிப்பதுடன், அந்த நாடுகளில் வாழும் தமிழர்கள் வீதிகளில் அமைதி வழியில் போராட்டங்களை மேற்கொள்வதும் சரியானது.

விடுதலைப் புலிகள் பொதுமக்களை விடுவிக்கவேண்டும் என நாங்கள் நியாயமான வேண்டுகோளை விடுக்கிறோம்.

இது ஒரு உள்நாட்டு யுத்தமென்பதையும் பயங்கரவாத அமைப்புகள் குண்டுத் தாக்குதல் மேற்கொண்டுள்ளமையையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

தமிழ் மக்களின் உண்மையான குரலென்பது கௌரவமான உரிமை மற்றும் ஒழுங்கான அங்கீகாரத்திற்காக அமைதி வழியில் செயற்படுவதாகும்.

இந்த அரசியல் நெருக்கடி பிரதிநிதித்துவம் மற்றும் அங்கீகாரம் தொடர்பானது. இதற்கு நிச்சயமாகத் தீர்வு காணவேண்டும்.

விடுதலைப் புலிகள் வன்முறைகளை கைவிடவேண்டுமென்றே நாங்கள் தொடர்ச்சியாக சொல்லி வருகின்றோம். ஏனெனில், ஜனநாயக நாட்டில் அரசியல் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு வன்முறை ஒரு வழிமுறையல்ல. தமது தேவைகள் அங்கீகரிக்கப்பட வேண்டுமென்ற தமிழ் மக்களின் அபிலாஷைகள் உரிய முறையில் அங்கீகரிக்கப்படவேண்டுமென சர்வதேச சமூகம் விரும்புகின்றது. இதனை ஐக்கிய இலங்கைக்குள் நிறைவேற்றலாம். எனினும், இது தெளிவான அரசியல் உரிமைகளை அடிப்படையாகக் கொண்டதாக அமையவேண்டும். (அ-சி)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி அப்புக்குட்டி பவளம்

கலைமகள் வீதி, இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அப்புக்குட்டி பவளம் (28.04.2009) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அப்புக்குட்டியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரன் - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மருமகளும் இரத்தினம் (இத்தாலி), அம்பிகாபதி (லண்டன்), தேவராஜா, நேசமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சற்குணதாஸ், ஜெயதாஸ் மற்றும் குகதாஸ் (இத்தாலி), மோகனா (சுவிஸ்), மோகனதாஸ் (லண்டன்), தர்ஷனா ஆகியோரின் அன்புத் தாயாரும் ராஜ்குமார் (சுவிஸ்), இன்பலோஜினி (இத்தாலி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஜோதிகா (இத்தாலி), ஆகாஷ் (இத்தாலி), மீனுஜா (சுவிஸ்), மிதுலன் (சுவிஸ்),மிதுனா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.05.2009) சனிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வல்வை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.

தகவல்: க.அப்புக்குட்டி
(கணவர்).

### திருமதி முருகேசு செல்வலட்சுமி

கொல்லங் கலட்டியைப் பிறப்பிடமாகவும் கைதடி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி முருகேசு செல்வலட்சுமி நேற்று (30.04.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் தம்பு - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்ற முருகேசுவின் அன்பு மனைவியும், சத்தீஸ்வரன், காலஞ்சென்ற சத்தீஸ்வரி மற்றும் சரோஜாமலர், சாந்தபவானி, சாந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தாயாரும், கனகரத்தினம் (கதிர்வேலன் அரிசி ஆலை, கைதடி), குகனேசன், மாலினி ஆகியோரின் அன்பு மாமியாரும், கம்சிகா, சயந்தன், கதிர்ச்செல்வன், செல்வக்கதிர், எழில்வேந்தன், சுகன்யா, காலஞ்சென்ற யசிந்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், செல்வராசா, அன்னலட்சுமி ஆகியோரின் சகோதரியும் நாகமுத்து, இலகுநாதர், பவானி, அமரர் சங்கரப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கைதடி ஊத்தல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்: சதீஸ்வரன்
(மகன்-உத்தியோகத்தர்,
கைதடி முதியோர் இல்லம்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பில் பாடசாலைகள் செயலிழப்பு; 2 ஆவது நாளாகவும் பெற்றோர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மே, 01

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் நேற்று பாதிப்படைந்தன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் பாடசாலை மாணவர்கள் மூவர் கடத்திச் செல்லப்பட்டமையை அடுத்து நேற்று அங்குள்ள பாடசாலைகளின் அனைத்து மாணவர்களும் பாடசாலைக்கு சமுக மளிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த பகுதியிலுள்ள ஆசிரியர்கள் மாத்திரமே பாடசாலைகளுக்கு சமுகமளித்தனர்.

இதேவேளை - மாணவர்கள் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக நேற்றும் பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த இரண்டு நாள்களில் 8 வயதுடைய சதீஸ்குமார் தினுசிகா, 15 வயதுடைய வள்ளுவன் மதிசுதன், 12 வயதுடைய ஏரம்பமூர்த்தி ஜனார்த்தனன் ஆகியோரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

இவ்வாறான கடத்தல் சம்பவங்கள் பெற்றோர் - மாணவர்கள் மத்தியில் அச்ச உணர்வை ஏற்படுத்தியுள்ளன.

இக்கொடூர செயல்களை மேற்கொண்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி நேற்றுமுன்தினம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களும் பெற்றோரும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அ-சி)

# படகு கவிழ்ந்து 9 பேர் மரணம்? 10 பேர் ஆந்திராவில் மீட்பு

சென்னை, மே 1

முல்லைத்தீவிலில் இருந்து தமிழகம் நோக்கி சென்று கொண்டிருந்த படகு ஒன்று நேற்று முன்தினம் இரவு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

இரு படகுகளில் பத்து நாள்களுக்கு முன்னர் புறப்பட்ட 19 பேர் திசைமாறிச் சென்று கடும் காற்றுக்குள் சிக்கினர் என்றும் அதில் ஒரு படகு கவிழ்ந்ததில் பயணம் செய்த 9 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் தப்பிவந்தவர்கள் தெரிவித்தனர்.

ஆந்திர மாநில காக்கிநாடாவில் உள்ள கடலோரக் காவல் படையினரால் ஒரு படகில் உயிருக்கு போராடிக்கொண்டிருந்த 10 பேர் மீட்கப்பட்டுள்ளனர்.

சிவராஜ் ஜெகதீஸ்வரன், ஒபரக், ஜேசுதாசன், இந்திரகுமார், அமீர்தாஸ், நிரஞ்சன், கமலாதேவி, பாத்திமா, பிரசாம்பர், சைதா ஆகிய 10 பேரும் கொத்தமல்லி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (1)

## உலக ராஜதந்திரிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், இதில் ஆச்சரியப்பட வேண்டிய விடயம் என்ன வென்றால் சர்வதேச இராஜதந்திரிகள் பலர் இவற்றில் எதனையும் தெரியாதவர்களாகவே இருக்கின்றார்கள். இந்தத் தூரநோக்கற்ற தன்மை சர்வதேச மட்டத்தில் துக்ககரமான- விசனகரமான - சூழ்நிலையைத் தோற்றுவிக்கும் என்று எச்சரிக்கிறேன்.

போர் நிறுத்தத்துக்குச் செல்ல நேரமில்லை

போர் நிறுத்தம் ஒன்றுக்குச் செல்வதற்கு எமக்கு நேரம் இல்லை. இப்போது நாம் அதனை மேற்கொள்ளமாட் டோம். எஞ்சியுள்ள ஐந்து அல்லது ஆறு நாள்களில் ஆயு தங்களைக் கீழே வைத்துவிட்டு ஆயுதப் படையினரிடம் சரண் அடைவதற்கு விடுதலைப் புலிகளுக்கு நாம் சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம். கடவுளின் பெயரிலேனும் தாம் பிடித்துவைத்துள்ள பொதுமக்களை விடுவிக்குமாறு அவர்களை நான் கேட்கின்றேன். விடுதலைப் புலிகளுக்கு தங்களது உயிர்கள் துச்சமாக இருக்கலாம். ஆனால் பொதுமக்களின் உயிரை துச்சமாக மதிக்க முடியாது.

எங்களுடைய படையினர் புதுமாத்தளனில் குழந்தை களுடன் வந்த தாய்மார்களை எவ்வாறு காப்பாற்றினார்கள் என்று பார்த்திருக்க வேண்டும். வயதானவர்களை எவ்வாறு தோளில் சுமந்து வந்தார்கள் என்பதனைப் பார்த்திருக்க வேண்டும். இவற்றைப் பார்த்த பின்னரும் சில சர்வதேச சக்திகள் எங்களைச் குற்றஞ்சாட்டி எமது பக்கம் தமது விரல்களை நீட்டுகிறார்கள். ஒரு தந்தையை அவரது மகன் எவ்வாறு தூக்கிச் செல் வாரோ அதோபோன்று படையினர் தம்மை பாதுகாப்பாக கொண்டுபோய்ச் சேர்த்தாக தயா மாஸ்ரர் சொல்கிறார். தங்களை பயங்கரவாதத்தில் இருந்து மீட்டதற்காக மக்களில் பலர் எங்களுடைய படையினரை முழந்தாளிட்டு வணங்கினார்கள் .

இவற்றை எல்லாம் உலகம் பார்க்க வேண்டும்; பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டும். அதனாலேயே நாம் இதனை ஒரு மனிதாபிமான நடவடிக்கை என்று கூறுகின்றோம். ஏனைய நாடுகளில் இவ்வாறு போர் நடத்தப்படுவதில்லை.

ஈராக் எவ்வாறு குண்டுவீச்சுக்குள்ளானது என்பதை நாம் பார்த்தோம். ஆப்கானிஸ்தானில் இடம்பெற்ற குண்டுவீச்சையும் நாம் பார்த்தோம். எமக்குப் போதிப்பதற்காக வந்தவர்கள் ஆப்கானிஸ்தானில் எவ்வாறு குண்டுவீச்சு இடம்பெற்றது என்பதைப் பார்க்க வேண்டும் மற்றவர்கள் மீது குற்றச்சாட்டைச் சுமத்துவதற்கு முன்னர் நீங்கள் என்ன செய்தீர்கள் என்பதைத் தெரிந்து கொள்ளும் பலம் இருக்க வேண்டும் - என்றார்.

(அ)

# இலங்கைக்கு கடன் வழங்குவதை தாமதப்படுத்த நாணய நிதியத்திடம் கோருகின்றது அமெரிக்கா!

## மனிதாபிமானத்துக்கு முன்னுரிமை அளிக்கத் தவறியதால்

வாஷிங்ரன், மே 1

சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான கடனுதவியை வழங்குவதைத் தாமதிக்க வேண்டுமென அமெரிக்கா கேட்டுள்ளது.

இலங்கை அரசு மோதலில் சிக்கியுள்ள மக்கள் தொடர்பாகக் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அழுத்தத்தைக் கொடுப்பதற்காகவே அமெரிக்கா இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஒபாமா நிர்வாகம் கடந்த வாரம் சர்வதேச நாணய நிதியத்தின் ஏனைய உறுப்பு நாடுகளுக்கு இது குறித்து அறிவித்துள்ளது.

''இலங்கை அரசு மனிதாபிமான நெருக்கடியை முன்னுரிமைக்குரிய விடயமாகக் கையாளத் தவறியுள்ளது. எம்மைப் பொறுத்தவரை அதுவே பிரச்சினைக்குரிய விடயம்'' எனக் குறிப்பிட்டுள்ள அமெரிக்க அதிகாரிகள், சர்வதேச நாணய நிதியத்தின் கடனைத் தாமதிப்பதன் மூலம் அவர்கள் முன்னுரிமை கொடுக்கவேண்டிய விடயங்களைச் சரிசெய்வதை உறுதிசெய்ய விரும்புவதாகத் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு அரசு, மனிதாபிமான விடயங்களுக்குத் தீர்வு கண்டால், அல்லது கடனைத் தடுப்பது எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என முடிவு செய்தால் வாஷிங்ரன் அதற்கு கடனுதவி வழங்க ஆதரவளிக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசைத் தொடர்ச்சியாகத் தண்டிக்கும் நோக்கம் எதுவுமில்லை. இலங்கைக்கு கடனுதவி கிடைக்கலாம். எனினும் தற்போதைக்கு அதற்கு சாத்தியமில்லை என்றும் அமெரிக்க அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ-சி)

## அகாஷி வருகிறார் இன்று

இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி மூன்று நாள் பயணத்தினை மேற்கொண்டு இன்று கொழும்பு வருகிறார்.

அகாஷி, அரச தலைவர் மகிந்த ராஜபக்ச உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள் அரச அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதுடன், வவுனியாவுக்குச் சென்று இடம்பெயர்ந்த மக்களின் நிலைமைகளையும் பார்வையிடுவார்.

## நாம் ஒரு போதும் போர் நிறுத்தம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவனிப்பதற்கான அனுமதியை வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதற்குப் பதிலளித்த கோத்தபாய, விடுதலைப் புலிகள் அமைப்பை முழுமையாக அழித்து அதன் தலைவர்களை உயிருடனோ அல்லது சடலங்களாகவோ கைப்பற்றும் வரையில் போரை அரசு நிறுத்தப் போவதில்லை.

போர்ப் பகுதியிலிருந்து பிரபாகரனையும், புலிகளின் மற்றைய உயர் தலைவர்களையும் பாதுகாத்து வெளியே கொண்டுவருவதற்காகத்தான் மனிதாபிமான அக்கறைகளை சிலர் வெளிப்படுத்துகின்றார்கள். போர் நிறுத்தம் விடுதலைப் புலிகள் மீண்டும் ஒன்று சேர்வதற்கும் பலம் பெறுவதற்குமே வழிவகுக்கும்.

போரை நிறுத்தக் கூடியவர் ஜனாதிபதி மட்டுமே. இந்தப் போரை நிறுத்தக்கூடிய ஒருவர் இருக்கின்றார் என்றால், அது இலங்கையின் ஜனாதிபதி மட்டும்தான். பிரபாகரனையும், புலிகளின் ஏனைய தலைவர்களையும் கைது செய்யுமாறு அல்லது அழித்துவிடுமாறு இராணுவத்திற்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது

ஜனவரி மாதத்திற்குப் பின்னர் இரண்டு லட்சம் மக்களை விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து படையினர் மீட்டுள்ளனர். இதற்காக படையினர் ஒருதுப்பாக்கிச் சூட்டைக்கூட நடத்தவில்லை. ஏனையவர்களும் விரைவில் மீட்கப்படுவார்கள் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அமைச்சர் மில்லி பாண்ட், இராணுத்தினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அது பற்றிய தகவல்கள் கிடைத்திருக்கின்றன என்றார்.

இதற்குப் பதிலளித்த கோத்தபாய, விடுதலைப் புலிகள் மேற்கொண்டுவரும் பொய்ப் பிரசாரத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடாது என தனது குரலை உயர்த்தி கருத்துத் தெரிவித்தார். அத்துடன், பி.பி.ஸி. கூட விடுதலைப் புலிகளின் பிரசாரங்களை அதனை உறுதிப்படுத்தாமல் அப்படியே பயன்படுத்துகின்றது எனவும் குற்றஞ்சாட்டினார்.

இதற்குப் பதிலளித்த மில்லி பாண்ட், பி.பி.ஸியின் அறிக்கைகளை அடிப்படையாக வைத்து தான் இதனைத் தெரிவிக்கவில்லை எனக் குறிப்பட்டதுடன், விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பாதுகாப்பு வலயப் பகுதிகளிலிருந்து இது தொடர்பாக நம்பகமான தகவல்கள் தமக்குக் கிடைத்திருக்கின்றன எனவும் கூறினார்.

இதனால் ஆத்திரமடைந்த கோத்தபாய, ''விடுதலைப் புலிகளின் இறுக்கமான பிடியிலுள்ள பகுதியிலிருந்து நம்பகமான தகவல்கள் எதுவும் வரும் என விடுதலைப் புலிகள் அமைப்பைத் தெரிந்த எவரும் நம்பமாட்டார்கள்'' என கடுமையான தொனியில் தெரிவித்தார்.

அத்துடன், பாதுகாப்பு வலயப் பகுதியிலிருந்து பரப்பப்படும் செய்திகள் அனைத்தும் சர்வதேச சமூகத்தையும், மேற்குலக நாடுகளின் ஊடகங்களின் கவனத்தையும் ஈர்ப்பதற்காக விடுதலைப் புலிகளால் புனையப்படுபவை எனவும் கோத்தபாய ராஜபக்ஷ குற்றஞ்சாட்டினார்.

''ஒரு பயங்கரவாத அமைப்பு சொல்வதை நம்புவதா அல்லது ஓர் அரசின் பொறுப்புவாய்ந்த அதிகாரி ஒருவர் சொல்வதை நம்புவதா என்பதை பிரித்தானிய தூதுக்குழுவினரே தீர்மானிக்க வேண்டும்'' எனவும் குறிப்பிட்டார்.

**பிரெஞ்சு அமைச்சருடனான சந்திப்பு**

பிரித்தானிய தூதுக்குழுவினருடனான சந்திப்பையடுத்து, பிரான்ஸ் வெளிவிவகார அமைச்சர் பேர்னார்ட் கௌச்னரை அதே இடத்தில் சந்தித்து பாதுகாப்புச் செயலாளர் பேச்சுகளை நடத்தினார். மில்லி பாண்ட்டின் அணுகுமுறையைவிட கௌச்னரின் அணுகுமுறை அதிகளவுக்கு இராஜதந்திரமானதா இருந்தது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது**

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் பொதுமக்கள் வசிக்கும் பகுதிக்கு ஐ.நா. செல்வதற்கான அனுமதியை அரசு வழங்கவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார். இதற்குப் பதிலளித்த கோத்தபாய, அந்தப் பகுதியில் யாருக்குமே பாதுகாப்பு இல்லை. யாருடைய பாதுகாப்பையும் அரசினால் உறுதிப்படுத்த முடியாது எனத் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த பிரான்ஸின் வெளிவிவகார அமைச்சர், அந்தப் பகுதிக்குச் செல்வதற்குத் தான் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார். அங்கு செல்வதிலுள்ள ஆபத்தை எதிர்கொண்டு அங்கு செல்வதற்கு நான் விரும்புகிறேன் என்றும் அவர் தெரிவித்தார்.

அதற்கு சிரித்துக்கொண்டே பதிலளித்த கோத்தபாய ராஜபக்ஷ, விடுதலைப் புலிகள் அமைப்பு மிகவும் விரக்தியடைந்த நிலையில் இருக்கின்றது. இந்த நிலையில் அவரையும், (பிரான்ஸ் அமைச்சரையும்) விடுதலைப் புலிகள் பணயக் கைதிகளாகப் பிடித்துவிடலாம் என எச்சரித்தார். ''அதனையிட்டுக்கூட நான் கவலைப்படவில்லை'' என இதற்குப் பதிலளித்த பிரான்ஸ் அமைச்சர் குறிப்பிட்டார்.

''விடுதலைப் புலிகள் அமைப்பு உங்களுக்கு என்ன செய்யப் போகின்றது என்பது என்னுடைய பிரச்சினை அல்ல'' எனச் சிரித்துக்கொண்டே பிரான்ஸ் அமைச்சரிடம் தெரிவித்த பாதுகாப்புச் செயலாளர், அவ்வாறு நடைபெற்றால் பிரபாகரனை எம்மால் திட்டமிட்டவாறு கைது செய்ய முடியாமல் போய்விடும். அதுதான் எமது பிரச்சினை'' எனக் குறிப்பிட்டார். (அ-சி)


விக்னா கல்வி நிலையம்
நகைமாளிகை, 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
PAPER CLASS
தமிழ்
திரு.குழந்தை
ஆரம்பம்
05.05.2009
9மணி

விக்னா கல்வி நிலையம்
நகைமாளிகை, 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2011
கலைப்பிரிவு
Tam. - திரு.குழந்தை
Eco. - திரு.B.கஜீதரன்
Log. - திரு.R.S.சந்திரன்
Hic. - திரு.பத்மராஜா
Geo. - திரு.சுரேஷ்
Hin. - திரு.N.T.தரன்
Hist. - திரு.S.S.தாஸ்
Pl.sci. - திரு.ஸ்ரீரங்கநாத்
Chri. - திரு.யூட்
Dram. - திரு.மயூரன்
(ஆரம்பம்: சனி 8மணி)
வர்த்தகப்பிரிவு
Eco - திரு.B.கஜீதரன்
Acc - திரு.P.பகீரதன்
B.st - திரு.யசோ
அனுமதிகளை காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
[ஆரம்பம்: சனி 8மணி] 02.05.2009

A/L 2011
கலை, வர்த்தகம்
ஆரம்பம்:
02.05.2009 சனி மதியம்
* தனிப்பாட அனுமதிகள் வழங்கப்படும்.
யூனிவேர்சல்
(யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகே)
O/L
DAY CLASS
ஆரம்பம்:
02.05.2009 சனி 7.30am
* சனி, ஞாயிறு தினங்களில் மாத்திரம் வகுப்புகள்

ஐடியல் அக்கடமி
நீராவியடி, யாழ்.நகர்
மின்னொளியில்
தரம் 9,10,11 மாணவர்களுக்கான
கணிதம் Paper Class
வாரத்தில் மூன்று நாள்களில்
மாலை 6.15-7.15
கணித ஆசானும் நிர்வாகியும்
V.N.பத்மநாதன்

BEACON
வெலிங்டன் சந்தி அருகில்
வர்த்தகம்
2010 A/L
பகுதி II
முயற்சியாண்மை
ஆரம்பம்: 02.05.2009
சனி: 9.00 10.00am
By: S.K. Balasabejh
தனிப்பாட அனுமதி உண்டு

விக்னா கல்வி நிலையம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
பொருளியல்
B.கஜீதரன்
2011 அலகு -01 12-1 மணி
பொருளியல் பற்றிய அறிமுகம்
2010 அலகு -03 8-9 மணி
ஆரம்பம்
02.05.2009

PHYSICS - K.Selvan
A/L 2009
காந்தப்புலமும் மின்காந்தத் தூண்டலும்
ஆரம்பம் -
02.05.2009 (Sat)
(Sat., Sun. - 12.30- 1.30 p.m.)
NEC
Clock Tower Road, Jaffna

ecom கணினிக் கற்கை நெறிகள்
ICT, GIT for O/L, A/L Students
Diploma in Information Technology
Diploma in Hardware & Networking
Diploma in Visual Programming
Diploma in Ms Office 2007
Diploma in Video Editing
Internet & Email
40% Discount
ஆரம்பம்
02.05.2009
03.05.2009
05.05.2009
BIT
Registration
Semester
2,4,6
Classes
Computer Training for Kids Workers Teachers
0778449378 0776544709
No.95 A Temple Road, Nallur, Jaffna
No.95 Thavady South, Kokuvil, Jaffna

ARTS ACADEMY
2009, 10, 11
Tamil
நாக.தமிழிந்திரன்
H.cu, Hin.
S.ஜெயக்குமார்
Log.
N.சசிகலா
Political
அசோக்
E.co.
பிரதீபன்
NALLUR ROAD, JAFFNA

DMI
ஸ்ரான்லி வீதி
அரசியல்
அசோக்
(சனி, ஞாயிறு)

| பிரிவு | நேரம் |
|---|---|
| A/L 2009 (PAPER) | 10-11 |
| A/L 2010 (இலங்கை அரசியல்) | 11-12 |
| A/L 2011 அறிமுகம் | 12-01 |

யாழ். நகரின் முன்னணி ஆசிரியர் குழுவுடன்
A/L 2011
கலை, வர்த்தகப் பிரிவு
NEC
Clock Tower Road, Jaffna
ஆரம்பம் - 02.05.2009
சனி காலை 8.00மணி

கணக்கியல்துறை ஆர்வலர்களுக்காக!
Diploma in Computerized Accounting
Quick Book, ACCPAC, MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக
புதிய பிரிவுகள் ஆரம்பம்
Week Day Batch
05/05/2009
07/05/2009
11 AM
Week End Batch
02/05/2009
03/05/2009
10 AM
COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna.

கணக்கீடு
A/L: 2011 புதிய பிரிவு
ஆரம்பம்: நாளை 3pm
A/L: 2010
ஆரம்பம்: நாளை 4pm
A/L 2009
மேந்தலை
ஆரம்பம்: நாளை 5pm
A/L 2009
DAY CLASS: Paper
செவ்., வியாழன், வெள்ளி 6am
S.தவா
B.Com (Hons) (Acc.SPL)
UNIVERSAL
யாழ். இந்து மகளிர் கல்லூரி அருகில் யாழ்ப்பாணம்.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
வர்த்தகம்
O/L & Gr.10
T.நிக்சன் B.B.A (F.M.Spe)M.A.
(தனிப்பட அனுமதியும் வழங்கப்படும்)
* A/L 2011 கலை, வர்த்தக, கணிதம் புதிய பிரிவுகள்.
* O/L DAY CLASS.

சிங்கள வகுப்புகள்
★ தொழில் புரிவோருக்கும் வளர்ந்தோருக்கும் உரியது
★ அடிப்படையில் இருந்தும் அவரவர் நிலைக்கேற்பவும் இரு பிரிவுகளாகக் கற்பிக்கப்படும்.
By: E.S. பியதாச (SLTS - I)
[பயிற்றப்பட்ட சிங்களம்]
ஆரம்பம்:- 02.05.2009
சனி 12.00
★ தரம் 1, 2, 3, 4, 5 இரண்டாம் தவணை வகுப்புகள்
ஆரம்பம்:- 04.05.2009
திங்கள் 3.30pm
கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.05.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.